DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004
BRAMPTON / MISSISSAUGA 905 457 1700
MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan, Sales Representative
Ragu Thillainathan, Sales Representative
kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999
RE/MAX

26 years of publishing

www.uthayannews.ca

# UTHAYAN உதயன்

திக்கெட்டும் தமிழ் உலகில் எத்திக்கும் கதிர் வீசும் வாரச் செய்தி இதழ்

Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
Canadian Media Circulation Audit
$1.00
416-752-1524 www.uthayannews.ca
உதயம் 1419 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday June 16, 2023

PYRAMID GROUP
UTHAYAN SIVARAJAH 416.301.5555
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
PROPERTY MAX
MohanTeam.com
6888-14th Avenue Markham ON, L6B 1A6

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship;
Super visa for parents and grandparents including health insurance;
Citizenship;
Permanent resident card renewal;
More than 10 Years experience in the field of Canadian Immigration
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

TEAM SMART
REAL ESTATE PROFESSIONALS
VARATHAN ANUSHAN
THIRU GOBIRAJ
416.219.3333

## உதயன் சர்வதேச விருதுகள் வழங்கும் விழா — 2023

நமது கனடா உதயன் பத்திரிகை நிறுவனம் 17வது ஆண்டாக நடத்தும் “உதயன் சர்வதேச விருதுகள் வழங்கும் விழா-2023. எதிர்வரும் யூன் 18ம் திகதி ஸ்காபுறோவில் நடைபெறுகின்றது இரண்டு வெளிநாட்டு விருதாளர்களோடு ஐந்து கனடா வாழ் விருதாளர்களும் கௌரவிக்கப்பெறுகின்றார்கள். “இளையோர்களுக்கான அடையானம்“ விருதுகளை ஒன்றாரியோ மற்றும் கியுபெக் மாகாணங்களிலிருந்து தெரிவு செய்யப்பெற்ற இரண்டு இளம் வெற்றியாளர்கள் பெறுகின்றார்கள்.

**uthayannews@yahoo.com or www.uthayannews.ca**
**416 732 1608**

உதயன் விருது UTHAYAN AWARD Uthayan International Awards 2023

## Prime Minister Justin Trudeau spoke to Liberal Party Supporters in Ottawa

## கனடியத் தலைநகர் ஒட்டாவாவில் தனது கட்சி ஆதரவாளர்கள் மத்தியில் உரையாற்றிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ



கனடியத் தலைநகர் ஒட்டாவாவில் கடந்த திங்கட்கிழமையன்று யுத்த காட்சிசாலை மண்டபத்தில் தனது கட்சி ஆதரவாளர்கள் மத்தியில் உரையாற்றிய பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ மிகுந்த உற்சாகத்தோடு காணப்பட்டார்.

அங்கு கூடியிருந்த கட்சியின் ஆதரவாளர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் ஆகியோர் மத்தியில் அவர் உரையாற்றும் போது தமது அரசாங்கத்திற்கும் லிபரல் கட்சிக்கும் இளைய சமுதாயத்தின் ஆதரவு பெருகி வருவதாகக் குறிப்பிட்டார்.

மேற்படி வைபவத்தில் கலந்து கொள்வதற்காக ஒட்டாவா தலைநகர் சென்றிருந்த ஸ்காபுறோ லத்திகா நகை மாளிகை உரிமையாளர் சசிகுமார் -பிரியா தம்பதி மற்றும் உதயன் லோகேந்திரலிங்கம் தம்பதி ஆகியோரோடு பிரதமர் உரையாடி தனது வாழ்த்துக்களையும் நன்றியையும் தெரிவித்துக் கொண்டார்.

இங்கே காணப்படும் படங்களில் கனடாவின் பாதுகாப்பு அமைச்சர் அனிற்றா ஆனந்த் மற்றும் குடிவரவு பிரஜா உரிமைகள் அமைச்சர் **Honourable Sean Fraser, MP** மற்றும் கனடாவின் பொது சேவைகள் மற்றும் கொள்முதல் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினரும் “கனடா உதயன்“ குடும்பத்தின் நெருங்கிய நண்பியுமான **Dr. Helena Jaczek- (Minister of Public Services and Procurement)** ஆகியோர் ஸ்காபுறோ லத்திகா நகை மாளிகை உரிமையாளர் சசிகுமார் -பிரியா தம்பதி மற்றும் உதயன் லோகேந்திரலிங்கம் தம்பதி ஆகியோரோடு உரையாடி மகிழ்ந்தனர்.

Sri Nadarajasundram
Real Estate Broker
RE/MAX ACE
416-276-6866 srinada21@gmail.com

Krishna Punniyam
MORTGAGE ALLIANCE
RIGHT TEAM
MORTGAGE AGENT
Purchase & Refinance
First Mortgage
Second Mortgage
Commercial Mortgage
Equity Loan
ALL IN 1
ACCOUNTING
Personal Income Tax
Corporate Income Tax
HST Returns
Bookkeeping Service
Payroll Service
Audit preparation
Business Startup service
Mobile: 416.710.9150

RE/MAX ACE
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

Residential & Commercial Real Estate Services
என்னை அழையுங்கள் பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
Sales Representative
RE/MAX COMMUNITY

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St. East, Mississauga, ON, L5A 1W7
905-272-1222
23-8907 The Gore Rd. Brampton, ON L6P 2L1
905-794-4404
online service: www.remitbee.com

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301, 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

CANADIAN HOME APPRAISALS INC.
FOR RESIDENTIAL & COMMERCIAL
SK BALES, CRA, MVA, FRI, CRES
Bus: (416) 438-2200
Cell: (416) 801-3219
Website: www.chainc.ca
Email: skbales@hotmail.com
Ottawa Branch - Bus: (343) 698-8004
CHAI

# UTHAYAN INTERNATIONAL AWARD FESTIVAL - 2023

# உதயன் சர்வதேச விருது விழா 2023

## PRESENTED BY

VIBRANT HOSPITALITY GROUP
DEVELOPMENT MANAGEMENT
OVER 25 YEARS IN THE HOSPITALITY INDUSTRY
OUR EXPERTISE
CONSTRUCTION & DESIGN
OPERATIONS
REVENUE MANAGEMENT
SALES & MARKETING
HUMAN RESOURCES
Shankar Nallathamby, CHA
Director
416 270 4343
shankar@vhgcanada.com
vibranthospitalitygroup.com
Toll Free 1 888 674 7770 Local: 905 769 1509

ARABI
RAGEEF SUBRAMANIAM
FINDER

Latika Gold House
(647) 996 5922
www.latikagoldhouse.ca
L7-2900 Markham Road
Scarborough ON M1X 0C8

WINSMART
President:
Kamalraj Kathirkamanathan
416 821 7870

## CO-PRESENTED BY

K T GROUP
PRESIDENT & CEO
MR. KANA SELVA

Sugshe Finance Canada Inc.
Sugshi Group of Companies
Ganesan Sugumar
Tel: 416 363 2624
220 Duncan Mills Rd, Unit #83, North York, ON. M3B 3J5

SIVA & JOY REAL ESTATE TEAM
#1 HOMELIFE TEAM IN ONTARIO
KNOWLEDGE · EXPERIENCE · SUCCESS
Siva Shanmuganathan
Joy Selvanayagam
416.545.7482
HomeLife Future Realty Inc., Brokerage

BUY | INVEST | SELL
Happy Home Peace of Life
RECASH REALTOR
RAJEEV SEBARASHA
REALTOR
www.recashrealtor.com
905.226.8515 RE/MAX

CTS BUILDING SUPPLIES LTD
"providing the highest customer service"
416 840 4538
www.ctsbuildingsupplies.com
733 Progress Ave, Scarborough, On. M1H 2W7

President & C.E.O
Kula Sellathurai
Netwyn.Place

## ASSOSIATE SPONSORS

அனுபவமிக்க MORTGAGE முகவர்
For All Your Mortgage Needs
DIANA LOUIS
416.770.5533
MORTGAGE ALLIANCE

MAHAANS PICK & PRESS OIL MILL INC AND BULK FOOD STORE TEL:416-293-4010

Chapel Ridge
Vilosan Sivatharman
Funeral Director
8911 Woodbine Avenue
Markham, Ontario L3R 5G1
Telephone : (416) 993-0826
Fax : (905) 305-8128
E-mail: vilosan9@hotmail.com

Residential & Commercial Real Estate Services
எல்லை அமையுங்கள்
பாலா லோகன்
647-447-1562
Bala Logendralingam
RE/MAX

Remitbee
ONLINE MONEY TRANSFER

Splash n Shine
HAND CAR WASH
NOW OPEN

உதயன் விருது
UTHAYAN AWARD
Uthayan International Awards 2023

## JUNE 18TH 2023 Sunday, 6.00 PM

## THIS YEAR'S AWARDS ARE...

## இவ்வருடத்திற்குரிய விருதுகள்...

- UTHAYAN LETERARY AND ARTISTIC EXUBERANCE AWARD
- UTHAYAN INTER - COMMUNAL RELATIONSHIP AWARD
- UTHAYAN BUSINESS ENTREPRENEUR AWARD - ONTARIO
- UTHAYAN LEADERSHIP AWARD - ONTARIO
- UTHAYAN YOUTH ICON AWARD - ONTARIO
- UTHAYAN LIFETIME ACHIVEMENT AWARD - EUROPE
- UTHAYAN LIFETIME ACHIVEMENT AWARD - TAMIL NADU

## Scarborough Metropolitan Centre

3840 Finch Ave E, Scarborough, ON M1T 3T4 FOR TICKETS : 416 732 1608

GENERAL CONTRACTING SERVICES
SANTHA
416-200-5470

Thanjai
Restaurants | Snacks | Catering | Party Hall

WOODBINE ENTERTAINMENT
Thani Shanmuganathan

AGA BEAUTY LEARNING ACADEMY & SPA
Sasi Naren
647.716.5252
3 LOCATIONS TO SERVE YOU
A14, L5 - 2900 Markham Road, Scarborough ON M1X 0C8

கதிரோட்டம்

Canada
We acknowledge the financial support of the Government of Canada

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் — Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

# இலங்கையில் சாதாரண தரப் பரீட்சையின் நிறைவும் மாணவர்கள் மத்தியில் அரங்கேறிய குரங்குச் சேட்டைகளும்

கடந்த காலங்களைவ விட இலங்கையின் வடக்கு கிழக்குப் பகுதிகளில் தமிழ் பேசும் மாணவர்களின் கல்வி சார்ந்த நடவடிக்கைகள் மிகவும் உயர்ந்த நிலையை எட்டியுள்ளது என்பது நிதர்சனமாகத் தெரியும் விடயமாகும்.

ஆங்கில மொழி மூலம் தங்கள் சாதாரண தரம் மற்றும் உயர்தரம் ஆகிய வகுப்புக்களை வெற்றிகரமாகக் கடந்து பல்கலைக் கழகங்களில் கால் பதிக்கின்றார்கள் எமது மாணவச் செல்வங்கள்.

இவ்வாறே. விளையாட்டுத்துறைகளிலும் தமது வித்துவத்தைக் காட்டி வெற்றிகளை ஈட்டி தாங்கள் அடக்கப்பட்ட இன மக்களது பிள்ளைகளாக இருந்தாலும் “கல்வியிலும் விளையாட்டிலும் ஏன், பண்பாட்டிலும் உயர்ந்து நிற்கின்றோம்’ என்ற செய்தியை உரத்துச் சொல்லுகின்ற தாய்மார்களும் தந்தையர்களும் சொல்லும் அளவிற்கு அந்த தமிழர் தாயகத்தில் விடாமுயற்சி மாணவர்களுக்கு வெற்றிகளை ஈட்டித் தந்தவண்ணம் உள்ளது.

இவ்வாறான ஒரு தாயகச் சூழலில் தற்போது சாதாரண தரப்பரீட்சைகள் நடந்தேறும் அளவிற்கு காலம் கனிந்து வந்து கொண்டிருந்த வேளையில் பாடசாலையில் நடைபெற்று முடிந்த பரீட்சையின் அடுத்த கட்டமாக தங்கள் வாழ்வில் உயரும் படிகளில் ஏறிச் செல்ல வேண்டியவர்களில் சிலர் ‘கீழே’ இறங்கிச் செல்லும் அளவிற்கு செயலான்றில் ஈடுபட்ட செ செய்திகள் பரவிய வண்ணம் உள்ளன.

யாழ்ப்பாணத்தில் சில பாடசாலைகளின் பரீட்சை நிறைவுற்றதும் தங்கள் வயதையும் குடும்ப நிலையையும் உணர்ந்து கொள்ளாமல். புாடசாலை வளாகத்தின் உள்ளேயே சக மாணவர்களையும் ஆசிரியப் பெருந்தகைகளையும் அவமரியாதை செய்தும் பாடசாலை உடமைகளுக்கு சேதங்களை ஏற்படுத்தும் அளவிற்கு நடந்து கொண்ட விதம் அந்த பிரதேசத்தில் ‘அசிங்கம்’ அரங்கேறியது போன்ற பேசப்படுகின்றது என அங்கிருந்து கிடைத்த தகவல்கள் கூறுகின்றன. தனது இவ்வாரத்தின் கட்டுரையில் எமது உதயன் உட்பக்கத்தில் எழுதியுள்ள நிலாந்தன் குறிப்பிட்டுள்ள மாணவர்கள் தொடர்பான விடயங்கள் புலம்பெயர்ந்த நாடுகளிலும் ஒரு ‘சலசலப்பை’ தோற்றுவித்துள்ளது என்றே கூறவேண்டும். இவ்வாறான சம்பவங்களிற்காக பாடசாலை மாணவர்களை குற்றம் சாட்டுதல் தவறு என்று நிலாந்தன் எழுதியுள்ளார்.

. பரீட்சைக்குத் தோற்றிய முதிரா இளம் பிராயத்துப் பிள்ளைகளை மட்டும் குற்றம் சொல்லிக் கொண்டிருக்க முடியாது.நாட்டின் கல்வி முறைமையும் அதைப் பொருத்தமான விதத்தில் மறுசீரமைக்க முடியாத தலைவர்களும் படிப்பாளிகளும் முதற் பொறுப்பை ஏற்க வேண்டும். இரண்டாவதாக கல்வி பற்றிய சமூகத்தின் கருதுகோள்களும் அதன் விளைவாக பரீட்சைகளுக்கு கொடுக்கப்படும் அதிகரித்த அழுத்தமும் என்று பார்க்கும் பொழுது பெற்றோரும் ஆசிரியர்களும் பொறுப்புக்கூற வேண்டும்.நாட்டில் இப்பொழுது பல விடயங்களுக்கும் பொறுப்புச் சொல்ல வேண்டியவர்கள் பொறுப்புச் சொல்வதில்லை.

யார் மீதோ பொறுப்பை போடுகிறார்கள். அப்படித்தான் கதிரைகளை தூக்கி கூரையில் தொங்கவிட்ட அல்லது சகபிள்ளையின் சீருடை மீது மையைத் தெளித்த பிள்ளைகளின் மீதும் குற்றம் சுமத்தப்படுகின்றது. இவ்வாறு எமது மாணவர்கள் பக்கம் உள்ள நியாயங்களை தனது கட்டுரையில் எடுத்தியம்பி உள்ளார் நிலாந்தன் அவர்கள்.

ஆனால் ஏற்கெனவே நிர்ப்பந்தங்கள் நிறைந்த ஒரு கல்விச் சூழலில் பழகிப் போன அந்த மாணவச் செல்வங்கள் பரீட்சையின் தாங்கள் ஆறுதல் அடைய வேண்டும் என்பதற்காக அவ்வாறான குறும்புச் செயலில் அவர்கள் ஈடுபட்டிருக்கலாம் என்ற கருத்தும் ஒரு பக்கமிருந்து வெளிப்பட்டுள்ளது.

இவ்வாறான நிலையில் கொழும்பு பிராந்தியத்தில் உள்ள பாடசாலையொன்றில் இடம்பெற்ற சம்பங்கள் பாராளுமன்ற வரைக்கும் சென்றுள்ளதாகவும் அறியப்படுகின்றது.சாதாரண தரப்பரீட்சை முடிவடைந்த அன்று, பரீட்சைக் கூடமாக பயன்படுத்தப்பட்ட வகுப்பறையில் மாணவர்கள் சிலர் மின் விசிறிகள், மேசைகளை சேதப்படுத்தி நாற்காலிகளை தொங்கவிட்ட சம்பவம் சமூகத்தில் பேசுபொருளாக மாறியிருந்தது.

இந்த சம்பவம் தொடர்பில் கொட்டாஞ்சேனை மத்திய கல்லூரி மாணவர்கள் குழுவொன்று மீது குற்றஞ்சாட்டப்பட்டு, நேற்று(15) அவர்கள் பாடசாலைக்கு அழைக்கப்பட்டு அதிபராலும் பொலிஸாரால் எச்சரிக்கப்பட்டனர்.இதனையடுத்து குறித்த மாணவர்களின் செலவில் சேதமாக்கப்பட்ட வகுப்பறை மற்றும் தளபாடங்கள் திருத்தியமைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இவ்வாறான சம்பவங்கள் நடந்து கொள்ளாமல் கவனித்துக் கொள்ள ஆசிரியர்கள் தங்கள் பங்களிப்பை அதிபர்களுக்கு வழங்க வேண்டும் என்பதே எமது எண்ணமாகின்றது. ஏனெனில் எமது எதிர்காலச் செல்வங்களான மாணவ மாணவிகளின் கல்வியும் வாழ்வியலும் சமாந்தர கோடுகள் என்பதையும் நாம் உணரவேண்டும்.

TRADITIONAL CHINESE ACUPUNTRE THERAPY CENTRE

எல்லாவிதமான வலிகளுக்கும் ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை மனத்தளர்ச்சி, தலைவலி, நீரிழிவு நோய், வயிற்றுவலி, மாதவிடாய் சம்மந்தமானவையும் உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும் Mrs. K. Vasanthakumar ஐ தொடர்புகொள்ளவும்

Tel: (416) 754-4024

Member of College of Traditional Chinese Medicine Practitioners & Acupuncturists of Ontario. R.AC D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9

**Business for Sale**

Scarborough வில்
30 வருடங்களாக இயங்கிவரும்
Auto Parts Rebuilding Company
விற்பனைக்கு உண்டு.

Call:
(416) 543-8170

**Help Wanted**

Workers needed for renovation company. Must have experience in one of the following:

- Drywall Installation
- Painting
- Hardwood Installation
- Bathroom Reno
- Kitchen Reno

Call - Siva
416-706-8160

**Room for Rent**

Near 9th Line and Hwy 7 in Markham.
One bedroom with attached washroom available for rent.
Other room is rented by a male who works from home.
Electricity, Wifi, Water, and Parking included.
Rent: $1000.00

515-710-1451

**மணமகன் தேவை**

விரிவுரையாளராக Saskatchewan இல் பணியாற்றும் 33 வயதுடைய 5’8” உயரமுள்ள கத்தோலிக்க பெண்ணுக்கு பொருத்தமான மணமகனை பெற்றோர் தேடுகின்றனர்.

தொடர்புகளுக்கு
1 (306) 914 4830

# செந்தில் பாலாஜியை காவேரி மருத்துவமனைக்கு மாற்ற சென்னை உயர் நீதிமன்றம் அனுமதி

ஓமந்தூரார் மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்று வரும் அமைச்சர் செந்தில்பாலாஜியை மருத்துவ சிகிச்சைக்காக காவேரி மருத்துவமனைக்கு மாற்ற அனுமதியளித்து சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.அமலாக்கத் துறையினர் அமைச்சர் செந்தில்பாலாஜியை கைது செய்த நிலையில், நெஞ்சு வலியால் பாதிக்கப்பட்ட அவரை ஓமந்தூரார் அரசு மருத்துவமனையில் சேர்த்தனர். சென்னை முதன்மை அமர்வு நீதிபதி எஸ்.அல்லி புதன்கிழமை பிற்பகலில் மருத்துவமனைக்குச் சென்று செந்தில்பாலாஜியை சந்தித்த பின்னர், வரும் 28ம்தேதி வரை அவரை நீதிமன்றக் காவலில் வைக்க உத்தரவிட்டார்.

இதற்கிடையில், செந்தில்பாலாஜியை சட்டவிரோதக் காவலில் வைத்துள்ளதாகவும், அவரை மீட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த வேண்டும் எனக் கோரியும் அவரது மனைவி மேகலா சார்பில் உயர் நீதிமன்றத்தில் ஆட்கொணர்வு மனு தாக்கல் செய்யப்பட்டது.அந்த மனுவை அவசர வழக்காக விசாரிக்கக் கோரி, உயர் நீதிமன்ற நீதிபதிகள் எம்.சுந்தர், ஆர்.சக்திவேல் ஆகியோர் அடங்கிய அமர்வில், செந்தில்பாலாஜி தரப்பு மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ புதன்கிழமை முறையீடு செய்தார். ஆனால் நீதிபதி ஆர்.சக்திவேல் இந்த வழக்கை விசாரிக்க விரும்பவில்லை என்று தெரிவித்ததால் புதன்கிழமை மாலை இதுகுறித்து தலைமை நீதிபதி எஸ்.வி.கங்காபுர்வாலா முன்னிலையில் முறையிடப்பட்டது.

இதையடுத்து, புதன்கிழமை மாலை வேறு ஒரு அமர்வில் இந்த ஆட்கொணர்வு மனு விசாரணைக்கு வரவிருந்த நிலையில், செந்தில்பாலாஜியை நீதிமன்றக் காவலில் வைக்க உத்தரவிடப்பட்டதால், ஆட்கொணர்வு மனு விசாரணைக்கு வரவில்லை.இந்நிலையில், உயர் நீதிமன்ற நீதிபதிகள் நிஷா பானு, பரதசக்ரவர்த்தி ஆகியோர் அடங்கிய அமர்வில் இந்த வழக்கு வியாழக்கிழமை விசாரணைக்கு வந்தது. அப்போது செந்தில்பாலாஜி மனைவி தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர் என்.ஆர்.இளங்கோ, "இந்த வழக்கைப் பொறுத்தவரை, செவ்வாய்க்கிழமை முதல்



புதன்கிழமை அதிகாலை வரை அமலாக்கத் துறை அதிகாரிகள் விசாரணை செய்துள்ளனர். பின்னர், செந்தில்பாலாஜிக்கு உடல்நிலை சரியில்லை என்ற காரணத்தால், ஓமந்தூரார் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அழைத்துச் சென்றுள்ளனர்.

நீதிமன்ற காவலில் வைப்பதை நிராகரிக்கக் கோரிய எங்களது தரப்பு கோரிக்கை மறுக்கப்பட்டு. அவர் நீதிமன்ற காவலில் வைக்கப்பட்டுள்ளார்.மேலும், அவரை கைது செய்யும்போது பின்பற்றப்பட வேண்டிய நடைமுறைகள் எதுவும் பின்பற்றப்படவில்லை. எனவே, இந்த ஆட்கொணர்வு மனு விசாரணைக்கு உகந்தது. உச்ச நீதிமன்ற உத்தரவுப்படி, ரிமாண்ட சட்டவிரோதமாகவோ, இயந்திரத்தனமாகவோ இருந்தால் ஆட்கொணர்வு மனு விசாரணைக்கு உகந்தது என்று தெரிவித்துள்ளது. இந்த வழக்கைப் பொறுத்தவரை, செந்தில்பாலாஜிக்கு எந்த ஒரு நோட்டீஸும் கொடுக்கப்படவில்லை. அவருடைய கைது குறித்த விவரங்கள், குடும்பத்தினருக்கு தெரியப்படுத்தவில்லை. செந்தில்பாலாஜிக்கு கைதுக்கான காரணங்கள் குறித்து தெரிவிக்கப்படவில்லை என்பதால் இந்த மனு விசாரணைக்கு உகந்தது.

தற்போது, நீதிமன்ற காவலில் இருக்கும் செந்தில்பாலாஜி அரசு மருத்துவமனையில் சிகிச்சைப் பெற்றுவரும் நிலையில், அவருக்கு மேற்கொள்ளப்பட்ட மருத்துவப் பரிசோதனையில், இதயத்தில் மூன்று அடைப்புகள் இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. அவருக்கு உடனடியாக பைபாஸ் அறுவை சிகிச்சை மேற்கொள்ள பரிந்துரைக்கப்பட்டுள்ளது. எனவே, அவரை காவேரி மருத்துவமனைக்கு மாற்ற அனுமதிக்க வேண்டும்" என்று கோரி வாதிடப்பட்டது. அப்போது அமலாக்கத் துறை தரப்பில், "செந்தில்பாலாஜி உடல்நலம் தொடர்பாக ஏற்கெனவே இரண்டு மருத்துவ அறிக்கை கொடுக்கப்பட்டிருந்தாலும், அவரை தனியார் மருத்துவமனைக்கு மாற்ற அனுமதிக்க முடியாது. இஎஸ்ஐ மருத்துவர்களைக் கொண்டு மீண்டும் அவரை பரிசோதனை செய்து, அதன் அடிப்படையில் மாற்றுவது குறித்து பரிசீலிக்கலாம்" என்ற வாதங்கள் முன்வைக்கப்பட்டன.இதையடுத்து, இந்த வழக்கில் நீதிபதிகள் பிறப்பித்த உத்தரவில், அமைச்சர் செந்தில்பாலாஜியை, மருத்துவ சிகிச்சைக்காக ஓமந்தூரார் மருத்துவமனையில் இருந்து காவேரி மருத்துவமனைக்கு மாற்ற அனுமதியளித்து உத்தரவிட்டனர். மேலும், செந்தில்பாலாஜி மனைவி தாக்கல் செய்த ஆட்கொணர்வு மனுவுக்கு அமலாக்கத் துறை பதிலளிக்க உத்தரவிட்டனர்.மேலும், மருத்துவர்கள் பரிந்துரையை சந்தேகிக்க முடியாது. மனுதாரர் கோரிக்கைப்படி, அவரது செலவில் தனியார் மருத்துவமனையில் அவருக்கு சிகிச்சையளிக்க அனுமதி வழங்குகிறோம்.

அதுவரை அவர் நீதிமன்ற காவலிலேயே நீடிக்க வேண்டும். மேலும் அமலாக்கத் துறை விரும்பினால், அவர்கள் தரப்பு நியமிக்கும் மருத்துவக் குழுவினர் தனியார் மருத்துவமனையில் செந்தில்பாலாஜியின் உடல்நிலை குறித்து ஆய்வு செய்து பரிசோதனை செய்யலாம் என்று நீதிபதிகள் உத்தரவிட்டனர். அப்போது அமலாக்கத் துறை தரப்பில், செந்தில்பாலாஜி தற்போது நீதிமன்ற காவலில் இருப்பதால், மருத்துவ சிகிச்சையில் இருக்கும் நாட்களை நீதிமன்ற காவலில் இருந்த நாட்களாக கருதக் கூடாது என்று கோரிக்கை வைக்கப்பட்டது. இதை ஏற்றுக்கொண்ட நீதிபதிகள், நீதிமன்ற காவலில் செந்தில்பாலாஜி இருக்கும்போது, அவர் சிகிச்சைப் பெற்ற நாட்களை கணக்கில் கொள்ளக் கூடாது. சிகிச்சைக்குப் பிறகு வரும் நாட்களை நீதிமன்ற காவல் என்று கணக்கில் கொள்ள வேண்டும் என தீர்ப்பில் குறிப்பிட்டுள்ளனர்.

# திமுகவினரை சீண்டிப் பார்க்க வேண்டாம்; எங்களுக்கும் எல்லா அரசியலும் தெரியும் முதல்வர் மு.க.ஸ்டாலின் எச்சரிக்கை

திமுகவினரை சீண்டிப் பார்க்க வேண்டாம் என்றும், தங்களுக்கும் எல்லா அரசியலும் தெரியும், இது மிரட்டல் அல்ல, எச்சரிக்கை என்றும் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.அமைச்சர் செந்தில்பாலாஜி கைது தொடர்பாக தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின், தனது சமூக வலைத்தளப் பக்கங்களில் காணொளிப் பதிவு ஒன்றை வெளியிட்டுள்ளார். அதில் அவர் கூறியிருப்பதாவது, "எல்லோருக்கும் வணக்கம்! வழக்கமாக நான் 'உங்களில் ஒருவன் பதில்கள்' மூலமாக உங்கள் கேள்விகளுக்குப் பதில் சொல்லிக் கொண்டிருந்தேன். ஆனால், இப்போது இந்த வீடியோ மூலமாக இன்னொரு முக்கியமான விஷயம் பற்றிப் பேசப் போகிறேன். அமைச்சர் செந்தில்பாலாஜிக்கு அமலாக்கத்துறை மூலமாக கொடுக்கப்படுகிற அநியாயமான தொல்லைகள் எல்லாம் உங்களுக்கு நன்றாகத் தெரியும். இது அப்பட்டமான அரசியல் பழிவாங்கும் செயல் என்பதில் யாருக்கும் கொஞ்சமும் சந்தேகமில்லை!

பத்து ஆண்டுக்கு முன்னர் உள்ள பழைய புகாரை வைத்து, 18 மணி நேரம் அடைத்து வைத்து, மன அழுத்தம் கொடுத்து, மனரீதியாகவும் உடல் ரீதியாகவும் பலவீனப்படுத்தி, உயிருக்கு ஆபத்து ஏற்படும் வகையில் இதயநோயை உருவாக்கி இருக்கிறார்கள் என்றால், இதைவிட அப்பட்டமான அரசியல் பழிவாங்கல் இருக்க முடியுமா?செந்தில்பாலாஜி மேல் புகார் இருக்கும் என்றால், அது தொடர்பாக நீதிமன்றத் தீர்ப்பு இருக்கும் என்றால், அவரை அழைத்து விசாரணை நடத்துவதை நான் தவறு என்று சொல்லவில்லை. ஓடி ஒளியக் கூடிய அளவுக்கு அவர் சாதாரணமானவர் இல்லை! அவர், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர். அதுவும் 5 முறை சட்டமன்ற உறுப்பினராக இருக்கிறார். அதுவும் இரண்டாவது முறையாக அமைச்சராக இருக்கிறார். நாள்தோறும் பொதுநிகழ்ச்சிகளில் கலந்து கொள்பவர். அப்படிப்பட்டவரை, ஏதோ தீவிரவாதியைப் போல அடைத்து வைத்து விசாரிக்க என்ன அவசியம் இருக்கிறது? அமலாக்கத்துறை அதிகாரிகள் வந்த போது, முழு ஒத்துழைப்பு தந்தார்.

எந்த ஆவணங்களை எடுத்திருந்தாலும், அது தொடர்பாக விளக்கமளிக்கத் தயார் என்று சொல்லி இருந்தார். அதற்குப் பிறகும் 18 மணி நேரமாக அடைத்து வைத்துள்ளனர். யாரையும் சந்திக்க அனுமதி இல்லை. இறுதியாக அவருக்கு உடல்நலம் முழுமையாக பாதிக்கப்பட்டு இதயவலி அதிகமான பின்னர்தான், அவரை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றுள்ளனர். அதிலும் அலட்சியம் காட்டி இருந்தார்கள் என்றால், அது அவருடைய உயிருக்கே ஆபத்தாகி இருக்கும்! இப்படி ஒரு விசாரணையை மேற்கொள்ளும் அளவுக்கு அப்படி என்ன அவசரம்? அறிவிக்கப்படாத எமர்ஜென்சியில் நாடு இருக்கிறதா? அப்படித்தான் இருக்கிறது, அமலாக்கத்துறையின் நடவடிக்கை. எளிமையாகச் சொல்ல வேண்டும் என்றால், பாஜக தலைமை, அமலாக்கத்துறை மூலமாக அவர்களது அரசியலைச் செய்ய நினைக்கிறது. மக்களைச் சந்தித்து அரசியல் செய்ய பாஜக தயாராக இல்லை. பாஜகவை நம்ப மக்களும் தயாராக இல்லை. மக்களுக்கான அரசியலை செய்தால்தான் மக்கள் பாஜகவை நம்புவார்கள்.

பாஜகவின் அரசியலே மக்கள் விரோத அரசியல்தான்!கருத்தியல் ரீதியாக, அரசியல் ரீதியாக, தேர்தல் களத்தில் எதிர்கொள்ள முடியாதவர்களை வருமானவரித்துறை, அமலாக்கத்துறை, சிபிஐ என விசாரணை அமைப்புகளை வைத்து மிரட்டுவது பாஜக.வின் பாணி! அதுதான் அவர்களுக்குத் தெரிந்த ஒரே பாணி! இந்த ஜனநாயக விரோத பாணியைத்தான் இந்தியா முழுமைக்கும் அவர்கள் பின்பற்றி வருகின்றனர். ஒரே ஸ்கிரிப்ட்டைத்தான் வேறு வேறு மாநிலங்களில் டப்பிங் செய்து வருகிறார்கள்.சிவசேனா எதிர்க்கிறதா? அந்தக் கட்சியின் தலைவர்களில் ஒருவரான சஞ்சய் ரவுத்தைக் கைது செய்ய வேண்டும். இது, மகாராஷ்டிரா!ஆம் ஆத்மி எதிர்க்கிறதா? டெல்லி மாநில அமைச்சர் மனிஷ் சிசோடியாவைக் கைது செய்ய வேண்டும்.

இது, டெல்லி!ராஷ்ட்ரீய ஜனதா தளம் எதிர்க்கிறதா? பிஹார் துணை முதல்வர் தேஜஸ்வீ யாதவுக்கு சொந்தமான இடங்களில் ரெய்டு நடத்த வேண்டும்! இது, பிஹார்!மேற்கு வங்கத்தில், மம்தா பானர்ஜி பாஜக வை எதிர்க்கிறார்களா, அவர்களது கட்சிக்காரர்களது இடங்களில் ரெய்டு நடத்த வேண்டும்!கர்நாடக காங்கிரஸ் தலைவர் டி.கே.சிவக்குமாரைக் கைது செய்தார்கள். அவர் மக்களைச் சந்தித்து, கர்நாடக தேர்தலில் வெற்றி பெற்று, ஆனால், உத்தரப்பிரதேசத்தில் மத்தியப் பிரதேசத்தில், குஜராத்தில் எல்லாம் ரெய்டு நடத்தப்படாது. ஏனென்றால், அங்கே எல்லாம் ஆட்சியில் இருப்பது 'உத்தமபுத்திரன்' பாஜக.

அதை விடுத்து, மிரட்டிப் பணிய வைக்க நினைத்தால், குனிய மாட்டோம். நிமிர்ந்து நிற்போம்.! நேருக்கு நேர் சந்திப்போம்! நாங்கள் ஆட்சிக்காக மட்டும் கட்சி நடத்துபவர்கள் இல்லை. நாங்கள் கொள்கைக்காகக் கட்சி நடத்துகிறவர்கள். கொள்கைகளைக் காப்பாற்றத்தான் கடைசிவரைக்கும் போராடுவோம். திராவிட முன்னேற்றக் கழகத்தின் வரலாறே இதற்கு சாட்சி! ஆதிக்க மனோபாவத்துடன் எதிர்த்தால், கொள்கைப் பட்டாளத்துடன் உறுதியோடு தடுப்போம். இந்தி எதிர்ப்புப் போராட்டங்கள், மிசா காலம் என, நாங்கள் பார்க்காத அடக்குமுறைகள் இல்லை, நாங்கள் நடத்தாத போராட்டங்கள் இல்லை. திமுக நடத்திய போராட்டங்கள் எப்படிப்பட்டது என்று வரலாற்றைப் புரட்டிப் பாருங்கள். இல்லை என்றால் டெல்லியில் இருக்கும் மூத்த தலைவர்களைக் கேட்டுப் பாருங்கள். சீண்டிப் பார்க்காதீர்கள். திமுகவையோ திமுககாரனையோ சீண்டிப் பார்த்தால் தாங்க மாட்டீர்கள். எங்களுக்கும் எல்லா அரசியலும் தெரியும். இது மிரட்டல் அல்ல, எச்சரிக்கை!எனவே, பொறுப்புள்ள மத்திய அரசாங்கத்தை ஆள்கிற பொறுப்பில் இருக்கும் பாஜக அந்தப் பொறுப்பை உணர்ந்து செயல்பட வேண்டும். எதேச்சாதிகார நடவடிக்கைகளை இனியாவது நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். என் உயிரினும் மேலான கருணாநிதியின் அன்பு உடன்பிறப்புகளே! உங்களுக்காக நான் இருக்கிறேன். எனக்காக நீங்கள் இருக்கிறீர்கள். 2024 நமக்கான தேர்தல் களம் காத்துக் கொண்டிருக்கிறது. அதில் நாம் இவர்களைச் சந்திப்போம்!தந்தை பெரியார் பேரறிஞர் அண்ணா தலைவர் கருணாநிதி தந்த உள்ளவுறுதி நமக்கு இருக்கிறது. எதையும் தாங்கும் இதயம் உண்டு. இதையும் தாங்கிக் கடந்து செல்வோம்! நாற்பதிலும் வெல்வோம்! நன்றி! வணக்கம்!" இவ்வாறு அதில் கூறியுள்ளார்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# மன்னார் – நானாட்டான் முச்சக்கர வண்டி சங்கத்தினரின் முன்மாதிரியான செயல் – பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பாராட்டு

- மன்னார் நிருபர் (11-06-2023)

மன்னார் நானாட்டான் முச்சக்கர வண்டி சங்க உறுப்பினர் நானாட்டான் பிரதேச வைத்தியசாலையில் சிரமாதானம் மூலம் துப்பரவுப் பணியில் ஈடுபட்டதுடன் சுற்றுமதில்களுக்கு வர்ணம் பூசி அழகு படுத்தி அனைவருக்கும் முன்மாதிரியாக செயற்பட்டமை குறித்து பல்வேறு தரப்பினரும் பாராட்டுக்களை தெரிவித்துள்ளார்.








மன்னார் நானாட்டான் முச்சக்கர வண்டி சங்க உறுப்பினர் சனிக்கிழமை (10) மற்றும் ஞாயிற்றுக்கிழமை (11) நானாட்டான் பிரதேச வைத்தியசாலையில் சிரமதான பணியை முன்னெடுத்ததோடு, வைத்தியசாலையின் சுற்றுமதில்களுக்கு வர்ணம் பூசி அழகு படுத்தியுள்ளனர்.

நானாட்டான் பகுதி வர்த்தகர்களின் உதவியுடன் நானாட்டான் முச்சக்கரவண்டி சங்கத்தின் நிர்வாகத்தினரும் உறுப்பினர்களும் கலந்து கொண்டு குறித்த சமூக பணியை முன்னெடுத்துள்ளனர்.

அவர்களின் முன்மாதிரியான செயலை பாராட்டும் வகையில் பொதுமக்கள் மற்றும் சுகாதார துறையினர் பாராட்டுக்களை தெரிவித்துள்ள நிலையில் அவர்களின் செயற்பாட்டை மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் பாராட்டியுள்ளார்.

# மாந்தை மேற்கு வேட்டையாமுறிப்பு கிராமத்தில் அமைந்துள்ள "கள்" விற்பனை நிலையத்தை இடமாற்ற கோரி போராட்டம்





- மன்னார் நிருபர் (11-06-2023)

மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வேட்டையா முறிப்பு கிராமத்தில் அமைந்துள்ள "கள்" விற்பனை நிலையத்தை இடமாற்ற கோரி மக்கள் ஞாயிற்றுக்கிழமை (11) காலை கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

குறித்த பகுதியில் உள்ள கள் விற்பனை நிலையத்தை அகற்றி வேறு ஒரு இடத்தில் அமைக்குமாறும் இதனால் பாரிய பிரச்சினை ஏற்படுவதாகவும், குடும்பங்களுக்குள் பிரச்சனைகள், சமூக சீர்கேடு, சிறுவர்கள் மது போதைக்கு அடிமையாகுவதாகவும் இதை கருத்தில் கொண்டு உரிய அதிகாரிகள் விற்பனை நிலையத்தை இப்பிரதேசத்தில் இருந்து வேறு இடத்திற்கு இடமாற்றம் செய்யக் கோரி குறித்த போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இதே வேளை கள் விற்பனை நிலையத்தை மையமாக வைத்து குறித்த பகுதியில் வேறு போதைப் பொருள் வியாபார நடவடிக்கை மேற் கொள்ள படுவதாகவும் கள்ளச்சாராயம் விற்பனை அதிகரித்து காணப்படுவதாகவும் மக்கள் குற்றம் சுமத்துகின்றனர்.

சம்பவ இடத்திற்கு வருகை தந்த அடம்பன் போலீசார் உடனடியாக அடம்பன் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்க முகாமையாளரை தொடர்பு கொண்டு சம்பவ இடத்திற்கு வருகை தருமாறு கூறியதை அடுத்து சம்பவ இடத்திற்கு வருகை தந்த முகாமையாளர் மக்களின் பிரச்சனைகளை கேட்டறிந்ததோடு, மக்களின் எதிர்ப்பை தொடர்ந்து, ஞாயிற்றுக்கிழமை (11) முதல் கள் விற்பனை நிலையம் மூடுவதாகவும் தெரிவித்தார்.

மேலும் குறித்த கள் விற்பனை நிலையம் மூடப்படுவதனால் இத்தொழிலை நம்பி வாழ்வாதாரமாகக் கொண்டு இயங்கும் சுமார் 10 இற்கும் மேற்பட்ட கள்ளு சீவும் தொழிலாளர்களின் வாழ்வாதாரம் முற்று முழுதாக பாதிக்கப்படுவதாகவும் தெரிவித்துள்ளனர்.

எனினும் கள்ளு விற்பனைக்கு அல்லது கள்ளு சீவும் தொழிலாளர்களுக்கு எதிராக நாங்கள் செயல்பட இல்லை எனவும்,குறித்த பகுதியில் உள்ள கள்ளு விற்பனை நிலையத்தை வேறு இடத்திற்கு மாற்ற கோரி தாம் போராட்டத்தை முன்னெடுத்ததாக போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

MORTGAGE

⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)
⇒ லைன் ஒப் கிரெடிட்(HELOC)
⇒ ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்
⇒ Private Mortgage (No Income Verification)
⇒ 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)
⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்
⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட
⇒ எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC
www.mortgageclinccanada.com
உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.
416-613-2788 / 416-816-9011

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP
Team Leader/Mortgage & Real Estate Broker
Cell : 416-624-4843
எமது முகவரி
1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



RIGHT AT HOME REALTY INC.
Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

MORTGAGE ALLIANCE
RIGHT BROKER = RIGHT MORTGAGE
Lic # 10530
Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

இலங்கை செய்திகள்
Sri Lanka News

# மன்னார் மாவட்டத்தில் உள்ள வளங்களை பாதுகாக்க கோரி கவனயீர்ப்பு போராட்டம்: அரச அதிபரிடம் மகஜர் கையளிப்பு



- மன்னார் நிருபர்

மன்னார் மாவட்டத்தில் உள்ள வளங்களை பாதுகாக்க கோரி சூழல் பாதுகாப்பிற்கான கவனயீர்ப்பு போராட்டம் புதன்கிழமை (14) காலை 10.30 மணியளவில் மன்னாரில் இடம் பெற்றது.

மன்னார் கறிற்றாஸ் - வாழ்வுதயத்தின் ஏற்பாட்டில் மன்னாரில் உள்ள அலுவலகத்திற்கு முன் கறிற்றாஸ் வாழ்வுதய இயக்குனர் அருட்தந்தை எஸ். அன்ரன் அடிகளார் தலைமையில் ஆரம்பமானது. இதன் போது இளைஞர், யுவதிகள், சூழல் பாதுகாப்பு குழுவினர், மன்னார் கறிற்றாஸ் வாழ்வுதய பணியாளர் களும் கலந்து கொண்டிருந்தனர்.

இதன் போது கவனயீர்ப்பு பேரணியில் கலந்து கொண்டவர்கள் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு சென்றனர். குறித்த ஊர்வலம் மன்னார் மாவட்டச் செயலகம் முன் சென்றடைந்தது.

இதனைத் தொடர்ந்து மன்னார் மாவட்ட அரசாங்க அதிபருக்கு எழுதப்பட்ட மகஜர் மன்னார் கறிற்றாஸ் வாழ்வுதய இயக்குனர் அருட்தந்தை எஸ். அன்ரன் அடிகளாரினால் வாசிக்கப்பட்டது. பின்னர் குறித்த கவனயீர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டவர்கள் ஒன்றினைந்து மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. ஏ. ஸ்ரான்லி டி மேலிடம் கையளிக்கப்பட்டது.

கையளிக்கப்பட்ட மகஜரில் மேலும் குறிப்பிடுகையில், சர்வதேசம் COP27 மூலம் இயற்கையைப் பாதுகாப்பது மற்றும் காலநிலை மாற்றங்களை நிர்வகிப்பது குறித்து தனது தீவிர அக்கறை காட்டும் இக்காலப் பகுதியில் மன்னார் மாவட்டத்தில் உள்ள மக்களின் வாழ்க்கை மற்றும் வாழ்வாதாரங்களை பாதுகாப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்வதும் அவசர தேவையாகும்.

முல்லை, மருதம், நெய்தல் நிலங்களையும், அழகிய நீர்நிலைகள், ஆறுகள் மற்றும் குளங்கள், மணல் திட்டுக்கள் போன்ற பல்வேறு சுற்றுச்சூழல் இயற்கை வனப்புகளை உள்ளடக்கிய மன்னார் மாவட்டம் தாவரங்கள் மற்றும் விலங்கினங்களுக்கு மிகவும் வளமான இடமாகும்.






“கறிராஸ்-வாழ்வுதயம் நிறுவனம் “இயற்கை வளங்களை பாதுகாப்போம்“ எனும் திட்டத்தை மன்னார் மாவட்டத்தில் உள்ள ஒன்பது கிராமங்களில் செயல்படுத்தி வருகிறது. இயற்கை வளங்களை பாதுகாக்கும் முயற்சிகளில் சமூகத்தின் பங்கேற்பையும், ஈடுபாட்டையும், நிலைத்த தன்மையையும் உறுதி செய்யும் நோக்குடன் ஒவ்வொரு இலக்கு கிராமங்களிலும் சிறுவர், இளையோர், வளர்ந்தோர் சுற்றுச்சூழல் பாதுகாப்புக் குழுக்கள் அரச அதிகாரிகளின் பூரண ஒத்துழைப்புடனும், வழி காட்டல்களுடனும் உருவாக்கப்பட்டுள்ளன.

இக்கிராம மட்டத்திலான சுற்றுச்சூழல் பாதுகாப்புக் குழுக்களிடம் இருந்து சேகரிக்கப்பட்ட தகவல்களை மாவட்டத்தில் உள்ள இயற்கை வளங்கள் சுரண்டல் செயற்பாடுகளின் முக்கியமானவற்றை தங்களின் மேலான கவனத்திற்கு, தடுப்பு நடவடிக்கைகளுக்கும் கோடிட்டுக் காட்டுகின்றன:

1. காற்றாலை திட்டம் - முதலாம் கட்டம்

மன்னார் தீவில் ஏற்கனவே சுமார் 30 காற்றாலைகள் நிறுவப்பட்டு, மணல் அகழ்வோடு இணைக்கப்பட்டு வருகின்றன. இந்த சிறிய தீவில் ஆண்டுக்கு 380 - 400 புறா என்ற இலக்குடன் அதிக காற்றாலைகளை நிறுவுவதற்கான திட்டத்தின் இரண்டாம் கட்டத்தை செயல்படுத்துவதற்கான சில அடிப்படை வேலைகள் நடந்து வருகின்றன. இத்திட்டத்தினால் பொதுமக்களுக்கு ஏற்படும் பாதிப்புகள் பற்றியும், வெளிநாட்டுப் பறவைகள் வருகை குறைவு, மீன் உற்பத்தி குறைபாடு, மண் வளம் அகழ்வு செய்யப்படுவது பற்றியும் கருத்தில் கொண்டு பாதிப்பு தவிர்ப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

2. சட்டவிரோத மணல் அகழ்வு

அருவி ஆறு ஆற்றில் சட்டவிரோதமாக மணல் அகழ்வு மேற்கொள்ளப்படுவதால் அளவுக்கு அதிகமாக ஆறு ஆழமாக்கப் பட்டுள்ளமையால் கடல் வெள்ளம் உயரும் போது ஆற்று நீருடன் உப்பு நீர் கலப்பதால் ஆற்றங்கரை கிராமங்களின் நிலத்தடி நீர் உவராக மாறியுள்ளது. ஆற்றங்கரைகளில் தோட்டம் செய்ய முடியாதபடி நீர் உருவாகியுள்ளது. குறிப்பாக மடுக்கரை மற்றும் தம்பனைக்குளம் கிராமங்களின் குடிநீர் கிணறுகள் உவராக மாறியுள்ளன. ஆற்று வித்தன்களில் உள்ள பெரிய மரங்கள் வேரோடு வீழ்த்தப்பட்டு விலங்குகள் பறவைகளின் வாழ்விடங்கள் அழிக்கப்பட்டுள்ளன.

3. இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறல்

மன்னார் மாவட்ட மக்களின் வாழ்வாதாரத்திலும், பொருளாதார அபிவிருத்தியிலும் கடல்வளம் பாரிய செல்வாக்கினைச் செலுத்துகின்றது. ஆனால், இந்திய இழுவைப் படகுகளின் அத்துமீறல் காரணமாக எமது கடல் வளமும், கடல்வாழ் உயிரினங்களின் இனப்பெருக்க சுற்றுச்சூழலில் உள்ள பவளப் பாறைகளும், ஏனைய இடங்களும் அடியோடு அழிக்கப்பட்டு வருகின்றன. காலப்போக்கில் எமது மக்கள் மீன்பிடித் தொழிலை இழப்பதற்கான குறி காட்டிகளாகவே இவை துலங்குகின்றன.

4. காடழிப்பு

மன்னார் மாவட்டம் உள்நாட்டு யுத்தத்திற்கு முன்பு பரந்த காடுகளை கொண்டிருந்தது. யுத்தம் நிறைவுற்று 2010ம் ஆண்டிற்கு பிற்பாடு பாரியளவிலான காடுகள் அழிக்கப்பட்டு வருகின்றன. 2021ம் ஆண்டின் பிற்பாடு காட்டு வளமானது 210 ஹெக்டேயர் வனப்பரப்பை இழந்துள்ளது. கூகுள் எர்த் வரைபடத்தின் படி டிசம்பர் 2015க்குள் ஏறத்தாழ 2,208 ஏக்கர் அழிக்கப்பட்டுள்ளது. முதிரை, பாலை, வீரை போன்ற பெரு மரங்களில் 70 வீதம் வரையானவை சட்டவிரோதமாக அழிக்கப்பட்டுள்ளதாக காட்டு இலாகாவின் அறிக்கை மூலம் அறிய முடிகிறது.

5. கண்டல் தாவர அழிப்பு

கண்டல் தாவரங்களின் வேர்கள் நண்டு, இறால், சிப்பி போன்ற பல்லுயிர்களின் பெருக்கத்திற்கான மையமாகும், இவற்றின் கிளைகள் பறவைகளின் தங்கு தளம் ஆகும். சிறு மீன்கள், பறவைகள், ஊர்வன மற்றும் ஏராளமான பிற வனவிலங்குகளுக்கும் நீரின் மேற்பரப்பிற்கு மேலேயும், கீழேயும் ஏராளமான உணவுகள் உருவாகும் தொழிற்பாட்டை இத்தாவரங்கள் மேற்கொள்கின்றன. துரதிஸ்ட விதமாக சட்டவிரோத மீன்பிடித்தல், விறகு மற்றும் பிற நடவடிக்கைகளுக்காக மாவட்டத்தில் உள்ள சதுப்பு நில தாவரங்கள் பெருமளவில் அழிக்கப்படுகின்றன.

6. வங்காலை பறவைகள் சரணாலயம்

வங்காலை பறவைகள் சரணாலயம் வறண்ட-மண்டல முள் புதர் காடுகள், மேய்ச்சல் நிலங்கள், கடல் - புல் படுக்கைகள், மணல் திட்டுகள், தடாகங்கள், அலை அடுக்குகள், சதுப்பு நிலங்கள், முதலியவற்றைக் கொண்ட அழகிய பிரதேசமாகும்.

இங்கு உள்நாட்டு பறவைகளும், வெளிநாட்டுப் பறவைகள் வந்து செல்கின்றமை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாகும். இவற்றைக் கண்டு களிப்பதற்காக சுற்றுலாப் பயணிகள் எமது மாவட்டத்திற்கு வருகை தருதல் பொருளாதார வளர்ச்சிக்கான படிக்கல்லாகும்.

ஆனால், இந்த இடத்தின் அழகினையும். வரலாற்று முக்கியத்துவத்தையும் அறிந்து கொள்ளாத, புரிந்து கொள்ளாத மக்கள் தங்கள் வீட்டுக் கழிவுகளை (பொலித்தீன்-பிளாஸ்ரிக்) சரணாலயத்தின் உள்ளே கொட்டுவது விலங்குகளுக்கும், பல்லுயிர் காப்பிற்கும் பாரிய அச்சுறுத்தலான செயற்பாடாகும்.

எனவே மேற்கூறிய பிரச்சனைகள் மற்றும் சுரண்டல்களின் தாக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வருவதைக் கண்டு வேதனை அடைகிறோம். மன்னார் வளங்களை பாதுகாத்து அடுத்த தலைமுறைக்குக் கையளிக்கும் பொருட்டு விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு தங்களை தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றோம்.என குறித்த மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

# மன்னாரில் திடீரென தீப்பற்றி எரிந்த வாகனம் — தெய்வாதீனமாக உயிர் தப்பிய சாரதி



- மன்னார் நிருபர்

மன்னார் முருங்கன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இசைமாலைத்தாழ்வு பகுதியில் புதன்கிழமை (14) வாகனம் ஒன்று முழுமையாக பற்றியெறிந்த நிலையில் சாரதி மற்றும் உதவியாளர் தெய்வாதீனமாக உயிர் தப்பியுள்ளனர்.

மன்னார் - மதவாச்சி பிரதான வீதி இசைமாலைத்தாழ்வு பகுதியில் வியாபார பொருட்களுடன் மன்னார் நோக்கி பயணித்த சிறிய பட்டா ரக வாகனத்தின் இஞ்சின் பகுதி திடீரென தீப்பற்றிய நிலையில் வாகன சாரதி மற்றும் உதவியாளர் துரித கதியில் வாகனத்தில் இருந்து வெளியேறி வாகனத்தில் இருந்த பொருட்களையும் அகற்றி உள்ளனர்.

வெளியேறிய சற்று நேரத்தில் வாகனம் முழுவதும் தீ பரவல் ஏற்பட்டும் முழுமையாக வாகனம் எரிந்து நாசமாகியுள்ளது டன் சாரதியும் உதவியாளரும் எந்தவித காயங்களும் இன்றி உயிர் தப்பியுள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை முருங்கன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# Thana Insurance Inc

## NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 10 K | 22 | 20 | 22 | 20 | 25 | 23 | 34 | 29 | 45 | 37 |
| 25 K | 37 | 34 | 47 | 40 | 54 | 49 | 76 | 64 | 106 | 84 |
| 50 K | 69 | 62 | 89 | 75 | 104 | 92 | 147 | 123 | 206 | 162 |
| 100 K | 133 | 118 | 172 | 144 | 202 | 179 | 289 | 241 | 406 | 318 |
| 200 K | 260 | 231 | 337 | 282 | 398 | 353 | 572 | 476 | 807 | 631 |

## 20 YEARS TERM - NON MEDICAL INSURANCE

| AGE | 45 | | 50 | | 55 | | 60 | | 65 | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | M | F | M | F | M | F | M | F | M | F |
| 100K | 32 | 26 | 50 | 40 | 86 | 60 | 140 | 94 | 265 | 171 |
| 200 K | 60 | 46 | 103 | 74 | 166 | 115 | 275 | 182 | 468 | 321 |

20 வருடம் மட்டுமே பணம் செலுத்தும் காப்புறுதி

மருத்துவ பரிசோதனை இல்லாத காப்புறுதி

சாரதி அனுமதிப்பத்திரம் பறிமுதல் செய்யப்பட்டு காப்புறுதி செய்யமுடியாமல் இருப்பவர்களிற்கும்

உங்கள் காப்புறுதி முகவர் தற்போது சேவையில் இல்லாவிடின் உங்கள் திட்டத்தை இரத்து செய்யாமல் அதில் இலவசமாக மாற்றங்களை செய்ய என்னை அழையுங்கள்



Call us Today

**Cell : 416-728-5772**
**Office : 416-519-3896**

**Thana Manickavasagar**
Insurance Broker
thana7@gmail.com
www.thana.ca
fax : 647-547-8147
80 Nashdene Road ,#D218,
Scarborough,ON,M1V 5E4


## கனடா வாழ் எழுத்தாளர் க. நவம் அவர்கள் அனைவரையும் அன்றைய தினம் தனது நூல் வெளியீட்டு விழாவிற்கு அழைக்கின்றார்



# பிரசித்தி பெற்ற மன்னார்மருதமடு அன்னையின் ஆடி மாத திருவிழா குறித்து விசேட கலந்துரையாடல் – மருதமடு அன்னைக்கு முடிசூட்டு விழாவின் நிறைவு யூபிலி பெருவிழா

இலங்கை செய்திகள் Sri Lanka News

## மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை பி.கிறிஸ்து நாயகம்



- மன்னார் நிருபர் (12-06-2023)

மருதமடு அன்னையின் ஆடி திருவிழா குறித்து அரச அதிபர் தலைமையில் ஆராயப்பட்டுள்ளதாக மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை பி.கிறிஸ்து நாயகம் அடிகளார் தெரிவித்தார்.

மன்னார் மறை மாவட்டத்தின் பிரசித்தி பெற்ற மருதமடு அன்னையின் ஆடி மாத திருவிழாவை முன்னிட்டு முன் ஏற்பாடுகள் குறித்து விசேட கலந்துரையாடல் திங்கட்கிழமை (12) காலை 10 மணியளவில் மன்னார் மாவட்டச் செயலகத்தில் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி. ஏ.ஸ்ரான்லி டிமெல் தலைமையில் இடம்பெற்றது.

இதன் போது மடு திருத்தலத்தின் பரிபாலகர் அருட்தந்தை பெப்பி சோசை அடிகளார், அழைக்கப்பட்ட திணைக்கள தலைவர்கள், பாதுகாப்பு தரப்பினர் என பலர் கலந்து கொண்டனர்.

இவ்விடயம் குறித்து மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை பி.கிறிஸ்து நாயகம் அடிகளார் மேலும் தெரிவிக்கையில், எதிர் வரும் ஆடி மாதம் 2 ஆம் திகதி இடம் பெற உள்ள மடு அன்னையின் ஆடி திருவிழாவிற்கு முன்னெடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

குறிப்பாக சுகாதாரம், மருத்துவம், குடிநீர், போக்குவரத்து, பாதுகாப்பு, உணவு உள்ளிட்ட முக்கிய விடையங்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டுள்ளது.

இம்முறை பல ஆயிரக்கணக்கான மக்கள் வருவார்கள் என எதிர்பார்க்கப்பட்டு உள்ளமையினால் பல்வேறு விடயங்கள் குறித்து ஆராயப்பட்டது.

கடந்த வருடம் எரிபொருள் தட்டுப்பாடு அதனை தொடர்ந்து எரிபொருள் விலையேற்றம் காணப்பட்டது. இதனால் மடுவுக்கு வருகை தந்தவர்களின் எண்ணிக்கை குறைவாக காணப்பட்டது.

ஆனால் தற்போது எரிபொருள் போதிய அளவு உள்ளமையினாலும், விலை குறைக்கப்பட்டு உள்ளமையினாலும் சுமார் 3 லட்சத்திற்கும் அதிகமான மக்கள் ஆடி திருவிழாவில் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

இம்மாதம் 23 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆடி மாத திருவிழா ஆரம்பமாகும்.

ஆடி மாதம் 2ஆம் திகதி காலை 6.15 மணிக்கு மறைமாவட்ட ஆயர்கள் இணைந்து திருவிழா திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும். அதனைத்தொடர்ந்து மருதமடு அன்னையின் திருச்சொரூப ஆசிருடன் திருவிழா நிறைவடையும்.

மேலும் இவ்வருடம் மேலும் ஒரு நிறைவைக் கொண்டாட ஆரம்பித்து வைக்க இருக்கின்றோம்.1924 ஆம் ஆண்டு மருதமடு திருப்பதியிலே பல ஆயர்கள் சூழ மருதமடு அன்னைக்கு முடிசூட்டு விழா இடம்பெற்றது. குறித்த முடிசூட்டு விழாவின் நூற்றாண்டு நிறைவு யூபிலி பெருவிழாவாக எதிர் வரும் வருடம் (2024) ஆண்டு ஜூலை மாதம் கொண்டாட இருக்கின்றோம்.

அதனை முன்னிட்டு ஜூலை மாதம் 2ஆம் திகதி திருவிழாவின் போது மன்னார் மறைமாவட்ட ஆயர் யூபிலி நூற்றாண்டு விழாவினை பிரகடனம் செய்து வைப்பார்.

அதனைத் தொடர்ந்து மருதமடு அன்னையின் திருச் சொரூபத்தின் பின் விசேட விதமாக யூபிலி ஆண்டை பிரகடண படுத்துவதோடு, அதனை வெளிப்படுத்தும் முகமாக வருடம் முழுவதும் பறக்க விடப்படுகின்ற யூபிலி கொடி மருதமடு ஆலய முன் மண்டபத்தில் ஏற்றி வைக்கப்படும்.

அதனைத் தொடர்ந்து இந்த ஆண்டு முதல் அடுத்த ஆண்டு ஜூலை வரை மறை மாவட்டத்தில் பல்வேறு நிகழ்வுகள் இடம்பெற உள்ளது.என அவர் மேலும் தெரிவித்தார்.




# மன்னார் மாவட்ட முச்சக்கரவண்டி சங்கத்தின் தலைவர் தாக்குதல் சம்பவம் – சந்தேக நபர்களை இதுவரை கைது செய்யாத பொலிஸார்



- மன்னார் நிருபர் (13-06-2023)

மன்னார் மாவட்ட முச்சக்கரவண்டி சங்கத்தின் தலைவர் சுப்பிரமணியம் சுவதீசன் (வயது-44) என்பவர் மீது கடந்த 30 ஆம் திகதி மாலை 5 மணியளவில் மன்னார் பேருந்து தரிப்பிடத்திற்கு முன் உள்ள முச்சக்கர வண்டி தரிப்பிடத்தில் வைத்து குழு ஒன்றினால் கடுமையாக தாக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வந்த நிலையில் தாக்குதலை மேற்கொண்ட பிரதான சந்தேக நபர்களை மன்னார் பொலிஸாரிடம் அடையாளம் காட்டிய போதும் இதுவரை குறித்த சந்தேக நபர்களை மன்னார் பொலிஸார் கைது செய்யவில்லை என மன்னார் முச்சக்கர ஊர்தி உரிமையாளர் சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.



வட பிரந்திய முச்சக்கர ஊர்தி உரிமையாளர் சங்கம் (வ/து)

NORTHERN THREE WHEEL MOTER OWNERS SOCIETY [LTD] MANNAR

தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர்கள் 3 பேரையும் இதுவரை மன்னார் பொலிஸார் கைது செய்யாமை குறித்து தாக்குதலுக்கு உள்ளான மன்னார் மாவட்ட முச்சக்கரவண்டி சங்கத்தின் தலைவர் சுப்பிரமணியம் சுவதீசன் (வயது-44) இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் மன்னார் அலுவலகத்தில் முறைப்பாடு ஒன்றையும் பதிவு செய்துள்ளார்.

மன்னார் மாவட்ட முச்சக்கரவண்டி சங்கத்தின் தலைவர் கடந்த 30 ஆம் திகதி மாலை 5 மணியளவில் மன்னார் பேருந்து தரிப்பிடத்திற்கு முன் உள்ள முச்சக்கர வண்டி தரிப்பிடத்தில் வைத்து குழு ஒன்றினால் கடுமையாக தாக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

மன்னார் பேருந்து தரிப்பிடத்திற்கு முன் உள்ள முச்சக்கர வண்டி தரிப்பிட பகுதியில் அன்றைய தினம் சிலர் முரண்பாட்டுக் கொண்டிருந்தனர்.

இவ்விடயம் குறித்து முச்சக்கர வண்டி தலைவர் என்ற வகையில் குறித்த முரண்பாடு குறித்து மன்னார் பொலிஸாருக்கு தெரியப்படுத்தும் வகையில் தொலைபேசி ஊடாக தொடர்பை ஏற்படுத்திக் கொண்டிருந்தேன்.

இதன் போது குறித்த சங்கத்தைச் சேர்ந்த 3 முச்சக்கர வண்டி சாரதிகள் மற்றும் அழைத்து வரப்பட்ட சுமார் 20 பேருக்கு மேற்பட்ட முச்சக்கர வண்டியில் வைத்து கொலை வெறி தாக்குதலை மேற்கொண்டனர்.

சங்கத்தின் முன்னாள் செயலாளரின் செயல்பாடு சரி இல்லாத நிலையில் அவர் பொறுப்பில் இருந்து நீக்கப்பட்டார்.

முன்னாள் செயலாளருக்கு எதிராக முச்சக்கர வண்டி சங்கத்தினாலும் மன்னார் பொலிஸாரினாலும் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதனால் அவருடன் சேர்ந்த ஒரு சிலர் எங்களுடன் முரண்பட்ட நிலையில் இத் தாக்குதலின் பின்னணியில் என்னுடன் முரண்பட்ட 3 முச்சக்கர வண்டி ஓட்டுனர்கள் சுமார் 20 பேருக்கு மேற்பட்டவர்களை அழைத்து வந்து கடுமையாக தாக்கியுள்ளனர்.

எனவே சம்பவத்துடன் தொடர்புடைய சங்கத்தை சேர்ந்த முச்சக்கர வண்டி ஓட்டுனர்கள் 3 பேரையும் அவர்கள் அழைத்து வந்தவர்களையும் பொலிஸ ார் கைது செய்து சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என சங்கம் சார்பாக கோரிக்கை விடுக்கப்பட்ட போதும் மன்னார் பொலிஸார் இது வரை குறித்த 3 பிரதான சந்தேக நபர்களையும் கைது செய்யவில்லை.

மேலும் குறித்த 3 முச்சக்கர வண்டி சாரதிகள் தற்காலிகமாக சங்கத்தில் இருந்து இடை நிறுத்தப்பட்டுள்ளனர்.

மன்னார் பொலிஸார் இதுவரை சந்தேக நபர்களை கைது செய்யாத நிலையில் மன்னார் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# மன்னாரில் சேய் பகல் (DAY CARE) பராமரிப்பு நிலையம் ஆரம்பிக்கப்பட்டது


- மன்னார் நிருபர் (14-06-2023)

உலக வங்கியின் நிதி உதவியின் கீழ் மகளிர் சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்தல்கள் அமைச்சின் ஊடாக கடந்த ஆண்டு நிர்மாணிக்கப்பட்ட சேய் பகல் பராமரிப்பு நிலையம் மன்னார் பிரதேச செயலாளர் மனோகரன் பிரதீப் தலைமையில் புதன்கிழமை (14) வைபவரீதியாக திறந்து ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வேலைக்கு செல்லும் பெண்களின் மன ரீதியான இடர்பாடுகளை குறைப்பதை அடிப்படையாக கொண்டும் அதே நேரத்தில் வேறு மாவட்டத்தில் பணிபுரிவோர், தாய் தந்தை இருவரும் பணிபுரிவோர், கூட்டு குடும்பமாக வாழாத குடும்பத்தின் குழந்தைகளின் நலன் கருதி அமைக்கப்பட்ட குறித்த பகல் பராமரிப்பு நிலையம் மேற்படி வைபவரீதியாக திறந்து வைக்கப்பட்டது.



குறித்த நிகழ்விற்கு பிரதம விருந்தினராக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் ஸ்ரான்லி டிமேல், சிறப்பு விருந்தினர்களாக உதவி மாவட்ட செயலாளர், மேலதிக அரசாங்க அதிபர், மன்னார் சுகாதார வைத்திய அதிகாரி, மாவட்ட சமூர்த்தி பணிப்பாளர், மன்னார் நகரசபை செயலாளர், அரச ஊழியர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.





குறித்த சேய் பராமரிப்பு நிலையம் புனித ஜோசேவாஸ் சபை அருட்சகோதரிகளினால் பராமரிக்கப்படவுள்ளதுடன் ஒரே சமயத்தில் 20 பிள்ளைகளை கவனிக்க கூடிய வசதியுடன் குறித்த நிலையம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அதே நேரம் குறித்த பராமரிப்பு நிலையத்தை ஆறுவயதுக்குட்பட்ட பிள்ளைகளை உடைய அனைத்து பெற்றோர்களும் நிபந்தனையின் அடிப்படையில் பயன்படுத்த முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

# இலங்கை கடல் பிரதேசம் மேலும் சீன மயமாகுமா?

## உதயனின் சிறப்பு கட்டுரை - எமது செய்தியாளர்



இலங்கை கடலை குறிவைக்கும் சீனாவிற்கு அவல் கிடைத்தமை போன்று சீனாவிற்கு சாதகமான ஒருவர் நாராவின் (NARA) பணிப்பாளர் சபை உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கையின் தேசிய நீர்வள ஆய்வு மற்றும் அபிவிருத்தி முகாமையின் பணிப்பாளர் சபைக்கு கிழக்கு பல்கலைக்கழகத்தின் விலங்கியல் துறையின் பேராசிரியர் வினோபாவா கடற்றொழில் அமைச்சரால் 2023-06-12 அன்று நியமிக்கப்பட்டார்.

இலங்கையின் கடல் பிராந்தியத்தில் என்ன முயற்சியிலாவது எந்த தொழிலிற்கேனும் இறங்கிவிட வேண்டும் என சீனா முழு வீச்சில் இருப்பது ஒன்றும் இரகசியமல்ல. அந்த வகையில் கிழக்கு பல்கலைக்கழகத்தில்-இந்த ஆண்டு ஏப்பிரல் மாதம் இடம்பெற்ற சீனாவுடனான ஓர் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றிற்கான ஏற்பாட்டு நிகழ்விலும் இதே பேராசிரியர் முழுவீச்சில் செயல்பட்டிருந்தார் என்று பல்கலைக்கழக வட்டாரங்கள் கூறுகின்றன.. கிழக்கு மாகாணத்தின் முன்னாள் ஆளுநர் அனுராதா யஹம்பத் சீனாவின் பக்கம் நின்றபோது கிழக்கு மாகாணத்தின் நிர்வாகங்களையும் சீனாவின் பக்கம் இழுத்துச் செல்கிறார் என்ற குற்றச்சாட்டு நிலவிய போதே இந்தச் சம்பவமும் இடம்பெற்றது.

இந்த நிலையில் இலங்கையின் கடல்சார் திட்டங்கள் மற்றும் முன்மொழிவுகள் ஏதும் கிடைக்கும் சமயத்தில் அதனை நாராவிடம் சமர்ப்பித்து ஆய்விற்கு உட்படுத்தி அதன் பரிந்துரையின் அடிப்படையில் முடிவுகள் எட்டுவதே வழமையான நிலை. அப்படியான நிலையில் சீனா சார்பில் ஏதும் திட்டங்கள் சமர்ப்பிக்கப்பட்டு அது நாரா எனப்படும் தேசிய நீர் வள ஆய்வு மற்றும் அபிவிருத்தி முகாமையின் ஆய்விற்கு அனுப்பி அதன் சான்றிதழைப் பெற்று இணைக்கப்பட்டாலும் உள்ளூர் அதிகாரிகள் அல்லது மீனவ அமைப்புக்கள் அதனை ஏற்றுக்கொண்டாலும் இந்தியா அதனை ஏற்குமா என்ற தீவிர சந்தேகம் தொடர்ச்சியாக உள்ளது. மேலும், வடகிழக்கு தமிழ் மக்களிடம் மட்டுமன்றி இதர தரப்பினரிடமும் இந்த ஐயம் இருக்கிறது. அதேவேளை, இவ்வாறான திட்டங்களிற்கு சாதகமான சான்றிதழைப் பெறுவதற்காகவே சாதகமான ஒருவர் அமர்த்தப்பட்டார் என்ற நியாயமான சந்தேகத்தை எழுந்தாலும், அதை உறுதி செய்யும் வகையிலே இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளமை இந்தியாவின் அழுத்தங்களை மிஞ்சிய அழுத்தமாகவே இருக்கும் என்று அரசியல் அவதானிகள் மற்றும் அறிவியல் சமூகத்தினரின் இன்னுமோர் பார்வையாகவுள்ளது.

இதனிடையே தற்போது தேசிய நீர் வள ஆய்வு மற்றும் அபிவிருத்தி முகாமையின் உறுப்பினராக நியமிக்கப்பட்ட பேராசிரியர் வினோபா தற்போது யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் பதவிக்கும் விண்ணப்பித்துள்ள நால்வரில் ஒருவராகவும் உள்ளார். ஆகவே இதே தாக்கம் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் தெரிவிலும் ஆதிக்கம் செலுத்துமா எனவும் பலரால் தற்போதே ஐயம் கொள்ளப்படுகின்றது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் நிர்வாகத்திற்குள்ளும் அதன் செயல்பாடுகள் மற்றும் நிதிஈட்டல்களிற்குள் எந்த வகையிலேனும் உள் நுழைய கடந்த இரு ஆண்டுகளாக சீனா படாதபாடுபடுகின்றது என்பதும் உலகறிந்த உண்மை. இதன் ஒரு வெளிப்பாடாக ஓர் ஒப்பந்தம் மேற்கொள்ளத் தயாரானபோது மாணவர்கள் பகிரங்கமாகவே எதிர்ப்பு வெளியிட்டமையினால் துணைவேந்தர் மாணவர்களின் கூற்றுக்கு அமைய அதில் இருந்து பின் வாங்கியதனால் தற்போதைய துணை வேந்தர் இந்தியா சார்பான நிலைப்பாட்டை எடுக்கிறாரா என்ற விமர்சனமும் எழுந்துள்ளது.

இதன் காரணமாக யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்திற்கான துணை வேந்தர் தெரிவு என்பது யாழ்ப்பாணம் இந்தியாவின் ஆதிக்கத்தில் உள்ளதா அல்லது சீனாவான் முற்றுகையிடப்படுகிறதா என்ற போட்டி நிலைகூட எழுந்தாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை என்று பல்கலைக்கழத்தில் உள்ளவர்களே கூறும் நிலை நிலவுகிறது.

இதற்கு மற்றுமோர் எடுத்துக்காட்டாக வடக்கிலே இன்றுவரை ஓர் கடல் அட்டைப் பண்ணைகூட இல்லாத மாவட்டம் முல்லைத்தீவு மாவட்டம். அங்கும், அதாவது முல்லைத்தீவிலும் கடல் அட்டைப் பண்ணைகளை மேற்கொள்ள முடியுமா எனவும் மாவட்டத்தில் கடலட்டை வளர்ப்புக்கு ஏதுவான கடற் சூழல் இருக்கின்றதா என்பதை ஆராய்வதற்காக நாரா நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகம் மற்றும் ஆய்வு அதிகாரிகளுடன் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா இம்மாதம் 13ஆம் திகதி கலத்துரையாடினார். இனி அங்கும் ஏதுவான கடல் சூழல் உண்டு என்றே அறிக்கை கிட்டும் என தற்போதே பிரஸ்தாபிக்கப்படுகின்றது.







ஏற்கனவே யாழ்ப்பாணத்தில் 268 கடல் அட்டைப் பண்ணைகளும், கிளிநொச்சியில் 277 பண்ணைகளும், மன்னாரில் 123 பண்ணைகளும் உள்ள நிலையில் இனி முல்லைத்தீவும் கண் வைக்கப்பட்டு விட்டது. அதனால் சீனாபாடு கொண்டாட்டம்தான். இந்த கடலட்டை பண்ணைகள் மூலம் சீர் செய்ய முடியாத சுற்றுச்சூழல் பாதிப்புகள் ஏற்படும் என்பது அறிவியல் ரீதியாக கண்டறியப்பட்ட ஒன்று. அதுமட்டுமின்றி, வடக்கே ஏற்கனவே கடல் அட்டை பண்ணைகள் பெரும் பிரச்சனையாக உருவாகியுள்ளது.

சீனாவின் உதவியுடன் நிறுவப்படும் இந்த கடல் அட்டைப் பண்ணைகளில் வளர்க்கப்படும் கடலட்டைகள் முழுமையாக ஏற்றுமதி நோக்கத்தையே மையமாகக் கொண்டு செயல்படுத்தப்படுகிறது. சர்வதேச சந்தையில் நல்ல விலையைப் பெற்றுக்கொடுக்க கூடியவை இந்த கடலட்டைகள். ஆனால் அதன் மூலம் பெறப்படும் இலாபங்கள் சீன முதலாளிமார் அல்லது அதை நடத்தும் சீன நிறுவனத்திற்கே செல்கிறதே தவிர, அதன் மூலம் உள்ளூர் மீனவர்கள் யாரும் பலனடைவவில்லை என்பதே யதார்த்தம். இதில் ஈடுபடும் உள்ளூர் மீனவர்களுக்கு கூலி மட்டுமே கொடுக்கப்படுகிறது, அதுவும் உழைப்பிற்கேற்ற ஊதியம் இல்லை.

இந்த நிலையில் நிர்வாக மட்டத்தில் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகமும் சீனாவின் கடைக்கண் பார்வையில் இருந்தபோதும் தப்பி பிழைத்து வருகின்றபோதும் அமைச்சர் பக்கத்து அழுத்தங்களிற்கு குறைவு இன்றியே காணப்படுகின்றது. இதிலே எதிர்வரும் 21ஆம் திகதி சீனாவில் இடம்பெறும் யோகா தினத்திற்கு யாழ்ப்பாணம் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தருக்கு கடந்த மாதம் 9 ஆம் திகதியிடப்பட்ட அழைப்பிதழ் ஒன்றை சீனா அனுப்பியதோடு மே மாதம் 29 ஆம் திகதிக்கு முன்பு வருகையை உறுதி செய்யுமாறும் கோரப்பட்டது.

இதற்கான பதிலை மே மாதம் 22 ஆம் திகதிவரை துணை வேந்தர் வழங்காதபோது 23 ஆம் திகதி அமைச்சரின் ஒரு மாவட்டத்திற்கான தனிப்பட்ட செயலாளர் துணை வேந்தரை மிரட்டும் தொனியில் அதற்கு பதிலளிக்குமாறு கோரியுள்ளார்.

இருந்தபோதும் எவர் கூறியும் அதனை கேளாத துணைவேந்தர் வழமையான பாணியில் இதனையும் செவிசாய்க்காதமை மட்டுமன்றி இந்தக் காலத்தில் சீனாவின் மற்றுமோர் நீண்டகால எதிரிநாடான ஜப்பானிற்கு பயணமாகிவிட்டார்.

இந்த நிலையில் தொடர்ந்தும் தன் முயற்சியில் தளராத விக்கிரமாதித்தன் போன்று சீனாவும் முயல்கின்றது. இதனால் எதிர் காலத்தில் கடல் சார் அறிக்கைகள் சீனாவிற்கு சார்பாக மாற்றப்படுமா என இந்தியாவும் அஞ்சுகின்றது.

தற்போது நாரா அமைப்பிற்கு சீன சார்பு நிலை கொண்டவர் என்று கருதப்படும் மூத்த பேராசிரியர் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளமை, இலங்கையின் வட கடல் பகுதியில், கேந்திர ரீதியான பொருளாதர போட்டிக்கு வழிவகுக்கும் என்ற கவலைகள் எழுந்துள்ளன. அண்மை காலத்தில் சீனாவின் உயரதிகாரிகள் வட மாகாணத்தின் பல பகுதிகளிற்கு விஜயம் செய்வது, ஓரிரு தினங்கள் தங்கியிருந்து நடுநிசியில் கடலிற்குள் இறங்குவது, ட்ரோன்களை பறக்கவிட்டு ஆய்வுகளை மேற்கொள்வது போன்றவையும் அவதானிக்கப்பட்டுள்ளன.

சீன உயரதிகாரிகள் பாக்கு நீரணைப் பகுதியில் தீவிர கண்காணிப்புகளை மேற்கொள்வதை இந்தியா அறிந்துள்ளதா, அறிந்தும் நடவடிக்கை எடுக்க தயங்குகிறதா அல்லது மறைமுகமாக தமது இயலாமையை வெளிப்படுத்துகிறதா என்றெல்லாம் துறைசார் மக்கள் வெளிப்படையாகவே பேச்சின்றனர்.


இதன் பின்புலத்தில் இலங்கையின் வடகடல் பகுதியில் சீனாவின் ஆதிக்கம் அதிகரித்தால் அது இந்தியாவின் தேசியப் பாதுகாப்பிற்கு நேரடியாக விடப்படும் ஒரு அச்சுறுத்தலாகவே இருக்கும் என்பதையும் மறுக்க முடியாது.



Amma Pawn Broker
அம்மா தங்கநகை அடைவு மடம்
உங்கள் நகைக்கு கூடிய பெறுமதியும்
குறைந்த வட்டி வீதமும் தரும் ஒரே நிறுவனம்
உங்கள் பழைய நகைகளை நியாயமான விலைக்கு எம்மிடம் விற்கலாம் வாங்கலாம்.
1.5% முதல் 2% வட்டி மட்டுமே (per month)
கனேடிய அரசின் அங்கீகாரம் பெற்று முழுக் காப்புறுதி செய்யப்பட்ட முதன்மையான அடைவுசேவை அம்மா போல அம்மா பவுண் புறோக்கர்ஸ்
416-757-0034 • 416-994-3861
105A - 2425 Eglinton Ave, E, Scarborough. ammapawnbroker@gmail.com

# தறிகெட்டுப் போகின்றார்களா மாணவர்கள்?

## - யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்



அண்மையில் ஓ/எல் பரீட்சை எழுதிய மாணவர்கள் பரீட்சைகள் முடிந்த கடைசி நாளன்று வகுப்பறைகளிலும் வகுப்புக்கு வெளியேயும் அட்டகாசம் செய்ததாக சில ஒளிப்படங்கள் வெளியாகின. இந்த ஒளிப்படங்களை வைத்து மூன்று விதமான கருத்துக்கள் கூறப்பட்டன. முதலாவது, சில மாணவர்கள் செய்த குழப்படிகளுக்காக எல்லா மாணவர்களையும் குற்றங்கூறக் கூடாது என்று. இரண்டாவது, அந்த வயதுக்கு அவர்கள் அப்படித்தான் இருப்பார்கள். அவர்கள் அந்த மகிழ்ச்சியை அனுபவிக்க விடுங்கள் என்பது. மூன்றாவது, ஆசிரியர்களின் கைகளில் இருந்து பிரம்பு பறிக்கப்பட்டதால் மாணவர்கள் தறிகெட்டுப் போய்விட்டார்கள் என்ற குற்றச்சாட்டு.

பரீட்சை முடிந்த கடைசி நாளைக் கொண்டாடுவது என்பது ஒரு பொதுவான மாணவ உளவியல். அதை எப்படிக் கொண்டாடுகிறார்கள் என்பதுதான் இங்கு பிரச்சனை. இதை இரண்டு விடயங்கள் தீர்மானிக்கின்றன. ஒன்று பரீட்சை எத்தகையது என்பது. அல்லது கல்விமுறை அல்லது கல்விச் சூழல் எத்தகையது என்பது. இரண்டாவது மாணவர்களுக்கு யார் முன்மாதிரிகள் என்பது.

முதலாவதாக கல்விச் சூழல் பற்றிப் பார்க்கலாம். இலங்கைத் தீவு அதன் இலவச கல்வியைக் குறித்து பெருமைப்பட்டுக் கொண்டாலும், நடைமுறையில் போட்டிப் பரீட்சையானது தனியார் கல்வியை ஊக்குவிக்கிறது. அண்மையில் தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரிணி "எமது பிள்ளைகள் இலவசக் கல்வியை முழுமையாக அனுபவிக்கின்றனர் என்று அரசாங்கம் கூறினாலும் அது பெரும் பொய்" என்று கூறியிருக்கிறார். "நாட்டில் மாணவர்கள் உயர்தரப் பரீட்சையில் சித்தியடைவது இலவசக் கல்வியினால் அல்ல, தனியார் பணத்தினால்" என்றுமவர் கூறியுள்ளார்.

போட்டிப் பரீட்சையானது சிறுபிராயமிருந்தே பிள்ளைகளுக்கு இடையே போட்டி உணர்வைபொறாமை உணர்வைசுயநலத்தை வளர்க்கின்றது. இதன் விளைவாக இலவசக் கல்வியின் உன்னதங்கள் பிரகாசமிழந்து போகின்றன. ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சை எனப்படுவது பிள்ளைகளுக்கானது என்பதை விடவும் நடைமுறையில் பெற்றோர்களுக்கு உரியதாகவே காணப்படுகின்றது. ஐந்தாம் ஆண்டு பிள்ளையைக் கசக்கி பிழியும் அந்த பரீட்சையை அகற்றுமாறு பெரும்பாலான கல்வி உளவியலாளர்களும் மருத்துவர்களும் எப்பொழுதோ சொல்லிவிட்டார்கள். ஆனால் நாடு இன்றுவரை அதைக் கைவிடத் யாரில்லை. அதற்கு மாற்று ஏற்பாட்டைக் கண்டுபிடிக்கவும் தயாரில்லை.

ஐந்தாம் ஆண்டிலிருந்து பிள்ளையை கசக்கிப் பிழியத் தொடங்கும் ஒரு கல்வி முறையானது ஓ/எல் பரீட்சையின்போது பிள்ளைக்குச் சித்திரவதையாக மாறுகிறது. கல்வி சுமையாக, சித்திரவதையாக மாறும்பொழுது பரீட்சை ஒரு தத்தாக மாறுகின்றது. அந்தப் பரீட்சையை எழுதிக் கடந்த பிள்ளை அந்த மகிழ்ச்சியை கொண்டாடுந்தானே? ஆனால் அது எப்படிக் கொண்டாடுகிறது என்பதுதான் பிரச்சினை.

"பாராளுமன்றத்தினுள் மிளகாய்த் தூள் வீசி சண்டையிடுகின்றனர், கதிரைகளை வீசி எறிந்து சண்டையிடுகின்றனர், இவற்றை முன்னுதாரணமாக கொண்டே மாணவர்களும் செயற்படுவதாக" இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் கருத்துத் தெரிவித்துள்ளார்.

அதுதான் உண்மை.மாணவர்களுக்கு முன்மாதிரிகள் குறைந்துவிட்டன. போட்டிப் பரீட்சையானது பாடசாலையின் பெறுமதியைக் குறைத்து விட்டது. அதே சமயம், தனியார் கல்வி நிறுவனங்கள் பிள்ளைகளைப் பரீட்சைக்குத் தயார்படுத்தும் எந்திரங்களாகவே காணப்படுகின்றன. அல்லது பந்தயத்துக்கு குதிரைகளைத் தயார்படுத்தும் பயிற்சி நிலையங்கள் ஆகவே காணப்படுகின்றன.

பந்தயக் குதிரைக்கு அல்லது சவாரி மாட்டுக்கு எதைக் கொடுத்தாவது எதைச் செய்தாவது வேகமாக ஓடவைக்க வேண்டும் என்ற மனோநிலையோடு அணுகும் பயிற்சியாளராக ஆசிரியர்கள் மாறுகிறார்கள். ஓ/எல் பரீட்சை முடிந்தபின் அந்த மகிழ்ச்சியை கொண்டாடிய மாணவர்களைக் குறித்து விமர்சிக்கும் பலரும் அந்த பரீட்சை முடிந்த அடுத்தடுத்த நாளில் ஏ/எல். பாடங்களுக்கான தனியார் வகுப்புகள் தொடங்கியதைப்பப்பற்றி விமர்சித்திருக்கிறார்களா?

ஒரு பரீட்சை முடிந்த கையோடு அடுத்த கட்ட பாடங்களை தொடங்க வேண்டிய தேவை என்ன? யார் முந்தித் தொடங்குவது என்ற போட்டிதானே காரணம்? இந்தப் போட்டி காரணமாக பிள்ளை அதன் ஓய்வை இழக்கின்றது. நவீன கல்வியில் ஓய்வும் படிப்பின் ஒரு பகுதி. ஆனால் பரீட்சை முடிந்த கையோடு பிள்ளை அடுத்த பந்தயத்துக்கு தயாராகின்றது.இது பிள்ளையின் உளவியலை எப்படிப் பாதிக்கும்?

இந்த விடயத்தில் கல்முனை பிரதேச சபை ஒரு நடவடிக்கை எடுத்திருக்கிறது. தனியார் கல்வி நிறுவனங்கள் 2025 ஆம் ஆண்டுக்குரிய ஏ/எல் பாடங்களை இம்மாதம் இறுதிவரை ஆரம்பிக்க வேண்டாம் என்று கல்முனை மாநகர சபை ஆணையாளர் அறிவுறுத்தியுள்ளார்.

அந்த முன்மாதிரியை ஏன் ஏனைய உள்ளூராட்சி சபைகளும் பின்பற்றக் கூடாது? அண்மையில் யாழ் மாவட்டச் செயலர் தனியார் கல்வி நிறுவனங்களைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுத்திருந்தார். ஆனால் அதுகூட ஒன்பதாம் ஆண்டுக்கு உட்பட்ட பிள்ளைகளுக்குத்தான். அப்படியென்றால் 9 ஆம் ஆண்டுக்கு மேற்பட்ட பிள்ளைகள் பந்தய குதிரைகளாக்கபடுவது மறைமுகமாக ஏற்றுக் கொள்ளப்படுகிறதா? ஆம்.அதை தடுக்க முடியாத ஒரு சமூகச் சூழலே காணப்படுகின்றது. ஏனென்றால் போட்டிப் பரீட்சையில் வெற்றிபெற வேண்டும் என்ற வெறி பெற்றோருக்கும் அதிகம்.

இது சமூகத்தின் கல்வி பற்றிய கருதுகோள்களினால் தீர்மானிக்கப்படுகிறது. குறிப்பாக விஞ்ஞான, கணிதப் பிரிவுகளுக்குரிய பிள்ளைகளைப் பொறுத்தவரை வாழ்க்கையை வெறுத்து படிக்க வேண்டும் என்று பெற்றோரும் கருதுகிறார்கள் ஆசிரியர்களும் கருதுகிறார்கள்.

யாழ்பாணத்தில் ஏ/எல் பாடங்களை படிப்பிக்கும் தனியார் கல்வி நிறுவனங்களில் எத்தனை ஒழுங்கான இருக்கைகளை வைத்திருக்கின்றன? உலகில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வகுப்பறை வசதிகளைக் கொண்டிருக்கின்றன. சில தனியார் கல்வி நிறுவனங்கள் தங்களைக் கண்டிப்பானவைகளாகக் காட்டிக்கொள்ள ஒழுக்கத்திலும் பெண் பிள்ளைகளின் விடயத்திலும் கிட்டத்தட்ட தாலிபான்களைப் போலவே நடந்து கொள்கின்றன. ஆனால் அங்கே நூற்றுக்கணக்கில் பிள்ளைகள் ஒன்றாக இருந்து படிப்பார்கள். அது உலகம் முழுவதும் ஏற்றுக்கொள்ளப்பட்ட வகுப்பறை ஒழுங்குகளுக்கு எதிரானது. ஒரு வகுப்பறையில் எத்தனை பேர் இருக்கலாம் என்று ஒரு அளவு உண்டு. ஆனால் பெரும்பாலான தனியார் கல்வி நிறுவனங்களில் நூற்றுக்கணக்கான பிள்ளைகள் ஒன்றாக இருந்து கல்வி கற்கின்றார்கள். ஒருவர் மற்றவரோடு முட்டியபடி இருக்க வேண்டும். முதுகை சாய்க்க முடியாது. புத்தகப் பையை வைக்க இடம் கிடையாது... போன்ற முறைப்பாடுகள் உண்டு.

சில தனியார் கல்வி ஆசிரியர்கள் பிள்ளைகளை நூற்றுக்கணக்கான பிள்ளைகளுக்கு முன் பகிரங்கமாகத் தண்டிக்கிறார்கள். இது கல்வி உளவியலுக்கு முரணானது. பிள்ளையின் குறைந்த புள்ளிகளை சுட்டிக்காட்டி அவமதிப்பது பிள்ளையை வகுப்பை விட்டு துரத்துவது போன்ற பகிரங்க தண்டனை முறைகள் உண்டு. இவை அனைத்தும் மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகள். இதையே பாடசாலை செய்தால் அதற்கு நீதிமன்றம் வரை போகும் சமூகம் தனியார் கல்வி நிறுவனங்களில் நிகழும் இவ்வாறான பகிரங்கத் தண்டனைகளைக் குறித்து அலட்டிக்கொள்வதில்லை. ஏனென்றால் சிறந்த பெறுபேறுகளுக்காக மனிதஉரிமைகள் பலியிடப்படுவதை ஏற்றுக்கொள்ளும் ஒரு சமூகமாக நாம் எப்பொழுதோ மாறிவிட்டோம். அங்கிருந்தும் தொடங்குகின்றது வன்முறை.

சிறந்த பெறுபேறுகளுக்காக உயர்தரத்தில் ஒரு பாடத்துக்கு ஒன்றுக்கு மேற்பட்ட ஆசிரியர்களிடம் செல்லும் போக்கு அதிகரித்து வருகிறது. இதனால் பிள்ளைகள் சுயமாகக் கற்பதற்கு நேரம் கிடைப்பதில்லை. சுயகற்றலை ஊக்குவிக்காத கல்வி முறை பிள்ளைகளை எங்கே கொண்டு போய் விடும்? சமூகத்தை எங்கே கொண்டு போய் விடும்?

கடந்த ஆண்டு ஓ/எல் பரீட்சை முடிவுகள் வெளிவந்த பொழுது பிள்ளைகள் அதிகம் சுயமாகக் கற்றிருக்கிறார்கள் என்று சுட்டிக் காட்டப்பட்டது.பெருந்தொற்றுநோய் காரணமாக பிள்ளைகள் வீடுகளில் முடங்க வேண்டி இருந்தபடியால் அவர்கள் சுயமாக கற்க வேண்டிய ஒரு சூழல் ஏற்பட்டது என்றும் சுட்டிக் காட்டப்பட்டது. அதே சமயம் மாணவர்கள் மத்தியில் ஒரு கூட்டு அபிப்பிராயம் உண்டு. பாடசாலைக்குப் போகும் நேரத்தை குறைத்தால் வீட்டிலிருந்து அதிகமாகப் படிக்கலாம் என்பதே அது. அதாவது தனியார் கல்வி நிறுவனங்களுக்கு போகும் நேரத்தை குறைக்க அவர்கள் தயாரில்லை. மாறாக பள்ளிக்கூடத்துக்குப் போகும் நேரத்தை குறைத்தால் கூடுதலாகப் படிக்கலாம் என்று அவர்கள் கருதுகிறார்கள்.

போட்டிப் பரீட்சையானது பாடசாலையின் சந்தைப் பெறுமதியைக் குறைத்து விட்டது. ஆசிரியர் மாணவ உறவின் மகிமையைக் குறைத்துவிட்டது. பிள்ளைகளைத் தறுக்கணிக்க வைக்கின்றது. பிள்ளைகளுக்கு இடையே போட்டி பொறாமை போன்றவற்றை ஊக்குவிக்கின்றது. பொதுநலத்தை விடவும் சுயநலத்தை ஊக்குவிக்கிறது. அதன் விளைவாக யாருக்கும் பயப்படாத் யாரையும் மதிக்காத் எதையும் புனிதமாகக் கருதாத ஒரு போக்கு பிள்ளைகள் மத்தியில் வளர்ந்து வருகிறது. போட்டிக்கல்வி முறையின் மேற்கண்ட மோசமான விளைவுகளை குறித்து உரையாடாமல் கல்விமுறையின் விளைவாக பிள்ளைகள் குழப்படி செய்வதை ஒரு குற்றமாகப் பார்க்கலாமா?

ஆசிரியர்கள் முன்னுதாரணங்களாக இல்லையென்றால், அல்லது மதத் தலைவர்கள், சமூகத் தலைவர்கள், அரசியல் தலைவர்கள் போன்றோர் முன்னுதாரணங்களாக இல்லையென்றால் பிள்ளை யாரைப் பின்பற்றும்?

எனவே மாணவர்கள் தறிகெட்டு போகின்றார்கள் என்று சொன்னால் அதற்கு அந்தச் சின்னப் பிள்ளைகள் மட்டும் பொறுப்பில்லை. முழுச்சமூகமும் பொறுப்பேற்க வேண்டும். முழுநாடும் பொறுப்பேற்க வேண்டும். முதலாவதாக கல்வி முறைமைதான் குற்றவாளி. அந்த கல்விமுறையின் கைதிகளாக அல்லது கருவிகளாக காணப்படும் ஆசிரியர்களும் பெற்றோர்களும் பெரிய புரட்சிகரமான மாற்றம் எதையும் செய்துவிட முடியாது. தன் சொந்த பிள்ளையின் விடயத்தில் வேண்டுமென்றால் பெற்றோர் ரிஸ்க் எடுக்கலாம். தனிப்பட்ட முறையில் பெற்றோர் பிள்ளையை எப்படிச் செதுக்க வேண்டும் என்று முடிவெடுக்கலாம்.ஒரு முறைமைக்கு எதிராக பிள்ளையைச் செதுக்குவதில் சவால்கள் உண்டு. ஆனால் அதைவிட வேறு வழியில்லை. ஏனென்றால் இந்தக் கேடு கெட்ட நாடு போட்டிக் கல்வி மூலம் உருவாக்கிய படிப்பாளிகள் பலர் ஒரு பொருளாதார நெருக்கடியின் போது நாட்டை விட்டு எப்படித் தப்பிச் செல்வது என்றுதான் சிந்தித்தார்கள்.

ஏன் அதிகம் போவான்? பொருளாதார நெருக்கடியே ஒரு விதத்தில் நாட்டின் கல்விமுறையின் தோல்விதான். முன்னாள் ஜனாதிபதி கோத்தாபய ஒரு சிந்தனைக் குழாமை உருவாக்கியிருந்தார். "வியத்மக" என்று அழைக்கப்பட்ட அச்சிந்தனைக் குழாம் நாட்டின் பெரிய படிப்பாளிகளை வைத்து உருவாக்கப்பட்டது. ஆனால் அந்த அரசாங்கம்தான் முடிவில் மக்களால் துரத்தப்பட்டது.

எனவே ஓ/எல். பரீட்சைக்குத் தோற்றிய முதிரா இளம் பிராயத்துப் பிள்ளைகளை மட்டும் குற்றம் சொல்லிக் கொண்டிருக்க முடியாது. நாட்டின் கல்வி முறைமையும் அதைப் பொருத்தமான விதத்தில் மறுசீரமைக்க முடியாத தலைவர்களும் படிப்பாளிகளும் முதற் பொறுப்பை ஏற்க வேண்டும். இரண்டாவதாக கல்வி பற்றிய சமூகத்தின் கருதுகோள்களும் அதன் விளைவாக பரீட்சைகளுக்கு கொடுக்கப்படும் அதிகரித்த அழுத்தமும் என்று பார்க்கும் பொழுது பெற்றோரும் ஆசிரியர்களும் பொறுப்புக்கூற வேண்டும். நாட்டில் இப்பொழுது பல விடயங்களுக்கும் பொறுப்புச் சொல்ல வேண்டியவர்கள் பொறுப்புச் சொல்வதில்லை. யார் மீதோ பொறுப்பை போடுகிறார்கள். அப்படித்தான் கதிரைகளை தூக்கி கூரையில் தொங்கவிட்ட அல்லது சகபிள்ளையின் சீருடை மீது மையைத் தெளித்த பிள்ளைகளின் மீதும் குற்றம் சுமத்தப்படுகின்றது.





# 'ஒரு நாடு ஒரு சட்டம்' என்ற கோட்பாடு தமிழர்களை எங்கு இழுத்துச் செல்கின்றது?

**வி.தேவராஜ்**
மூத்த ஊடகவியலாளர்

- **அ**திகாரத்தைக் கைகளில் எடுத்து அரசியலமைப்பை மீறும் தென்னிலங்கை அரசியல்வாதிகள்.
- "தகுதியற்ற தலைவர்களால் ஒரு நாடு நாசமாய்ப் போவதில்லை. தகுதியற்ற தலைவர்களை தேர்ந்தெடுக்கும் மக்களாலேயே அந்த நாடு நாசமாய்ப் போகிறது." - ஆபிரகாம் லிங்கன்

இலங்கை அரசியலில் பெரிதளவில் பேசப்படும் வார்த்தை "ஒரு நாடு ஒரு சட்டம்".. ஒரு மொழி இரு தேசம். இரு மொழி ஒரு நாடு என்று இடதுசாரிகள் அன்றே கூறினர் இந்தக் கூற்றின் தாத்பரியத்தை, யதார்த்தை ஏற்றுக் கொள்ள மறுத்த சிங்களத் தலைமைகளின் "ஒரு மொழிக் கொள்கையாலும்" அதனுடன் இணைந்து தமிழ் மக்களுக்கு எதிராக முன்னெடுத்த நடவடிக்கைகள் என்பன 30 வருடகால போரினை தோற்றுவித்தது. போரினை மௌனமாக்கியதாக, அதாவது தோற்கடித்ததாக மார் தட்டிக் கொள்ளும் ஆளும் வர்க்கம் "ஒரு நாடு ஒரு சட்டம்", ஏன்ற கோட்பாட்டை பிரகடனப்படுத்தினர். இந்த "ஒரு நாடு ஒரு சட்டம்" என்ற தனதுபிரகடனத்தை அரசாங்கம் தானே மீறி கேலிக் கூத்தாக்கியுள்ளது ஏன்று தென்னிலங்கை ஊடகம் தனது ஆசிரியர் தலையங்கத்தில் சுட்டிக் காட்டியுள்ளது.

"ஒரு நாடு ஒரு சட்டம்" "ஒரு நாடு ஒரு அரசியலமைப்பு" என்று கூறப்பட்ட போதும். நடைமுறையில் பௌத்த மேலாதிக்கத்திற்கும் சிங்களவர்களுக்கும் இதனுடன் இணைந்த ஆளும் வர்க்கக் கூட்டாளிகளுக்கும் ஒரு நாடு ஒரு சட்டத்தை மேவியதாக நடைமுறைகள் அமல்படுத்தப்படுகின்றன.

வழமையாக தமிழ் பேசும் மக்கள் தான் ஒரு நாடு ஒரு சட்டத்திற்கப்பால் விஷேட கவனிப்புக்குறியவர்களாக இருந்தனர், இன்றும் இருந்து கொண்டிருக்கின்றனர். ஆனால் தற்போது தமிழ் பேசும் மக்களுடன் ஆளும் வர்க்கத்தின் அதிருப்தியாளர்களும் சங்கிலி கொண்டு பிணைக்கப்பட்டுள்ளனர்.

"ஒரு நாடு ஒரு சட்டம்" என்ற ஏற்பாடும் கோட்பாடும் இலங்கையில் நடைமுறையில் இவ்வாறுதான் இருக்கின்றது.

இந்த இரண்டு பிரிவுக்குள்ளும் தமிழ் மக்களைப் பேன்று தமிழ் நாடாளு மன்ற உறுப்பினர்களும் உள்ளடக்கப்பட்டுள்ளனர். நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மீதான செயற்பாடுகள் இதனை உறுதிப்படுத்தியுள்ளது. நாடாளுமன்ற சிறப்புரிமை கூட ஆளும் வர்க்கக் கூட்டாளிகளுக்கு மாத்திரம் உரியதாக இனிவரும் காலங்களில் இருக்கப் போகின்றது என்பதற்கான கட்டியம் கூறும் சம்பவமாகவே நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் கைது அமைந்துள்ளது.

இத்தகைய கைதுகள் எதிர்க் கட்சிகள் மற்றும் ஆட்சியாளர்களுக்கு எதிரான அதிருப்தியாளாகள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீதும் பாயும் என்ற நிலையிலேயே தென்னிலங்கையின் பல்வேறு மட்டங்களில் இருந்தும் அபாயச் சங்கு ஊதப்படுகின்றது.

- கோதாபயவின் கோட்பாடு

"ஓரே நாடு ஓரே சட்டம்" என்ற கோட்பாடு முன்னாள் ஜனாதிபதி கோத்தபாய ராஜபக்ஷ காலத்தில் அமுலுக்கு வந்தது. அந்த கோட்பாட்டின் பாதுகாவலர்களான இன்றைய ரணில் - ராஜபக்ஷ ஆளும் வர்க்கத்தின் கைகளிலும் பாதுகாப்பாக போஸித்துப் பராமரிக்கப்படுகின்றது என்பது இரகசியம் அல்ல.

- *13 வது திருத்தம் படும்பாடு.*

*13 வது திருத்தம் தொடர்பான அமுலாக்கம் என்பது 36 வருடங்களாக கிடப்பில் போடப்பட்டுக் கிடக்கின்றது. அரசியலமைப்பின் சட்டவாக்கங்களையே அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்குமாறாக செயற்படுத்த முன்வராத ஆட்சியாளர்களே நாடாளுமன்றத்தில் கோலோச்சுகின்றனர்.*

*தற்போதும் கூட ஜனாதிபதி 13ஐ முழுமையாக நிறைவேற்றுவேன் என்று கூறுகின்றார். மறுபுறம் 13ஐ அமுல்படுத்த ஜனாதிபதி ரணில்விக்ரமசிங்கவுக்கு அதிகாரம் இல்லை என்று பொது ஜன பெரமுன கட்சியின் பொதுச் செயலாளர் பகிரங்கமாக ஊடகங்களிடம் தெரிவிக்கின்றார். நீதி அமைச்சர் கலாநிதி விஜேதாச ராஜபக்ஷ மாகாண சபைகளுக்கான பொலிஸ், காணி அதிகாரங்களை வழங்குவதுகுறித்து தீர்மானிக்கப்படவில்லை என்று வெளிப்படையாகத் தெரிவிக்கின்றார். அதாவது அரசியலமைப்பில் உள்ள ஏற்பாடுகளை நடைமுறைப்படுத்துவதைக்கூட சிங்கள அரசியல் தலைமைகளும், கட்சிகளும், அமைச்சர்களும் தடுக்க முற்படுகின்றனர்.*

*அரசியலமைப்பை மீறும்வகையில் செயற்பட இவர்களுக்கு யார் அதிகாரம் வழங்கியது. அந்த அதிகாரத்தை அவர்கள் தாமாகவே தமது கைகளில் எடுத்துக் கொண்டுள்ளனர்.*

- *சிறப்புரிமைக்குள் கஜேந்திரகுமார் எம்பிக்கு இல்லை?*

*பொலிஸாரை கைது செய்வதை தடுக்கும் அதிகாரம் தனக்கு இல்லை என சபாநாயகர் அபேவர்தன வலியுறுத்தியுள்ளார்.*

*பொலிஸாரைத் திட்டியதற்காக அரசாங்கத்தின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவரை கைது செய்ய காவல்துறை அனுமதித்திருக்குமா?*

*அல்லது கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆளும் கூட்டணிக்கு ஆதரவாக இருந்திருந்தால் அவர்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்குமா என்ற கேள்விகளும் எழும்புகின்றது.*

- *சிறப்புரிமைக்குள் தங்கம் கடத்தல்*

*நாடாளுமன்ற சிறப்புரிமைக்குள் 3.5 கிலோ தங்கம் மற்றும் கிட்டத்தட்ட 100 ஸ்மார்ட்ஃபோன்களுடன் நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் சமீபத்தில் சுங்கப் பிரிவினரால் கைது செய்யப்பட்டபோது, 10 சதவீத அபராதம் செலுத்திய பின்னர் அவர் சுதந்திரமாக வெளியேற அனுமதிக்கப்பட்டார்.*

*அரசியல் தொடர்புகள் இல்லாத கடத்தல்காரர்கள் எவராவது பிடிபட்டிருந்தால் சட்டவிரோதப் பொருட்களின் மொத்தப் பெறுமதிக்கு இணையான அபராதம் செலுத்த வேண்டியிருக்கும் என சுட்டிக்காட்டியுள்ள எதிர்க்கட்சி, பணப்பரிவர்த்தனை சட்டத்தை மீறியதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் ரஹீமுக்கு எதிராக ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என வினவியுள்ளது.*

*(தொடர்ச்சி 13ம் பக்கம்)*



# ஸ்ரீலங்கா முன்னை நாள் தமிழ் பொலிஸ் அலுவலர் கழகம் (கனடா)
# Sri Lankan Ex-Tamil Police Officers' Club (Canada)

## ஸ்ரீலங்கா முன்னைநாள் தமிழ் பொலிஸ் அலுவலர் கழகத்தின் வருடாந்த ஒன்றுகூடலும், விளையாட்டுப் போட்டியும் 2023



**காலம் :**
**ஜூலை 01, 2023 (சனிக்கிழமை)**
**காலை 10:00 மணிக்கு**

**இடம்:**
**Morning Side Parking lot # 5**
**Morningside / Ellesmere**

இவ் ஒன்றுகூடலில் சகல வயதினருக்கான விளையாட்டுப் போட்டிகளும், விசேட போட்டிகளாக கயிறு இழுத்தல், உதைபந்தாட்டம், கிறிக்கெற், தம்பதியர்களுக்கான போட்டிகள், வேகநடைப் போட்டி என்பன நடைபெற உள்ளன. பங்குபெற விரும்புவோர் மைதானத்தில் காலை 10 மணிக்கு தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளும்படி கேட்டுக் கொள்கின்றோம்.
இடைவேளையின் போது அனைவருக்கும் மதியபோசனமும், B.B.Q உம், குளிர்பானமும் வழங்கப்படும்.
வெற்றி பெறுபவர்களுக்கு பெறுமதிமிக்க பரிசுகள் வழங்கப்படும்.

இவ் ஒன்றுகூடலுக்கு கழக உறுப்பினர்கள், அவர்கள் குடும்பத்தினர், அன்பர்கள், ஆதரவாளர்கள் அனைவரும் திரண்டு வருகை தந்து ஒன்றுகூடலைச் சிறப்பிக்குமாறு நிர்வாக சபையினர் அன்புடன் கேட்டுக் கொள்கின்றனர்.

*Canada Day Celebration* மிகச்சிறப்பாக கொண்டாடப்பட இருக்கிறது.



மேலதிக தொடர்புகளுக்கு:

சாம். தர்மகுலசிங்கம் : 647 - 882 - 1050
கே.சிவபாலன் : 905 - 813 - 0605
எஸ். அரியதாஸ் : 416 - 321 - 5703
கே.மனோகரன் : 647 - 720 - 5627



# Dr. புஷ்பா வன்னித்தம்பி
## பல் வைத்தியர்

# Dr. Pushpa.V & Associates
## Dentist

**New Patients Welcome**

Open 7 Days a week

Sunday by Appointment only

சகல விதமான பல்வைத்திய சேவைகளுக்கும்

**Scarborough**
1200, Markham Road,
Suite # 119, Scarborough
ON M1H 3C3
(Markham / Ellesmere)
**416-289-7187**

**Markham**
7595, Markham Road,
Suite #4,
ON. L3S 0B6
(Markham / 14th, Opposite to Costco)
**905-201-8900**



(11ம் பக்கத் தொடர்ச்சி)

## 'ஒரு நாடு ஒரு சட்டம்'...

• அனைத்து எம்.பி.க்களும் சமம்?

அனைத்து எம்.பி.க்களும் சமமாக நடத்தப்பட வேண்டும். நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் வடமராட்சியில் செய்ததாகக் கூறப்படுவது இராஜாங்க அமைச்சர் டயானா கமகேவுக்கு எதிரான குற்றச்சாட்டுகளுடன் ஒப்பிடுகையில் அற்பமானது.

பிடியாணை இன்றி பொலிஸாரால் கைது செய்யப்படலாம் என கொழும்பு பிரதான நீதவான் தெரிவித்திருந்தும் இராஜாங்க அமைச்சரை குற்றப் புலனாய்வுப் பிரிவினர் கைது செய்யவில்லை.

சட்டத்தின் முன் அனைத்து எம்.பி.க்களும் சமம் என்று அரசாங்கம் நினைக்கிறதா?, அல்லது ஆளுந்தரப்பு நாடாளுமன்றக் குழு உறுப்பினர்கள் மற்றவர்களை விட அதி விஷேடமாக, மேலானவர்களாகக் கௌரவப்படுத்துகின்றதா என்ற கேள்வியும் எழும்புகின்றது.

• 2018இல் நாடாளுமன்றில் வெறித்தனம்.

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையிலான மோதல்களைப் பொறுத்தவரை, 2018 ஆம் ஆண்டின் பிற்பகுதியில், பொதுஜனபெரமுன நாடாளுமன்றக் குழுவில் இருந்த ராஜபக்ச விசுவாசிகள் நாடாளுமன்றத்தில் வெறித்தனமாகச் செயற்பட்டமை பதிவுகளாக உள்ளன..

அன்றைய ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரால் அவசர அவசரமாக உருவாக்கப்பட்ட 52 நாள் அரசாங்கத்தைத் தொடர்ந்து பொதுஜனபெரமுன நாடாளுமன்ற உறுப்பினர்கள் சபையில் வன்முறையில் ஈடுபட்டதுடன், சபாநாயகர் கரு ஜயசூரியவை அச்சுறுத்தும் வகையில் நடந்து கொண்டனர்.

பின்னர் அவையில் இருந்த மரச்சாமான்கள் மற்றும் ஒலிவாங்கிகளை சேதப்படுத்தியதுடன், சபாநாயகரை பாதுகாக்கும் காவலர்கள் மீது நாற்காலிகளை வீசினர்.

பொதுச் சொத்துக்களை சேதப்படுத்துவது ஜாமீனில் வெளிவர முடியாத குற்றமாகும். ஆனால் அந்த வன்முறை எம்.பி.க்கள் மீது எந்த வழக்கும் இதுவரை பதிவு செய்யப்படவில்லை.

• பொன்னம்பலத்துக்கு ஒரு சட்டமும் கமகேவுக்கு இன்னொரு சட்டமும் ஏன்?

யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தை கைது செய்வதில் காட்டிய அதேயளவு வேகத்தை, இராஜாங்க அமைச்சர் டயானா கமகேவை கைது செய்வதில் பொலிசார் காட்டத் தவறியுள்ளனர் என குருநாகல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார ஜயமஹா நாடாளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

இரண்டு கடவுச்சீட்டுகளைப் பயன்படுத்தியதால், குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் அவரைக் காவலில் எடுக்க முடியும் என நீதிமன்றங்கள் தெளிவாகக் கூறியுள்ளன" என்றும் குறிப்பிட்டுள்ள நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார ஜயமஹா,

"டயானா கமகே 2004 ஆம் ஆண்டு முதல் இங்கிலாந்து குடியுரிமை பெற்றவர் என்றும், அன்றிலிருந்து இங்கிலாந்துகடவுச்சீட்டுகளைப்பயன்படுத்துவதாகவும் குடிவரவுக் கட்டுப்பாட்டாளர் நீதிமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

ஒரு வெளிநாட்டுக் குடிமகன் சட்ட விரோதமாக சபையில் அமர்வதைத் தடுக்கும் பொறுப்பு சபாநாயகருக்கும் இருக்க வேண்டும்," என்றும் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார ஜயமஹா சுட்டிக்காட்டுகின்றார்.

இராஜாங்க அமைச்சர்கமகேவுக்கு நாடாளுமன்றத்தில் அமர உரிமை இல்லை என ஜயமஹா தெரிவித்துள்ளார். "போலி கடவுச்சீட்டுக்களை வைத்திருந்ததாக அவர் மீதான வழக்கு மீண்டும்மீண்டும் ஒத்திவைக்கப்படுகிறது என்பதையும் அவர் நாடாளுமன்றத்தில் சுட்டிக் காட்டியுள்ளார்.

இவ்வாறு சங்கிலித் தொடராக தனக்குத்தானே மண்ணை வாரிப் போட்டுக் கொண்டுள்ள ரணில் - ராஜபக்ஷ ஆளும் வர்க்கம் நான்கு விரல்கள் தம்மை நோக்கியுள்ள நிலையில் நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின்மீது சுட்டுவிரலை நீட்டித்தன்னைத்தானே அசிங்கப்படுத்தியுள்ளது.

• ஆபிரகாம் லிங்கன்.

"தகுதியற்ற தலைவர்களால் ஒரு நாடு நாசமாய்ப் போவதில்லை.

தகுதியற்ற தலைவர்களை தேர்ந்தெடுக்கும் மக்களாலேயே அந்த நாடு நாசமாய்ப் போகிறது." என்று ஆபிரகாம் லிங்கன் குறிப்பிட்டுள்ளார்.

• ஆப்பிழுத்த குரங்காக தென்னிலங்கை மக்கள்

ஆபிரகாம் லிங்கத்தின் மேற் கூறிய கூற்று இன்றைய இலங்கையின் நிகழ்கால அரசியல் வரலாற்றில் எத்துணை யதார்த்தமானது, நிதர்சனமானது என்பதை தென்னிலங்கை மக்கள் காலம் கடந்தே உணர்ந்துள்ளனர். தனது பணத்தினால் தனக்குத்தானே சூனியம் வைத்துக் கொள்வதுபோல் தென்னிலங்கை மக்கள் தாம் இட்ட "புள்ளடியால்" ஆப்பிழுத்த குரங்காக அவதிப்பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

தென்னிலங்கை மக்கள் தமது மீட்சிக்காக இன்னொரு "புள்ளடிக்குத்" தயாராக இருந்தபோதும் அதற்கான சந்தர்ப்பத்தை வழங்க ரணில் - ராஜபக்ஷ ஆட்சியாளர்கள் இப்போதைக்குத் தயாராக இல்லை.

"அரசாங்கத்தின் மக்களாக விளங்கும் நாட்டு மக்களில் இனங்களின் அடிப்படையில் காவல்துறையினர் பணியாற்றுவதும் அதுவும் யுத்தத்தின் பாதிப்புக்களிலிருந்தும் அரசாங்கத்தின் அடக்கு முறையிலிருந்து முற்றாக வெளியேற முடியாத பாதிப்புக்களுடன் தங்கள் தாயக மண்ணில் வாழும் தமிழர்களுக்கு தொடர்ந்து தொந்தரவு செய்யவும். தட்டிக் கேட்டால் துப்பாக்கியை நீட்டுவது போன்ற சம்பவங்கள் நமது மண்ணில் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன".

"அவற்றை தட்டிக் கேட்பதற்கு ஆட்கள் இல்லாததால் மக்கள் என்னும் "ஆட்டுக்குட்டிகள்" அரசபயங்கரவாதத்திற்கு இனியும் இரையாகிப் போய்விடக்கூடாது என்பதில் அக்கறை கொள்ளும் அரசியல் மற்றும் சமூகத் தலைவர்கள் எமக்கு உடனடியாகத் தேவை. என கனடா உதயன் ஆசிரியர் தலையங்கத்தில் (09.06.2023) பிரதம ஆசிரியர் என்.லோகேந்திரலிங்கம் சுட்டிக் காட்டியுள்ளார்.

"இரு மொழி ஒரு நாடு, ஒரு மொழி இரு நாடு" என்ற இடதுசாரிகளின் கூற்றின் யதார்த்தத்தை இலங்கை பார்த்துள்ளது. தற்போது அதே பாணியில் ஒரு நாடு ஒரு சட்டம் என்ற கோட்பாடும் இலங்கையை எங்கு இழுத்துச் செல்ல உள்ளது? குறிப்பாக தமிழ் மக்களை எங்கு இழுத்துச் செல்ல உள்ளது என்ற சிந்தனையை கஜேந்திர குமார்பொன்னம்பலம் எம். பியின் கைது தூரநோக்குடன் சிந்திக்க வைத்துள்ளது.

Email : vathevaraj@gmail.com
14th June 2023




உதயனின் பிரத்தியேகச் செய்தி

# விநாயகர் விமர்சனம்

## (கனடா உதயனின் பிரத்தியேக சிறப்புக் கட்டுரைத்தொடர் - பகுதி 18)

## நூடில்ஸ் முறுக்கானது; மிக்ஸரில் கஜு குறைந்தது

**- கொழும்பிலிருந்து கலாநிதி முருகேசு கணேசமூர்த்தி**




மேகி maggi இந்தப் பெயரைக் கேட்டவுடன் உங்கள் நினைவுக்கு வருவதென்ன? உம்பா உம்பா உம்பா என்று படு கவர்ச்சியாக ரம்யாகிருஷ்ணனும் கமல்ஹாசன் உள்ளிட்ட ஐந்து கதாநாயகர்களும் ஆடும் பஞ்சதந்திரப்படப்பாடல் மனக்கண்ணில் வந்து போகிறதா? தவறில்லை. கடந்து வந்த பாதையில் கண்டவை தானே நினைவுக்கு வரும்? இலங்கையின் சோம்பேறி இல்லத்தரசிகளுக்கு மேகி என்றவுடன் தேங்காய்ப்பால் பவுடர் பக்கெட் நினைவுக்கு வரும். இளைய சந்ததி உட்பட இலங்கையிலும் இந்தியாவிலும் வாழும் பலருக்கும் நினைவுக்கு வருவது மேகி துரித நூடில்ஸ்.

ஒரு கோப்பைத் துண்ணீரைக் கொதிக்கவை. பக்கட்டிலிருந்து நூடில்லை உடைத்து அதில் போடு-கிண்டு. சிறிய பக்கட்டில் உள்ள சேர்மானங்களை அதில் போடு-மீண்டும் கிண்டு. இரண்டு நிமிடங்களில் தயார். அப்படியே உறிஞ்சி உறிஞ்சி சாப்பிடு. இவ்வளவு தான் அதன் தாற்பரியம். எங்கள் வீட்டு அம்மணி அதில் உள்ள நீரைவடித்துவிட்டுதான் சாப்பிடக் கொடுப்பா. அந்தத் தண்ணீரில் அஜினமோட்டோ கலந்திருக்காம். அது கூடாதாம். சில நூடில்ஸ் வகைகளிலே ஒரு எண்ணெய் பெக்கற்றும் வைத்திருப்பார்கள். அதையும் போட்டுக்கிண்டினால் அந்த நாற்றத்திற்கு ஈடு இணை ஏதுமில்லை. வீடு பூராகவும் நாறும். ஆனால் பிறகு நமது மூக்கு அதற்குப் பழகிவிடும்.

சிலவேளைகளில் அதிகாலை இரண்டு மூன்று மணிக்கெல்லாம் சமயலறையில் கடா புடா சத்தம் கேட்கும். கள்ளனோ? என்று போய்ப்பார்த்தால் எங்கள் வீட்டு சிகாமணிகள் பாத்திரங்களை உருட்டிக்கொண்டிருப்பார்கள். என்னடா செய்கிறீர்கள் என்றால் நூடில்ஸ் அவிக்கிறோம் என்பார்கள். சரி, பிள்ளைகள் இரவிரவாக கண்விழித்துப் படித்துக் களைத்து பசியில் நூடில்ஸ் தயாரிக்கிறார்கள் என்று தப்புக்கணக்கு போடவேண்டாம். இரவு முழுவதும் கொம்பியூட்டர் கேம் விளையாடிக் களைத்து அதிகாலையில் கிச்சனுக்குள் புகுந்திருக்கிறார்கள்.

இங்கே இலங்கையில் என்னுடைய நண்பர் ஒருவர் இருக்கிறார். மெத்தப் படித்தவர்தான். என்னுடைய எழுத்துக்களை நார் நாராகக் கிழித்துத் தொங்க விடுவார். நீர் பொருளாதாரத்தில் ஒரு டொக்டரேட்டும் முடித்துவிட்ட பிறகு பேப்பருக்கு இப்படி அன்ப்ரொப'னலாக எழுதுகிறீரே என்று பெரிய கிழியல் நடக்கும். உண்மை என்னவென்றால் பல்கலைக்கழக விரிவுரையாளர்களாக இருப்பவர்களில் பலருக்கு பொருளாதார விவகாரங்களை நானும் நீங்களும் பரிந்து கொள்ளும் வகையில் இலகுவாகச் சொல்ல அல்லது எழுத வராது. அது ஆங்கிலத்திலோ தமிழிலோ அல்லது சிங்களத்திலோ எந்த மொழியில் சொல்வதானாலும் அப்படித்தான். நானும் கூட அதிலிருந்து விடுபட மிகவும் சிரமப்பட்டிருக்கிறேன். டவுன் டு த ஏர்த் இக்கோனோமிக்ஸ் (down to the earth Economics) என்பது என்னவென்றால் பொருளியல் பற்றித் தெரியாத ஒருவரும் இலகுவில் புரிந்து கொள்ளும் வகையில் அதைச் சொல்வது. என்னைப் பொறுத்தவரையில் கடினமான பொருளாதார எண்ணக்கருத்துகளை எல்லோருக்கும் தெரிந்த உதாரணங்களை வைத்து இலகுவாகச் சொல்வது தான் பொருத்தம் என நினைக்கிறேன். தொழில் சார்ந்த ரீதியில், தொழில் நுட்பரீதியில் எழுதுவதற்கு வேறு கடும் சஞ்சிகைகள் உள்ளன. இதையே எனது நண்பருக்குச் சொன்னேன். சொன்னால் கேட்க மாட்டேன் என்கிறார். நானென்றால் ஒரு போதும் இப்படி இறங்கிப்போய் எழுத மாட்டேன் என்கிறார். நான் என்பது நீ அல்லவே தேவ தேவா என்று பாடிவிட்டு எனக்கும் உங்களுக்கும் இடையிலான நமது பாமரத்தனமான உரையாடலைத் தொடருகிறேன். குறித்த நண்பரின் உறவினர்கள் பலர் கனடாவில் பருத்த நிலையில் இருக்கிறார்கள். அவ்வப்போது அங்கிருந்து அவருக்கு நிவாரணப் பொதிகள் வரும். எனது நண்பர் நல்லவர். "நெல்லுக்கு இறைத்த நீர் வாய்க்கால் வழியோடிப் புல்லுக்கும் அங்கே பொசியுமாம்" போல் ஓரிரு தடவை அந்த நிவாரணங்களில் இருந்து ஒருசிலவற்றை நானும் சுவைபார்க்க நமது நண்பரின் ஈகை துணை புரிந்தது. கனேடிய நூடில்ஸ் வகைகளையும் சூப் வகைகளையும் சுவைபார்க்க முடிந்தது.



அங்கும் சிறிய பசிக்கான நிவாரணமாக அவை பயன்படுத்தப்படுவது தெரிகிறது. ஐரோப்பாவில் நான் வாழ்ந்த காலப்பகுதியிலும் சமைக்கப் பஞ்சி என்றால் ஆல்பர்ட் ஹைனிலோ அல்டி சூப்பர் மார்கட்டிலோ வார இறுதியில் புகுந்தால் மலிவு விலையில் நூடில்ஸ வகைகள், சூப் பக்கற்றுகள் மற்றும் புகையூட்டிய சிக்கன் வகையறாக்கள் இருக்கும். அவற்றுடன் பட்டினியில்லாமல் வாழ்க்கை கழியும். இலங்கையில் இந்த நூடுல்ஸ் வகைகள் 1980களின் பிற்பகுதியில் அறிமுகப்படுத்தப்பட்டதாக ஒரு நினைவு. புதிதாக எதை அறிமுகப்படுத்தினாலும் என்ன ஏதென்று கேள்வியின்றி வாங்கிச் சாப்பிடப் பழக்கப்பட்ட ஒரு கூட்டம் இலங்கையின் மக்கள்.



இந்தியாவின் தமிழ்நாட்டில் மெகி நூடில்ஸ் அறிமுகப்படுத்தப்பட்ட கதையை சுவைபடச் சொல்லிப் பானார் கடந்த வாரக்கட்டுரையின் கதாநாயகன் அன்பர் சிவராமகிருஷ்ணன் அவர்கள். தமிழ்நாட்டின் தென்மாவட்டங்களில் மெகி நூடில்ஸ் அறிமுகம் செய்யப்பட்ட பாட்டை கதை கதையாகக் கூறினார். அதில் ஒருவிடயம் எனக்கு மிகச் சுவாரசியமானதாகத் தென்பட்டது. வழமையாக ஒரு புதிய பொருளை அறிமுகம் செய்து வைக்கும் போது இலவசமாகச் சுவைபார்க்கக் கொடுப்பது ஒரு சந்தைப்படுத்தல் உத்தி.

நீங்கள் இலங்கையில் இருந்தபோது உங்கள் வீடுகளில் பழைய பெரிய ஹோர்லிக்ஸ் கண்ணாடிச் சாடிகள் இருந்நது ஞாபகமா? பிரித்தானியர் காலத்திலே ஹோர்லிக்ஸ் அறிமுகப்படுத்தப்பட்ட போது மிகப் பெரிய கண்ணாடிச் சாடிகளிலே இலவசமாக வழங்கப்பட்டே பழக்கப்படுத்தப்பட்டது.




இதே போல நூடுல்ஸ் வகைகளும் ஆரம்பத்திலே சாப்பிட்டுப்பார்க்க சாம்பல்ஸ் கொடுக்கபட்டன. அவற்றிலே சேர்க்கப்படும் சுவையூட்டிப் பக்கட்டே நூடுல்சுக்கு நல்ல சுவை தந்தது. என்னுடைய ஞாபகம் சரியானால் 100கிராம் மெகிநூடில்ஸ் பக்கட் 7ரூபா 50 சதத்திற்கு விற்கப்பட்டது பின்னர் அதன் விலை படிப்படியாகக் கூடிய அதே வேளை அதன் கொள்ளளவு படிப்படியாதக் குறைந்து சென்று இப்போது 73 கிராம் 140ரூபாவுக்கு விற்கப்படுகிறது. கடந்த வாரம் நாம் அறிமுகப்படுத்திய சுருக்க வீக்கம் srinkflation மெகி நூடில்ஸ் தொடர்பிலும் பக்காவாகச் செயற்படுவதைக் காண முடிகிறது. இது போல சைஸ் குறைந்து விலை அதிகரித்த பல பொருள்களை நாம் இக்காலப்பகுதியில் அடையாளப்படுத்த முடியும். ஆனால் இந்தியாவிலே பொருளின் அளவைச் சுருக்கி விலையைக் கூட்டினால் வாடிக்கையாளர்கள் ஒத்துக்கொள்ள மாட்டார்கள். இலங்கையிலே உள்ள கே எப் சி(KFC)யில் சிக்கன் பக்கட் (Bucket) ஒன்றை வாங்கினீர்கள் என்றால் விலை அதிகமாகவும் அதில் உள்ள துண்டுகளின் அளவு மெலிந்து மிக மிக சிறியதாகவும் இருப்பதைக் கவனித்திருப்பீர்கள். ஒரு தடவை சென்னையில் போய் இறங்க இரவாகிவிட்டது. பூந்தமல்லிச் சாலையில் ஒரு விடுதி. அதற்கு அருகில் ஒரு கே எப் சி. சரி ஒரு சிக்கன் பக்கட் வாங்கினால் போதும் என்று வாங்கினோம். அதன் சைசைப்பார்க்கவே பயமாக இருந்தது. அவ்வளவு பெரிது. சாப்பிட முடியாமல் அரைவாசியை எறிந்து விட்டு வந்தது வேறுகதை.

இந்தியாவிலே ஒரு புதிய பொருளை சந்தைக்கு அறிமுகம் செய்து வெற்றிகரமாக இயங்குவதும் இலகுவானதல்ல. மெக் டொனால்ட் நிறுவனம் உலகம் பூராகவும் வெற்றிகரமாக விற்றுத் தீர்க்கும் ஆனானப்பட்ட பிக் மெக் பேர்கரையே (big Mac burger) சீ இது என்ன சாப்பாடு சப்பென்று இருக்கிறதென்று ஓரங்கட்டியவர்கள் தமிழ்நாட்டுகாரர்கள். பின்னர் கொஞ்சம் புளிப்பு காரத்துடன் சில வேறுபாடுகளை செய்த பின்னரே மெக்டோனாட்லுக்கு வியாபாரம் சூடுபிடித்தது.

மதுரையை மையமாகக் கொண்டு தென் தமிழகப்பகுதிக்கு நூடில்ஸ் வினியோகம் செய்யத் தீர்மானித்த மெகி நிறுவனம் (நெஸ்லே) தனது ஆளணியுடன் பொருள் அறிமுகத்தைச் செய்தது. எதிர்பார்த்தது போலவே மக்களிடமிருந்து அதற்கு உடனடி வரவேற்புக் கிடைக்கவில்லை. படிப்படியாகவே கொள்ளவனவுக் கட்டளைகள் வந்து சேர்ந்தன. ஆனால் ஒரேயொரு வினியோகத்தர் மாத்திரம் தொடர்ச்சியாக கொள்வனவுக் கட்டளைகளைச் சமர்ப்பித்துக் கொண்டிருந்தார். அதுவும் கடனுக்கு அல்ல. காசை உடனடியாகச் செலுத்தி பொருளைப் பெற்றுக் கொண்டிருந்தார். என்ன அதிசயமடா இது. வேறெங்கும் இல்லாத அதிசயமாய் கொள்வனவுக் கட்டளைகள் குவிகிறதே என்று பார்க்கவிரும்பிய அந்த நிறுவனம் அங்கு தனது அதிகாரிகளை அனுப்பியது. அவர்கள் அங்கு போய் பார்த்துவிட்டு தலையிலே கைவைத்துக் கொண்டார்கள். காரணம் குறித்த வினியோகத்தர் தான் வாங்கிய மெகி நூடில்ஸ் பக்கட் எல்லாவற்றையும் பிரித்து ஒரு பெரிய சாடியிலே போட்டு சுவையூட்டியையும் தூவி மிக்ஸர் விற்பது போல சிறிய பொட்டலம் கட்டி விற்றிருக்கிறார். சுவைபார்த்த வாடிக்கையாளர்களுக்கு உப்புச்சுவைகலந்த மெகி நூடில்ஸ் முறுக்குப்போல நறுநறுவென கடிபட்டு புதிய அனுபவம் தந்திருக்கிறது. அதனால் வியாபாரம் அமோகமாக நடந்திருக்கிறது. ஏன் ஐயா இப்படிச் செய்தீர்கள் என்று கேட்க உனக்கென்னையா? உனக்கு பொருள் விற்றால் சரிதானே? இதோ பார் முழுப்பொருளையும் காசுகொடுத்துத்தான் வாங்கியிருக்கிறேன் கடனுக்கல்ல. நான் எப்படி விற்றால் உனக்கென்ன? தண்ணியை ஊத்தி கொதிக்க வைத்துத் தின்னாலும் ஒன்றுதான் தின்று விட்டு தண்ணியைக் குடித்தாலும் ஒன்று தான். இதில் என்ன பிழை என்று கத்தியிருக்கிறார்.

அதை இப்படித்தான் சமைக்க வேண்டும் - சாப்பிடவேண்டும் என்று டெஸ்டு எல்லாம் செய்து இலவசமாக எல்லாம் மக்களுக்கு கொடுத்து வியாபாரம் பண்ண மெகி நிறுவனம் நினைத்தால் "அண்ணாச்சி" பொருள் வேறாக்கம் செய்து முறுக்கு வியாபாரம் செய்து பணம் பண்ணியிருக்கிறார். ஒரு பொருளை சந்தைக்கு சரியான முறையில் அறிமுகப்படுத்தினால் மாத்திரம் போதாது. அப்பொருளை வாடிக்கையாளர்கள் - அப்பொருளின் மூலம் எதிர்பார்க்கப்படும் சரியான நோக்கத்தை அடைகிறாரா என்பதை உறுதிப்படுத்த வேண்டிய பொறுப்பும் உரிய நிறுவனங்களுக்கு உண்டு. எதிர்பார்க்கபட்ட நோக்கத்திற்காக அன்றி வேறு நோக்கத்திற்காகப் பயன்படுத்தப்படும் ஏராளமான பொருள்கள் நம் மத்தியில் உண்டு.

ஒரு கணக்கெடுப்புச் செய்து பாருங்கள். இந்த மிக்ஸர் பற்றிச் சொன்னேனல்லவா? அது பெரும்பாலும் என்ன நோக்கத்திற்காகப் பயன்படும் என்று நான் சொல்லித் தெரிய வேண்டுமா என்ன? அது இல்லாமல் தீர்த்தமாட முடியாதல்லவா? கடலைமாவு, நிலக்கடலை, பொட்டுக்கடலை, கஜு போன்ற தரமான உள்ளீடுகளைப் பயன்படுத்தி அவற்றைச் செய்பவர்களும் உண்டு மஞ்சள் பூசணிக்காயைப் பயன்படுத்தி அதைச் செய்யலாமென நம்பகரமான வட்டாரங்கள் தெரிவித்தன. ஒரு கிலோ முறுக்கு கோவிட்டுக்கு முன்னர் ஆயிரம் ரூபாவாக இருந்தது. இப்போது அரைக்கிலோ தொள்ளாயிரம் ரூபாவுக்கு வெள்ளவத்தை டப்ளியூ சில்வா மாவத்தையில் உள்ள ஒரு கடையில் விற்கிறார்கள். முன்பு அரைக்கிலோ மிக்ஸரில் ஒரு பத்து கஜு இருக்கும். ஆனால் அதைக்காணவில்லையே நேற்றோடு. பணவீக்கம் ஏற்படும் போது பொருளின் அளவு மாத்திரமல்ல அதன் தரமும் குறைந்து போகும் என்பதற்கு மிக்ஸர் நல்ல உதாரணம். மிக்ஸரை வாங்கி மெல்லுங்கள் ஆனால் தீர்ரதமாடாதீர்கள்.






அனவரும் ஒன்று சேரும்போது எங்களுக்காக ஒரு நகரத்தை வெல்ல முடியும்.

பின்வரும் விடயங்களில் சமூகத்துடன் இணைந்து பணிபுரிவேன் என்று உறுதியளிக்கின்றேன்.

- ஸ்காபரோவில் கட்டப்படும் தமிழ் சமூக மையப் பணியை, உரிய காலத்தில் நிறைவு செய்து, அம்மையம் தொடர்ந்து இயங்குவதற்குத் தேவையான ஆதரவையும் தொடர்ச்சியாக அளித்தல்.
- தடங்கலுக்குள்ளான ரொரண்டோ யாழ்ப்பாண கூட்டு ஒப்பந்தத்தை அமுல்படுத்தி, ரொரண்டோ யாழ்ப்பாணதிற்கிடையான உறவை வலுப்படுத்தல்.
- ஸ்காபரோ குடியிருப்பாளர்களுக்குத் தேவையான வளங்கள், சேவைகள், மற்றும் வாய்ப்புகளை இலகுவாகப் பெறும்படி செய்தல்.

**JUNE 26**










நீதன் சண்,
கல்விச் சபை
உபதலைவர்

ரொரண்டோவின் அடுத்த மேயராக ஒலிவியா செள அவர்களை அங்கீகரிப்பதில் மிக்க மகிழ்ச்சி அடைகின்றேன். நான் ஒலிவியா அவர்களுடன் இரண்டு தசாப்தங்களாகப் பணி புரிந்துள்ளேன். ஒரு நீதியான, ஒன்றிணைந்த சமூகத்தைக் கட்டியெழுப்புவதற்கான அவரது ஆர்வத்தையும், அர்ப்பணிப்பையும் பாராட்டுகின்றேன்.

பாடசாலை அறங்காவலர், நகர கவுன்சிலர், மற்றும் பாராளுமன்ற உறுப்பினர் ஆகிய பதவிகளில் அவர் பணிபுரிந்த காலத்தில், இளைஞர்கள், குழந்தைகள், மற்றும் அண்மையில் வந்த குடிவரவாளர், ஆகியோர்க்கான அவரது ஆதரவு, மிக வலுவுடையதாகவிருந்தது.

வீதிகளில் நின்று நீதி கேட்டு நாம் போராடிய சமயம், ஒலிவியா செள எம்முடன் ஒன்றாக நின்றவர். ஏனைய அரசியல் வாதிகள் தயக்கம் காட்டிய வேளை, ஒலிவியா எமக்காகப் பேசுவதற்கு அஞ்சவில்லை.

எங்கள் நகரத்து மக்களின் நம்பிக்கையைப் பெற்ற ஒருவரே மேயராகப் பணிபுரிந்து ரொரண்டோ நகர சபையில் எமது குரலாக ஒலிக்கத் தகுதி உடையவர் என்பது எனக்குத் தெரியும்.

## "கனடா இந்து" வழங்கும் துர்க்கேஸ்வர மஹாயாக

# துர்க்கேஸ்வரத்தில்



## 18-6-2023 ஞாயிறு

## துர்க்கேஸ்வரம் ஸ்ரீதுர்க்காதேவி ஐந்து தள ராஜகோபுரத்துடன்

## அருள் அதிர்வுகளை உருவேற்ற உலகநாடுகளில் இருந்து 30க்கும் மேற்பட்ட குருமார்கள் கடந்த வாரம் வருகை தந்தனர்

றொறன்ரோ, துர்க்கேஸ்வரம் ஸ்ரீதுர்க்காதேவி அம்பாள் திருக்கோவிலின் மஹாயாக மஹாகும்பாபிஷேக மஹாவிழாவானது எதிர்வரும் 18-6-2023 ஞாயிற்றுக்கிழமை நடைபெற உள்ளது. கனடாவில் முதன் முதலாக 48 தின யந்திர பூஜையுடனும் 12 தினம் கிரியைகளுடனும் 12 கால யாகத்துடனும் 48 தின மண்டலாபிஷேகத்துடனும் இந்த மஹாகும்பாபிஷேகம் நிகழவிருக்கிறது. பல்வேறு நாடுகளில் உள்ள வரலாற்றுச் சிறப்புமிக்க அருள்மிகு திருக்கோவில்களில் இருந்து சிவாச்சாரியர்கள் வருகை தருகின்றனர். ஆயிரக்கணக்கான மஹாகும்பபி'ேகங்களை உலகெங்கும் நிகழ்த்திய பிள்ளையார்பட்டி டாக்டர். கி.பிச்சைக் குருக்களின் தலைமையில் மஹாகும்பாபிஷேகம் நடைபெறஉள்ளது



## துர்க்கேஸ்வரத்தில் பக்தர் நிகழ்த்தும் தீபஸ்தாபனத்துடன் கூடிய தீபலட்சுமி பூஜை 16-6-2023 வெள்ளி

பாலரூபத்தில் ஸ்தாபிக்கப்பெற்று பாலாலயத்தில் வீற்றிருக்கும் தெய்வ சக்திகளை, கிரியைகள் மூலமாகவும் மத்திரபூர்வமாகவும் வியாபகமாக்கி, 48 தினங்கள் மந்திரங்களாலும் கிரியைகளாலும் பூஜிக்கப்பெற்ற சக்தி வாய்ந்த யந்திரங்களுடன் ஒன்று சேர்த்து, புதிதாக புனருத்தாரணம் செய்த ஆலயத்தினுள் வரவழைக்கும் போது, முதலாவதாக செய்யப்பெறும் தீபஸ்தாபனம் மேன்மைமிக்கது. சுமங்கலிப் பெண்களும் கன்னிப் பெண்களும் இணைந்து இவ்வழிபாட்டினைச் செய்யவுள்ளனர். பொதுவாக வரலட்சுமி விரத தினத்தில் பக்தர்கள் திருவிளக்குப் பூஜை செய்வார்கள். ஆனால், தீபஸ்தாபனத்தின் போது, தீபலட்சுமிக்கு பூஜையும் அத்துடன் தீபங்களை புதிய ஆலயத்தில் ஸ்தாபிக்கும் பேறும் கிடைக்கின்றது.




## கனடாவில் நிகழும்

## மஹாகும்பாபிஷேக மஹாவிழாவுக்கான சிறப்பிதழ்

# மஹாகும்பாபிஷேகம்

## காலை 6.00 மணி முதல்

## அம்பாள் தேவஸ்தானம்

## புதிதாய் புனர்நிர்மாணம்

## துர்க்கேஸ்வரத்தில் கிடைத்தற்கரிய பெரும் பேறு

### 18-6-2023 ஞாயிறு

**அதிகாலை 4:00 மணி முதல் காலை 6:00 மணி வரை**

12ம் கால யாக பூஜை, ஸ்பர்சாஹுதி, மஹாபூர்ணாகுதி, தீபாராதனை, நவசக்தி அர்ச்சனை, சதுர்வேத, ஸ்தோத்ர, திருமுறை பாராயணம், யாத்திராதானம், கும்பங்கள் (கடங்கள்) வீதிவலம் முதலியன

**காலை 6:30 மணிக்கு விமான (ஸ்தூபி) கும்பாபிஷேகம்**

**காலை 7:00 மணிக்கு ராஜகோபுர கும்பாபிஷேகம்**

**காலை 7:28 மணி முதல் காலை 7:40 மணிக்குள்**
**மஹாகணபதி, ஸ்ரீதுர்க்காதேவி மற்றும் அனைத்து மூர்த்திகளுக்கும்**

### மஹாகும்பாபிஷேகம்

தொடர்ந்து தசதர்சனை, யஜமானபிஷேகம், மஹாபிஷேகம் விஷேடபூஜை, தீபாராதனை, அர்ச்சனைகள் முதலியன

**பகல் 12:30 மணிமுதல் அன்னதானம் வழங்கப்படும்**

**மாலை 5:30 மணி முதல் இரவு 10:00 மணி வரை**

சாயரட்சை பூஜை, விஷேட இசை நிகழ்ச்சி, வசந்தமண்டப பூஜை, விநாயகர், ஸ்ரீதுர்க்காதேவி, மஹாலட்சுமி, சரஸ்வதிதேவி, முருகப்பெருமான் ஆகிய பஞ்சமூர்த்திகள் முறையே மூஷிகம், சிங்கம், யானை, அன்னம், மயில் ஆகிய வாகனங்களில் ஆரோகணித்து திருவீதிவலம் வந்து அருள்புரிவர்

## மாபெரும் வழிபாடு

## துர்க்கேஸ்வரத்தில் இரண்டு தினங்கள் எண்ணெய்க்காப்பு யூன் 16, 17ம் திகதிகளில்

மஹாகும்பாபிஷேகத்தில் நடைபெறுகின்ற ஒவ்வொரு கிரியையிலும் பெரும் அர்த்தங்களும், சிறப்புக்களும் உண்டு. அவற்றில், விஷேட மகத்துவம் கொண்ட ஒரு கிரியை "எண்ணெய்க்காப்பு" என்று அழைக்கப்படுகின்ற தைலாப்பியாங்கம். அடியார்கள் கர்ப்பக்கிரகத்தினுள் சென்று தம் கரங்களால் தர்ப்பைப் புல் எடுத்து எண்ணெய்யில் தொட்டு, இறைவனினின் திருவுருவங்களுக்கு சாத்தி வழிபடுதலையே எண்ணெய்க்காப்பு என அழைப்பர். பொதுவாக, சிவாச்சாரியார்களுக்கு மட்டுமே கர்ப்பக்கிரகத்தினுள் செல்லவோ, இறைஉருவங்களைத் தொடவோ, அபிஷேகிக்கவோ உரிமை உண்டு. ஆயினும், மூலஸ்தானத்துக்குள் செல்வதற்கோ அல்லது இறையுருங்களைத் தொடுவதற்கோ எந்தவொரு நாளிலும் கிடைக்காத பாக்கியம் பக்தர்களுக்கு கிடைக்கின்ற ஒரேயொரு சந்தர்ப்பம் மஹாகும்பாபிஷேகத்தில் நடைபெறும் எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வாகும். இது பன்னிரண்டு ஆண்டுக்கு ஒரு முறையோ அல்லது புதிய ஆலயம் அமைக்கும்போதோ மட்டும் கிடைக்கும். அன்றைய தினம், பக்தர்கள் தர்ப்பையில் எண்ணெய்யைத் தொட்டு, இறைவனின் கண், மூக்கு, செவி, தொப்பிள், பாதம் முதலிய சகல அங்கங்களும் குளிரும்படி சாத்த வேண்டும்.

பக்தர்களின் வசதி கருதி, துர்க்கேஸ்வரம் மஹாகும்பாபிஷேகத்தில் இரு தினங்கள் எண்ணெய்க்காப்பு இடம்பெறும்.



உ

# றிச்மண்ட்ஹில் பிள்ளையார் கோவில்

## புனருத்தாரண அஷ்டபந்தன மஹா கும்பாபிஷேகம்

# குடமுழுக்கு விழா

## June 30, 2023 ஆனி மாதம் 16ம் நாள் வெள்ளிக்கிழமை

## நேரம்: காலை 9:45 மணி முதல் 11:05 மணி வரை

பேரன்புமிக்க மெய்படியார்களே!

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் சோதியான வரும் பரம கருணா மூர்த்தியாகிய இறைவனால் படைக்கப்பட்டதாகிய இப்பரந்த பூவுலகில் இயற்கை எழிலுடன் அமையபெற்றதுமான வட அமெரிக்கா கண்டம் எனபோற்றப்படுகின்ற வந்தாரை வாழவைக்கின்ற கனடா என்னும் அழகிய திருநாட்டில் பல்தேசங்களிலிருந்தும் புலம்பெயர்ந்து வந்து வாழும் மக்கள் அனைவரும் தத்தமது கலாச்சாரங்களை பேணி வளர்த்தும் இன, மொழி, மத வேறுபாடுகளின்றி அனைவரும் ஒன்றுபட்டு றொறன்டோ, மாநகரில் ஹிச்மண்ட் ஹில் செல்வமலையில் மூர்த்தி, தலம், தீர்த்தம் ஒருங்கே அமைய பெற்ற புண்ணிய க்ஷேத்திரமான பிள்ளையார் கோவில் 'Ganesha Temple' என அழைக்கப்படும் மூன்று அழகிய ராககோபுரங்களுடன் அமையப்பெற்ற இந்து ஆலயத்தில் ஸ்வத்திஸ்ரீ மங்கள கரமான சோபகிருது வருஷம் ஆனிமாதம் 16ம் நாள் 30-June - 2023 வெள்ளிக்கிழமையும், அனுஷ நட்சத்திரமும், வளர்பிறை துவாதசி திதியும் சாத்ய யோகமும், பாலவ கரணமும் சித்த யோகமும் கூடிய காலை 9:45 மணிமுதல் 11:05 மணி வரையுள்ள சிங்கலக்ன சுபமுகூர்த்தத்தில் அருள்மிகு ஸ்ரீ வரசித்தி விநாயக பெருமான், ஸ்ரீ வள்ளிதேவசேனா சமேத ஸ்ரீ சிவசுப்ரமண்யசாமி ஸ்ரீ திரிபுர சுந்தரி சமேத ஸ்ரீ சந்திர மௌலீஸ்வரப் பெருமான், ஸ்ரீ பூமிநீலா சமேத ஸ்ரீ பிரசன்ன லக்ஷ்மி வெங்கடேச பெருமாள், ஸ்ரீ துர்க்கா தேவி மற்றும் பரிவார மூர்த்திகளுக்கும் அழகிய முப்பெரும் ராஜகோபுரங்களுக்கும் புனராவர்த்தன அஷ்டபந்தன மஹாகும்பாபிஷேகம் நடைபெற திருவருள் கூடியுள்ளது.

21 - 06 - 2023 புதன்கிழமை முதல் நடைபெறும் பூர்வாங்க கிரிகைகளிலும்
27 - 06 - 2023 செவ்வாய் மாலை முதல் நடைபெறும் யாக பூஜைகளிலும்

28 - 06 - 2023 புதன்கிழமை காலை 7மணி முதல் இரவு 9மணிவரையும்
29 - 06 - 2023 வியாழக்கிழமை காலை 6 மணி முதல் மாலை 4 மணிவரையும்
நடைபெறும் எண்ணெய்காப்பு சாத்தும் வைபவத்திலும்

அடியார்கள் யாவரும் தவறாது கலந்து கொண்டு கும்பாபிஷேக வைபவத்தை கண்டு தரிசித்து அனைத்து தெய்வங்களின் பேரருட்கடாக்ஷத்தை பெற்று பேரானந்தப் பெருவாழ்வு வாழும் வண்ணம் வேண்டுகின்றோம்.



- ஆலய நிர்வாகம்

குவாலிற்றி பிறின்ரிங் 416.281.6554

# மதநிந்தனைப் பேச்சுக்கள் தோற்றுவிக்கும் சர்ச்சைகள்

- வீரகத்தி தனபாலசிங்கம்



இலங்கையில் அண்மைக்காலமாக மதநிந்தனைப் பேச்சுக்கள் தொடர்பில் அடிக்கடி சர்ச்சைகள் கிளம்புகின்றன.

முதலாவதாக, கடந்த டிசம்பரில் சமூக ஊடகச் செயற்பாட்டாளரான சேபால் அமரசிங்க என்பவர் யூரியூப் மூலமான தனது கிரமமான நிகழ்ச்சிகளில் ஒரு தடவையல்ல மூன்று தடவைகள் தலதா மாளிகையை இழிவுபடுத்தும் வகையில் கருத்துக்களை வெளியிட்டார். அதற்குக் கிளம்பிய பாரிய எதிர்ப்பை அடுத்து அவர் கைது செய்ப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டார். பௌத்தர்களின் மத உணர்வுகளைப் புண்படுத்திய செயலுக்காக அமரசிங்க மகாநாயக்க தேரர்களிடம் மன்னிப்புக் கேட்டதையடுத்து பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இரண்டாவதாக, கிறிஸ்தவ மதப் போதகரான ஜெரோம் பெர்னாண்டோ மே மாதம் பௌத்த மதத்தை மாத்திரமல்ல இந்து மற்றும் இஸ்லாமிய மதங்களையும் இழிவுபடுத்தும் வகையில் கருத்துக்களை வெளியிட்டு செய்த பிரசங்கம் ஒன்றின் வீடியோ பதிவு சமூக ஊடகங்களில் பெருமளவில் பரவியதையடுத்து சர்ச்சை மூண்டது. துரித விசாரணைக்கு ஜனாதிபதி உத்தரவிட்டிருந்த போதிலும், பெர்னாண்டோவுக்கு எதிராக வெளிநாட்டு பயணத்தடை உத்தரவு பிறப்பிக்கப்படுவதற்கு முன்னதாக அவர் நாட்டை விட்டு வெளியேறிவிட்டார்.

முன்கூட்டியே திட்டமிடப்பட்ட பயணம் ஒன்றை மேற்கொண்டே தான் வெளிநாட்டுக்கு சென்றிருப்பதாகவும் சில தினங்களில் நாடு திரும்பவிருப்பதாகவும் சமூக ஊடகம் மூலமாக கூறிய அவர் இன்னமும் வெளிநாட்டிலேயே இருக்கிறார். தற்போது சிங்கப்பூரில் இருப்பதாகக் கூறப்படும் போதகர் தனது கருத்துக்கள் பௌத்த, இந்து, இஸ்லாமிய மதத்தவர்களின் உணர்வுகளைப் புண்படுத்தியிருந்தால் அதற்காக மன்னிப்புக் கேட்பதாக சமூக ஊடகம் மூலம் அறிவித்தார்.

நாட்டுக்கு வெளியே இருந்தவாறே அவர் தனது சட்டத்தரணி ஊடாக தன்னை பொலிஸார் கைதுசெய்வதை தடுத்து உத்தரவு பிறப்பிக்கக்கோரி உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனுவொன்றைத் தாக்கல் செய்திருக்கிறார். அதை ஜூலை 28 நீதிமன்றம் விசாரணைக்கு எடுக்கவிருக்கிறது.

மூன்றாவதாக, கடந்த ஏப்ரில் முதலாம் திகதி கொழும்பின் பிரபலமான பெண்கள் கல்லூரியொன்றின் கேட்போர்கூடத்தில் இடம்பெற்ற "ஏப்ரில் முட்டாள்தின சவால்" என்ற நிகழ்ச்சியில் நகைச்சுவை மேடைப் பேச்சாளரான நடாஷா எதிரிசூரிய என்ற இளம்பெண் புத்தர் பெருமானின் குழந்தைப் பராயத்தை கிண்டல்செய்யும் வகையில் தெரிவித்த கருத்துக்களின் வீடியோ பதிவும் சில வாரங்கள் கழித்து சமூக ஊடகங்களில் பரவியது.

அது தொடர்பில் சர்ச்சை தோன்றியதற்கு மத்தியில் அவர் வெளிநாடு செல்வதற்கு விமானநிலையம் சென்றவேளை அங்கு வைத்து கைதுசெய்யப்பட்டார். முதலில் கடந்த 7ஆம் திகதிவரை அவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்ட கொழும்பு நீதிமன்றம் பிறகு அதை எதிர்வரும் 21ஆம் திகதிவரை நீடித்திருக்கிறது.

நான்காவதாக, சமூக ஊடகங்களில் பிரபலமானவர் என்றும் மிகவும் ஆவேசமாக தகாத வார்த்தைகளைப் பயன்படுத்தி கருத்துக்களை வெளியிடுபவர் என்றும் அறியப்பட்ட ராஜாங்கன சித்தார்த்தன தேரர் இனங்கள், மதங்களுக்கிடையில் அமைதியின்மையை தூண்டிவிடக்கூடிய முறையிலும் குறிப்பிட்ட சிலரை அச்சுறுத்தும் வகையிலும் கருத்துக்களை வெளியிட்டதாக அவருக்கு எதிராக இன்னொரு பிக்கு செய்த முறைப்பாட்டையடுத்து சில வாரங்களுக்கு முன்னர் கைதுசெய்யப்பட்டார். அவரின் விளக்கமறியலை கொழும்பு நீதிமன்றம் எதிர்வரும் 21ஆம் திகதி வரை கடந்தவாரம் நீடித்தது.

## சமூக ஊடகங்களின் செயற்பாடுகள்

மதங்களை நிந்தனை செய்யும் வகையில் கருத்துக்களை வெளியிட்டு அவற்றைப் பின்பற்றும் மக்களின் உணர்வுகளைப் புண்படுத்தியும் இனங்கள், மதங்களுக்கு இடையில் அமைதியின்மையை ஏற்படுத்தக்கூடியதாகவும் கருத்துக்களை வெளியிட்ட மேற்படி நால்வரையும் சில மாதங்களுக்கு முன்னர் நாட்டு மக்களுக்கு பெரிதாகத் தெரியாது. ஆனால், இப்போது முழு நாடும் மாத்திரமல்ல வெளியுலகமும் அறியும்.

இவர்களில் குறிப்பாக போதகர் பெர்னாண்டோவின் பிரசங்கத்தையும் நடாஷாவின் நகைச்சுவை பேச்சையும் முதலில் அந்த நிகழ்வுகளில் பங்கேற்ற குறிப்பிட்ட எண்ணிக்கையானோர் மாத்திரமே கேட்டனர். பிறகு சமூக ஊடகங்களே அவர்கள் வெளியிட்ட கருத்துக்களை பரந்தளவில் மக்கள் அறியக்கூடியதாக செய்தன. இருவர் மீதும் குற்றஞ்சாட்டப்படுவதைப் போன்று மதங்களுக்கிடையில் வெறுப்புணர்வை தூண்டிவிடுவதை அவர்கள் உண்மையில் நோக்கமாகக் கொண்டிருந்தார்களா என்பது முக்கியமான கேள்வி.

அமைதியின்மையை தோற்றுவிக்கக் கூடியவையாக பெர்னாண்டோவினதும் நடாஷாவினதும் கருத்துக்கள் அமைந்திருந்தன என்று அவர்கள் மீது குற்றஞ்சாட்டுவதானால், அவற்றை ஊடகங்கள் குறிப்பாக சமூக ஊடகங்கள் மூலமாக பரந்தளவு மக்கள் மத்தியில் கொண்டுசென்றவர்களும் கூட ஒரு விதத்தில் குற்றம் செய்தவர்களாகிறார்கள். இருவருமே பகிரங்கமாக மன்னிப்பு கேட்டுவிட்ட போதிலும், அத்துடன் சர்ச்சை முடிவுக்கு வருவதாக இல்லை.

மக்களின் இன, மத உணர்வுகளைப் புண்படுத்தக்கூடிய வகையிலும் ஒரு சமூகத்துக்கு எதிராக இன்னொரு சமூகத்தைச் சேர்ந்தவர்களினால் வெறுப்பும் அவமதிப்பும் கொண்ட கருத்துக்கள் எமது நாட்டில் வெளியிடப்படுவது இது முதற்தடவை அல்ல. காலங்காலமாக இடம்பெற்று வந்திருக்கும் அத்தகைய சம்பவங்களை அடுக்கிக்கொண்டே போகலாம். அவை பல கலவரங்களையும் மூளவைத்தன. அவற்றுக்கு முக்கிய பொறுப்பாக இருந்தவர்களை அடையாளப்படுத்தினால் அதுவும் கூட இன்றைய சூழ்நிலையில் மதவெறுப்பைத் தூண்டும் செயல் என்று குற்றஞ்சாட்டப்படவும் கூடும்.

வெறுப்புப் பேச்சுக்கு எதிராக இன்று பெரிதாக குரல் எழுப்பப்படுகிறது. சமூகங்களுக்கிடையில் பகைமையை தூண்டிவிட்ட இனவாத அரசியலின் விளைவாக இலங்கை பல தசாப்தங்களாக சின்னாபின்னப்பட்டதை மறந்தவர்களாக ஏதோ வெறுப்புப் பேச்சு நாட்டுக்கு புதிதாக வந்த ஒரு தோற்றப்பாடு போன்று இன்று அரசியல்வாதிகள் பேசும் விசித்திரத்தைக் காண்கிறோம்.

## சதிக் கோட்பாட்டு புனைவுகள்

இலங்கை வரலாறு கண்டிராத பொருளாதார நெருக்கடியின் விளைவாக கடந்த வருடம் மூண்ட மக்கள் கிளர்ச்சியின்போது மாதக்கணக்காக பொதுவெளிக்கு வராமல் பதுங்கியிருந்த கடும்போக்கு சிங்கள பௌத்த தேசியவாத சக்திகள் தற்போது தோன்றியிருக்கும் சர்ச்சைகளை தங்களுக்கு அனுகூலமாகப் பயன்படுத்தி மீண்டும் நச்சுத்தனமான பிரசாரங்களை முன்னெடுப்பதற்கு கடுமையாக முயற்சிக்கின்றன. சதிக்கோட்பாடுகளை புனைவதை ஒரு கலையாகவே வளர்த்திருக்கும் இந்தச் சக்திகள் கற்பனாவாத எதிரிகளிடம் இருந்து இனத்தையும் மதத்தையும் காப்பாற்றுவதற்கு வெளியில் வருகிறார்கள். கிறிஸ்தவ போதகர் மற்றும் நகைச்சுவை பேச்சாளர் சம்பந்தப்பட்ட சர்ச்சைகளின் பின்னணியிலும் மேற்குலக சதி இருப்பதாக சக்திகள் கூறுவதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

இனக்கலவரம் மூளும் என்று எச்சரிக்கையை விடுப்பதை விடவும் நாட்டு மக்களில் ஒரு பிரிவினருக்கு எதிராக இன்னொரு பிரிவினரை தூண்டிவிடும் செயல் வேறு எதுவும் இருக்கமுடியாது. அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கம் முயன்றால் நாடு இதுகால வரையில் காணாத பயங்கரமான இனக்கலவரம் வெடிக்கும் என்று முன்னாள் அமைச்சர்கள் விமல் வீரவன்சவும் சரத் வீரசேகரவும் நாடாளுமன்றத்துக்கு உள்ளேயும் வெளியேயும் அடிக்கடி கூறுகிறார்கள். அவர்களுக்கு எதிராக எந்த நடவடிக்கையையும் எடுக்காமல் ஜனாதிபதியும் அரசாங்கமும் கைகட்டிப் பார்த்துக்கொண்டிருப்பதைக் காண்கிறோம்.

சிறுபான்மை சமூகங்களுக்கு எதிரான பிரசாரங்கள் மூலமாக பெரும்பான்மை இனவாத அணிதிரட்சி செய்து அதன் மூலமாக உச்சபட்ச அரசியல் ஆதாயத்தைப் பெற்ற முன்னாள் ஆட்சியாளர்கள் மீண்டும் தென்னிலங்கையில் ஆதரவைக் கட்டியெழுப்புவதற்கு இனமும் மதமும் ஆபத்துக்குள்ளாகவதாக பீதியை சிங்கள மக்கள் மத்தியில் கிளப்பவேண்டிய தேவை இருக்கிறது. மதநிந்தனை செய்யும் வகையில் அமைந்த கருத்துக்களை வெளியிட்டவர்களுக்கு எதிராக கடும் ஆரவாரம் செய்யும் சக்திகள் அந்தத் தேவைக்கு வசதியான நிகழ்ச்சித் திட்டங்களை முன்னெடுக்கத்தொடங்கியிருக்கின்றன என்ற வலுவான சந்தேகமும் எழுகிறது.

இதனிடையே, வெறுப்புப் பேச்சுக்களில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளை எடுப்பதில் அரசாங்கம் பாரபட்சம் காட்டுவதாக அரசியல் சமூக செயற்பாட்டாளர்கள் மற்றும் மனித உரிமைகள் அமைப்புக்களிடமிருந்து விமர்சனங்கள் வருகின்றன என்பதும் கவனிக்கத்தக்கது.

## சந்திரிகாவின் கேள்வி

பொதுபல சேனாவின் பொதுச்செயலாளர் கலகொட அத்தே ஞானசார தேரரும் வேற பலரும் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கு எதிராக பரப்பிய வெறுப்புணர்வு புத்தபெருமானை அவமதித்ததாக கைது செய்யப்பட்டிருக்கும் நடாஷாவின் பேச்சை விடவும் மோசமானவை என்று ருவிட்டர் தளத்தில் கடந்த வாரம் பதிவிட்ட முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க அவர்களுக்கு எதிராக ஏன் நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று கேள்வியெழுப்பினார்.

"இஸ்லாமிய மதத்தை நிந்தனை செய்து பள்ளிவாசல்களுக்கும் தேவாலயங்களுக்கும் தீவைத்த ஞானசாரவுக்கும் ஏனையோருக்கும் என்ன நடந்தது? நடாஷாவின் பேச்சை விடவும் நச்சுத்தனமானவை, இவர்கள் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் எதிராக பரப்பிய வெறுப்புப் பேச்சுக்கள்.

"டாக்டர் ஷாபி சிகாப்தீன் மீது குற்றஞ்சுமத்தி அவரை அவதூறு செய்தவர்களுக்கு எதிராக இதுவரை ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை. அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க ஜனாதிபதி விக்கிரமசிங்கவுக்கு இன்னமும் காலம் கடந்துவிடவில்லை. அவ்வாறு செய்வதே உண்மையான ஜனநாயக ஆட்சிமுறையாக இருக்கும்.

"உண்மையான பௌத்த கோட்பாடுகளை இலங்கை பின்பற்றியிருந்தால், இன்றைய நெருக்கடியை இலங்கை எதிர்நோக்கவேண்டி வந்திருக்காது. உண்மையில் பௌத்த மதத்துக்கு அதியுயர் மதிப்புக் கொடுக்கப்படவேண்டும். ஆனால், ஏனைய மதங்களுக்கும் சமமான மதிப்பை அளிக்கவேண்டும். விரும்புகின்ற மதத்தைப் பின்பற்றுவதற்கு ஒவ்வொரு குடிமகனுக்கும் புனித உரிமை இருக்கிறது. மற்றவர்களுடைய நம்பிக்கைகளை மதித்து நடக்கவேண்டும் என்பது பௌத்த கோட்பாடாகும்" என்று திருமதி குமாரதுங்க கூறியிருக்கிறார். இன்று இருக்கும் சிங்கள அரசியல் தலைவர்களில் அவராவது இவ்வாறு கருத்துவெளியிட்டிருக்கிறார் என்பது ஒருவித திருப்தியைத் தருகிறது.

அதேவேளை, இலங்கை தேசிய சமாதானப் பேரவையின் நிறைவேற்று பணிப்பாளர் கலாநிதி ஜெகான் பெரேரா கடந்தவாரம் எழுதிய "குறிப்பிட்ட சிலரை தெரிவுசெய்து நடவடிக்கை எடுப்பது சட்டத்தின் நோக்கம் அல்ல" என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையொன்றில், "நடாஷா அறகலய போராட்டத்தில் கலந்துகொண்டவர் என்று தகவல் இருப்பதால் அவரது பிரச்சினையை விசேட கவனத்துடன் நோக்குவதாக பொலிஸார் கூறியதாக அரசாங்க ஊடகங்களில் வெளியான செய்தி அவருக்கு எதிரான நடவடிக்கை அரசியல் நோக்கம் கொண்டது என்ற சந்தேகத்தைக் கிளப்புகிறது" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கைச் சட்டத்தை (International Convention on Civil and Political Rights – ICCPR) இலங்கை அரசாங்கம் துஷ்பிரயோகம் செய்வதாக சர்வதேச மன்னிப்புச்சபை குற்றஞ்சாட்டியிருக்கிறது.

அந்த சர்வதேச உடன்படிக்கையை இலங்கை 1980 ஆண்டில் ஏற்றுக்கொண்டது. அது தொடர்பிலான சட்டம் 2007ஆம் ஆண்டில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான சர்வதேச உடன்படிக்கைச் சட்டம் என்று அழைக்கப்படும் அந்தச் சட்டம் பாரபட்சத்தை, பகைமையை அல்லது வன்முறையை தூண்டிவிடும் வகையில் அமையக்கூடியதாக போர் அல்லது தேசிய, இன, மத வெறுப்புணர்வை பிரசாரப்படுத்துவதை குற்றச்செயலாகக் கருதுகிறது. அத்தகைய குற்றச்செயல்களில் ஈடுபட்டதாக குற்றஞ்சாட்டப்படக்கூடிய எவரையும் மேல் நீதிமன்றத்தைத் தவிர அதற்கு கீழ்நிலையில் உள்ள எந்த நீதிமன்றமும் பிணையில் விடுவிக்கமுடியாது.

ஆனால், அந்தச் சட்டம் வியாக்கியானப்படுத்தப்படுகின்ற அல்லது பிரயோகிக்கப்படுகின்ற எதேச்சையான விதம் அரசாங்கங்கள் அதை எதிர்க்கருத்துக்களை கொண்டவர்களை அடக்குவதற்கும் சிறுபான்மை இனத்தவர்களை கொடுமைப்படுத்துவதற்கும் தவறாக பயன்படுத்துகின்றன என்ற குற்றச்சாட்டுக்கு வழிவகுக்கிறது.

(தொடர்ச்சி 23 பக்கம்)

# வருடாந்த மஹோற்சவ பெருவிழா விஞ்ஞாபனம் 2023



## அருள்மிகு ஸ்ரீபுவனேஸ்வரி அம்மன் ஆலயம்

**230 வில்கின்சன் சாலை, பிராம்ப்டன், ON L6T 4N7**

தொலைபேசி: **905-459-7042.** செல்: **416-615-0005**

Email: bramptonbhuvaneswari@gmail.com

அங்குச பாச மேந்தி அபயமே வரதம் தாங்கும்.
பங்கயக்கரத்தாள் பீதாம்பரமணியிடையாள் பொற்பூண்.
பைங்கள நிரம்பப் பூண்டாள்
பதினாறு கலையெழுத்துள்.
பொங்கிய ஒரெழுத்தாள் புவனேசி பாதம் போற்றி.

www.Bhuvaneswariamman.ca

ஸ்ரீ புவனேஸ்வரி அம்பாளின் அடியார்களே! உலகின் பல்வேறு ஜீவராசிகள் உய்யும் பொருட்டு ஸ்ரீபிரம்மி மாகேஸ்வரி கௌமாரி வைஸ்ணவி வாராஹி இந்திராணி சாமுண்டா ஸப்த மாதர்களையும் ஒருங்கே கொண்டு ஆதியாய் அனாதியாய் ஒன்றாய் நீக்கமற ஸப்த லோகத்திலும் எங்கும் நிறைந்திருக்கும் பரம்பொருளாய் எல்லா வளங்களும் நிறைந்து கனடா நாட்டில், பிராம்ப்டன் நகரில் எழுந்தருளி அருள் பாலித்துவரும்

ஸ்ரீமாதா ஸ்ரீ புவனேஸ்வரி அம்பிகை த்வஜரோகணம் தீர்த்த மஹோத்ஸவ உற்சவத்துடன் தொடங்கி பதினைந்து தினங்கள் பகலும் இரவும் திருவிழாக்கள் நிகழ அன்னையின் திருவருள் பாலித்துள்ளது.

நிகழும் மங்களகரமான சோபகிருது வருடம் ஆனி 11ம் தேதி (25-06- 2023) ஞாயிற்றுக்கிழமை ஸப்தமி திதி உத்திர நட்சத்திரம் அமிர்த யோகம் கூடிய சுபயோக சுபதினத்தில் காலை 9.30 மணிக்குமேல் 11.00 மணிக்குள் துவங்கி அடியார்கள், தொண்டர்கள், உற்சவ உபயதாரர்கள் அனைவரும் சடங்குகளாக கீழே உள்ள பட்டியலில் உள்ள நிகழ்வுகளை அறிந்து, ஸ்ரீ புனேஸ்வரியின் பூரண அருள் பெற்று, சகல செல்வங்களையும் நீண்ட ஆயுளையும் பெற்று வளமுடன் வாழ அன்புடன் அழைக்கிறோம்.

**24-06-2023 சனிக்கிழமை மாலை: அனுக்ஞை கணபதி பூஜை கணபதிஹோம் கிராமசாந்தி, வாஸ்துசாந்தி. அங்குரார்ப்பணம், ம்ருத்ஸங்கிரஹணம். யாகசாலை நிர்மாணம் நடைபெறும்.**

| 25-06-2023 | 30-06-2023 | 07-07-2023 | 08-07-2023 | 09-07-2023 |
|---|---|---|---|---|
| ஞாயிறு | வெள்ளி | வெள்ளி | சனி | ஞாயிறு |
| கொடியேற்றம் | மஞ்சம் | சப்பறம் | தேர்த்திருவிழா | தீர்த்தம் |

## திருவிழாக்கால நிகழ்ச்சி நிரல்

### காலை திருவிழா
காலை 7.30 மணி காலசாந்தி பூஜை
காலை 8.30 மணி ஸ்நாபன கும்ப பூஜை, மூலவர். அபிஷேகம்
காலை 10.00 மணி உச்சிகால பூஜை. கொடிஸ்தம்பபூஜை
யாகபூஜை
மதியம் 11.30 மணி
வசந்தம்டப பூஜை. யாகசாலை தரிசனம்.
மதியம் 12.30 மணிக்கு பிரசாதம் வழங்குதல்

### மாலை திருவிழா
5.00 மணி: ஸ்தாபன கும்பாபிஷேகம்
6.30 மணி: மூலஸ்தான பூஜை, ஸ்தம்ப பூஜை
7.30 மணி: கலை நிகழ்ச்சிகள்.
8.30 மணி: வசந்தம் பூஜை.
அம்பாள் வீதியுலா நித்யாக்னி, யாகசாலை தரிசனம்
9.00 மணி: பிரசாதம் வழங்குதல்.

### சர்வபோதகம்
சிவமரத்னா: சிவஸ்ரீ.வி.எஸ். பாஸ்கர சிவாச்சாரியார்
மஹோற்சவ குருமார்கள்: சிவஸ்ரீ. மகேஸ்வர குருக்கள்
சிவஸ்ரீ. இராதாகிருஷ்ண குருக்கள்
சிவஸ்ரீ. கௌசிக் குருக்கள்

கனடாவாழ் குருமார்கள் அனைவரும் மஹோற்சவ காலங்களில் வருகை தந்து சிறப்பிக்குமாறு பணிவன்புடன் அழைக்கிறோம்
முக்கிய குறிப்பு :
தேர் தீர்த்தத் திருவிழா அன்று பால்குடம் மஞ்சள் குடம்
அங்கபிரதக்ஷணம் காவடி கற்பூர சட்டி எடுக்க விரும்புவோர் முன்பதிவுக்கு காரியாலத்தை தொடர்பு கொள்ளவும் 905-459-7042

தேவஸ்தான மங்கள இசை:
வித்வான். திரு சிவமயம் குழுவினர்.
புஷ்ப அலங்காரம், பூமாலைகள்:
திரு. அருந்தவராசா (Harini Foods)
திரு. பாலா (ஐஸ்வரியம் ஸ்டோர்ஸ்)
ஆலய நிர்மான ஸ்தபதி: விஸ்வபிரம்ம திரு. குணாளன்

என்றும் ஸ்ரீபுவனேஷ்வரி ஸம்ருதியில்
சிவமரத்தினம்: சிவஸ்ரீ. வி.எஸ். பாஸ்கர சிவாச்சாரியார்
ஸ்தாபகர், தலைமை அர்ச்சகர்
இல்லத்திருமணம் குடிபுகுதல்
சாந்தி பரிகாரப்பூஜைகளுக்கு அனுகவும்
416-615-0005

**உங்கள் குடும்ப விழாக்களை கொண்டாட அழகிய மண்டபம் உள்ளது விபரங்களுக்கு ஆலயத்தை அனுகவும்**

# SJV Father of Tamil Nationalism

## Expansion of the speech by V. Thangavelu, President Canada TNA at the 125th birth anniversary of SJV held in Toronto

*Continued from last week…*

"But whatever speculations may be made upon these points their Lordships cannot advise Her Majesty that such was the Roman - Dutch Law, unless it is shown to them that it was so. And neither the researches of counsel nor their own have enabled their Lordships to attain any certainty on the subject."

It appears to me that the true ratio decided of Simon Appu 's case can be deduced from the following passages of the judgment: —

"That a very extensive practice of suing the Crown has sprung up is certain. In his judgment in the case of Fernando, which was decided immediately before the present case came under review, Cayley, C. J., says, 'The practice has been recognized in many hundreds of decisions, and long acquiesced in by the Crown, and so far, as I am aware, has not till now been called in question.' It was recognized by the judgment of the Court in Fraser's case, decided in the year 1868."

"In Mr. Justice Thompson's Institutes of the Laws of Ceylon, after referring to the English petition of right, he says that, the Ceylon Government having no Chancellor, a suit against the Government has been permitted, and the Queen's Advocate is the public officer who issued on behalf of the Crown. He then points out that, except in land cases, this action gives little more than is given by the petition of right, for no execution can issue against the Crown or against the Queen's Advocate."

"It is then certain that prior to 1868 there was such an established practice of suing the Crown that the legislature took it for granted and regulated it. The same state of things must have existed prior to 1856, for the Ordinance of 1868 is only a re-enactment of an earlier Ordinance of 1856. Earlier Ordinances still have been referred to, but their Lordships do not discuss them, because, though they speak of suits in which the Crown is defendant, and though it is the opinion of the Supreme Court, and is probable, that they refer to claims ex contractual, it is not clear that they do so."

"Whatever may be the exact origin of the practice of suing the Crown, it was doubtless established to avoid such glaring injustice as would result from the entire inability of the subject to establish his claims. And finding that the legislature recognized and made provision for such suits at least twenty-eight years ago, their Lordships hold that they are now incorporated into the law of the land."

The reference in the first of the passages just cited to the judgment in Fraser's case shows that their Lordships relied on that case, not for the proposition that the Proclamation of 1799 (now chapter 12 of the Revised Edition 1956) had waived the Crown's immunity from suits upon contract, but instead only for the fact that this Court had often recognized the practice of suing the Crown. The judgment of Cayley, C.J., in Jayewardene's case (incorrectly referred to as that of Fernando) was relied on in the same way.

There is accordingly the highest judicial authority, in the decision of Simon Appu 's case in 1884, to the effect that (as stated in the head note): "There is no authority for saying that the Roman Dutch law of Holland, which was in force in Ceylon at the date of its conquest by the British, and has not since been abrogated, empowered the subject to sue the Government. Instead, the right to sue exists because there had been a very extensive practice of suing the Crown which was recognized by the Legislature and such suits are now incorporated into the law of the land."

The learned Acting Attorney-General has suggested certain other considerations which tend to support the view that the Proclamation of 1799 was not intended to make the Roman-Dutch Law applicable to the relationship between the Crown and public servants in Ceylon. The first is that the Proclamation, in referring to the Civil and Criminal Jurisdiction of the Courts, was not intended to cover matters which are the subject of Constitutional or public law, and that the relationship between the Crown and its servants is such a matter. I do not find it necessary to decide the point thus raised, and am content to observe that an argument which invokes the Proclamation must logically include the proposition that even the right of dismissal at pleasure existed in Ceylon by virtue of Roman-Dutch Law, and not as a principle of English Law. But I see much substance in the other suggestion that, in regard to so fundamental a matter as the relationship between the Crown and its servants (many of whom must at the time have been British by birth and race), the Proclamation could not have intended that such a matter would be regulated otherwise than by the law applicable in Britain and in other territories of the British Crown. The explanation given in Thompson's Institutes that a suit against the Government had been permitted of necessity and in lieu of the English petition of right, because the Ceylon Government had no Chancellor, is one which is in all the circumstances most acceptable.

When this Court in Fraser's case assumed that the wages of a public servant in Ceylon, when earned, are a debt due to him, the Court in so doing did not consider the question whether this principle was a matter of Roman-Dutch Law or else of English law. But it is clear from the judgment that the Court did recognize that the power to appoint public officers in Ceylon was a power derived from, and exercised on behalf of, the Crown; the judgment in this connection refers to the powers of appointment granted to the Governor by his letter of appointment (presumably Letters Patent) and to Colonial Rules and Regulations (p. 321 Ram. 1863-68). The grant of such powers by the British Sovereign must fairly be presumed to have been an exercise of the Royal Prerogative under the law of England, and not to any authority of a Sovereign under Roman-Dutch law; if this were otherwise, the Court in Fraser's case could not have held that the power to dismiss a public officer at pleasure existed in Ceylon without first deciding that such a power existed in Roman-Dutch law. The efficacy or validity of appointments made by the executive in Ceylon was therefore referable to the law of England; and it follows in my opinion that the nature and legal effect of the relationship constituted by such appointments had also to be determined by reference to English law.

For these reasons I would hold, applying the judgment of their Lordships of 1884, that the right to sue the Crown in Ceylon upon a contract is not founded on the Roman-Dutch Law. Accordingly, even if it be the case that the ancient laws of the United Provinces entitled a public officer to sue the Government upon a contract of employment under the Government, those laws did not, and do not now, apply in Ceylon. It follows that the question whether the plaintiff in the present case has a right to sue the Attorney-General must be determined under the English law as altered or modified by the laws of Ceylon. (To be continued)







Ontario - வில் அரசு அங்கீகாரம் பெற்ற
KANAGAAMBIKAI
Pawn Brokers
30
வருட சேவைகள்
வாடிக்கையாளர்களின் வேண்டுகோளுக்கு
இணங்க புதிய கிளை உதயம்!
கனகாம்பிகை
உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த
வட்டி வீதத்தில் தங்க நகை அடவு
நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய
ஒரே கூரையின் கீழ்
உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கண்கம்பிகைக்கு வாங்க...
Pawn Bank Inc.™
Your Satisfaction is Our Success
(Brimley & Eglinton)
2613, Eglinton Ave East,
Scarborough, ON M1K 2S2
416 269 7198
(Finch & MCCowan)
1571 Sandhurst Circle
Woodside Square Mall #159D,
Scarborough - M1V1V2
416 754 7198

(19 பக்கத் தொடர்ச்சி)

# மதநிந்தனைப் பேச்சுக்கள் தோற்றுவிக்கும் சர்ச்சைகள்

நடாஷாவின் பேச்சு வெறுப்புப் பேச்சாக அமைந்திருக்கிறது என்ற அடிப்படையில் அதை சட்டவிரோதமானதாகக் கருதுவதானால் குறிப்பிட்ட ஒரு மதக்குழுவுக்கு எதிராக பாரபட்சத்தையும் பகைமையையும் காட்டுமாறும் வன்முறையில் இறங்குமாறும் மற்றவர்களைத் தூண்டிவிடும் நோக்கில் அவர் செயற்பட்டார் என்பதை தெளிவாகக் காண்பிக்கவேண்டியது அவசியமாகும் என்று மன்னிப்புச்சபை சுட்டிக்காட்டியிருக்கிறது.

## சுதந்திரத்தின் எல்லை

தற்போதைய சர்ச்சை கருத்து வெளிப்பாட்டு சுதந்திரம் மற்றும் ஊடக சுதந்திரம் தொடர்பிலும் வாதப்பிரதிவாதங்களை கிளப்பியிருக்கிறது.

பேச்சுச் சுதந்திரமும் சிந்தனைச் சுதந்திரமும் உலகளாவ அங்கீகரிக்கப்பட்ட உரிமைகள். எமது ஏனைய சுதந்திரங்களுக்கான முன்தேவையாக சுதந்திரமாக பேசுவதற்கான உரிமை இருக்கிறது. ஆனால், உரிமைகள் எப்போதுமே பொறுப்புணர்வுடனேயே அனுபவிக்கவேண்டியவையாகும். பொறுப்புணர்வுடன் ஒரு உரிமையை நாம் பயன்படுத்தவில்லையானால் அந்த உரிமைக்கு உண்மையில் நாம் அருகதை உடையவர்களா என்ற கேள்வி நிச்சயமாக எழுவே செய்யும்.

சுதந்திரங்களை விரும்புவது மனித இயல்பு. தலையீடின்றி அபிப்பிராயங்களைக் கொண்டிருப்பதற்கு ஒவ்வொருவருக்கும் உரிமை இருக்கிறது. அதே உரிமையை சமூகத்தில் முரண்பாடுகளைத் தோற்றுவிக்கக்கூடிய முறையில் கருத்துக்களை முன்வைப்பதற்கு எவரும் பயன்படுத்துவதை ஒருபோதும் நியாயப்படுத்தவோ அனுமதிக்கவோ முடியாது. அது அடிப்படையில் வெறுப்புப்பேச்சாகவே கருதப்படும்.

கையை நீட்டுவதற்கு எமக்கு இருக்கும் சுதந்திரம் மற்றவர்களின் மூக்கு நுனியின் முன்னால் முடிவடைகிறது என்று சுதந்திரம் பற்றி கடந்த நூற்றாண்டின் முற்பகுதியில் மூன்று தசாப்தங்களாக அமெரிக்க உச்சநீதிமன்ற நீதியரசராக இருந்த ஒலிவர் வென்டெல் ஹோம்ஸ் ஜூனியர் கூறியதை இங்கு நினைவுபடுத்துவது பொருத்தமாக இருக்கும்.

ஊடக சுதந்திரத்தைப் பொறுத்தவரையிலும் கூட அதைக் கட்டுப்பாடுகளுக்கு அப்பாற்பட்டதாக கருதமுடியாது. சமூகத்துக்குப் பாதிப்பை ஏற்படுத்தாத முறையில் அந்தச் சுதந்திரத்தை ஊடகங்கள் நிதானமாக - பொறுப்புணர்வுடன் பயன்படுத்தவேண்டும். ஊடக சுதந்திரம் என்பது காட்டுக்கழுதையின் சுதந்திரம் அல்ல.

## சமூக உடன்பாடு

கட்டுப்பாடின்றிய முற்றுமுழுதான சுதந்திரம் சமூகத்தில் அராஜகத்தைத் தோற்றுவிக்கக்கூடிய ஆபத்தைக் கொண்டிருக்கிறது. அத்தகைய அராஜக நிலை உருவாவதை தடுப்பதற்கே சில நூற்றாண்டுகளுக்கு முன்னர் அரசுக்கும் மக்களுக்கும் இடையிலான சமூக உடன்பாடு (Social Contract) என்ற கோட்பாடு மேற்குலகில் வகுக்கப்பட்டது.

சமூக உடன்பாட்டின் ஜனநாயக அடிப்படையிலான வியாக்கியானத்தின் பிரகாரம் சமூகத்தில் பொது ஒழுங்கையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவதற்காக மக்கள் தங்களின் உரிமைகளில் சிலவற்றை தங்களால் தெரிவுசெய்யப்படும் அரசிடம் ஒப்படைக்கிறார்கள். அரசு அரசியலமைப்பு ரீதியான தடுப்புகளுக்கும் சமப்படுத்தல்களுக்கும் (Checks and Balances) கட்டுப்பட்டதாக இருக்கும் அதேவேளை, மக்கள் சட்டத்தின் ஆட்சிக்குக் கட்டுப்பட்டவர்களாக இருக்கவேண்டும். அதன் அடிப்படையில் நோக்கும்போது சுதந்திரமாகப் பேசுவதற்கான உரிமை பொது அமைதியைப் பேணுவதற்கு இயற்றப்பட்ட சட்டங்களினால் நெறிப்படுத்தப்படுவதாக அமைகிறது. இது தனி மனிதர்களின் உரிமைகளை விடவும் சமூகத்தின் கூட்டு நல்வாழ்வு முக்கியமானது என்ற கோட்பாட்டின் வழியிலானதாகும்.

இதை மதங்களை விமர்சிக்கமுடியாது என்று அர்த்தப்படுத்தலாகாது என்று சில ஆய்வாளர்கள் வாதிடுகிறார்கள். சுதந்திரமான ஜனநாயக சமூகமொன்றில் மதங்கள் மீதான விமர்சனங்கள் கல்விப்புலம் சார்ந்த அல்லது அறிவுஜீவித்துவ செயற்பாடு என்பதால், மதங்களைப் பின்பற்றுபவர்களின் உணர்வுகளைப் அவமதிக்காமல் அமையும் பட்சத்தில் அவற்றை சகித்துக்கொள்ளவேண்டும் என்பது மாத்திரமல்ல உற்சாகப்படுத்தப்படவேண்டும் என்றும் அவர்கள் கூறுகிறார்கள்.

## அங்கதப்பேச்சு

இது இவ்வாறிருக்க, தற்போதைய சர்ச்சை கருத்துவெளிப்பாட்டு சுதந்திரத்தின் ஒரு அங்கமான அங்கதப் பேச்சுக்களுக்கு (Satire) அச்சுறுத்தலாக அமைவதாகவும் கவலை வெளியிடப்படுகிறது. ஊடகங்களில் வெளியாகும் கேலிச்சித்திரங்கள் மீது குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் தொடர்பான உடன்படிக்கைச் சட்டம் பாயக்கூடும் என்று அஞ்சப்படுகிறது.

அங்கதப் பேச்சுகள் எப்போதுமே ஒரு சிக்கலான விடயத்தை நகைச்சுவை உணர்வுடன் சுலபமாக விளங்கவைப்பவையாகும்.

எமது இளமைக்காலத்தில் கம்யூனிஸ்ட் தலைவர் காலஞ்சென்ற என். சண்முகதாசனின் அரசியல் வகுப்புக்களுக்கும் கூட்டங்களுக்கும் நாம் செல்வது வழக்கம். ஆயுதப்போராட்டத்தை நியாயப்படுத்துவதற்கு அவர், "காளிதேவி என்ன கத்தரிக்காய் வெட்டுவதற்கா கத்தி வைத்திருக்கிறா? முருகனின் கையில் வேல் எதற்கு? சிவபெருமான் கையில் எதற்கு திரிசூலம்?" என்று தனது பேச்சில் கூறுவார்.

அவ்வாறான அங்கதப் பேச்சுக்களை மக்கள் அன்று ரசித்தார்கள். அவர் இந்துக் கடவுளரை இழிவுபடுத்தினார் என்று எவரும் குற்றஞ்சாட்டியதாக நாம் அறியவில்லை.

## அரசியல் பின்னணி

இன்று மதங்கள் தொடர்பிலான அறிவுபூர்வமான அல்லது அங்கதத் தன்மையான விமர்சனங்கள் தொடர்பில் அளவுக்கு அதிகமான எதிர்ப்பு வெளிப்படுத்தப்படுவதன் பின்னணியில் ஒரு அரசியலும் இருக்கவே செய்கிறது. அதற்காக மதங்களை இழிவுபடுத்தும் பேச்சுக்களை அனுமதிக்கவேண்டும் என்று இங்கு வாதிடுவதாக அர்த்தப்படுத்தலாகாது.

இறுதியாக இன்றைய நிலைவரத்துக்கு மத்தியில் உகண்டாவின் முன்னாள் ஜனாதிபதி இடி அமீன் தனது ஆட்சிக்காலத்தில் பேச்சுச் சுதந்திரம் குறித்து ஒரு தடவை தெரிவித்த கருத்தை நினைவுபடுத்துவது சுவாரஸ்யமாக இருக்கும்.

"உகண்டாவில் பேச்சுச் சுதந்திரம் இருக்கிறது. ஆனால், பேச்சுக்குப் பிறகு அந்த சுதந்திரத்தை உத்தரவாதப்படுத்தமுடியும்" என்று உறுதியாகக் கூமுடியாது.

(மாற்றம் தளத்தில் வெளியான இந்த கட்டுரை ஆசிரியரின் அனுமதியுடன் மீள்பிரசுரம் செய்யப்படுகிறது)


MONEY PROBLEMS?

பணச்சிக்கலா?

0%வட்டி

அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

ALL DEBT SOLUTIONS C R PLAN

No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills



வசந்தி சிவராஜா

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.

நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.




தமிழில் தொடர்புகளுக்கு:

வசந்தி சிவராஜா - 416-616-3077

எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

416-671-0577

4 இடங்களில் சேவை

ரொறன்ரோ, ஸ்காபறோ, றிச்மோண்ட்கில், மிசிசாகா

வார இறுதி - இரவு நேரங்களிலம் சேவை உண்டு

MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill

NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York



IN SUPPORT OF
SHN
SCARBOROUGH HEALTH NETWORK FOUNDATION
Love Scarborough
SCARBOROUGH HEALTH NETWORK FOUNDATION
மற்றும் தாயகத்திலுள்ள சிவபூமி அறக்கட்டளைக்குமான
நிதி சேர்க்கும் மாபெரும் இசைநிகழ்வு
IN SUPPORT OF SENIORS HOME JAFFNA
SIVAPOOMI TRUST
சிவபூமி அறக்கட்டளை
SIVA POOMI
ASIYANS Quality Forever
Men's Waer Women's Waer, Kids Wear
Utilities, Gift & Jewelry Items
Fashion, Apparel & Garments
# 23, 3601 Lawrence Ave E,
Scarborough, ON M1G 1P5
Tel: 416-438-6568
NEW OCEAN SUPERMARKET
5635 Finch Ave E,
Scarborough, ON M1B 5K9
Tel: 416-292-0122
Sharon BUS LINES
Call: PRIYAN
Tel: 416-897-3569 / 416-906-7575
E:sharonbuslines@gmail.com
www.sharonbuslines.ca
HOMELIFE
HIGHER STANDARDS
HomeLife/GTA Realty Inc.
5215 Finch Ave E #20, Toronto, ON. M1S 0C2
Tel: 416-321-6969
இராகாலயா நுண்கலைக் கூடம் வழங்கும்
கானமாருதம்
2023
Ragalaya Fine Arts of Ontario
இராகாலயா நுண்கலைக் கூடம்
2300 Pharmacy Ave, Scarborough, ON M1W 1H8
JUNE 17, 2023 SATURDAY 5:30 PM
நூற்றுக்கும் மேற்பட்ட இன்னிசைக்
கச்சேரிகளை மேடையேற்றி,
புகழ்பெற்ற இராகாலயா அதிபர்,
சங்கீத கலா வித்தகர்,
இன்னிசை வாணி,
ஸ்ரீமதி. லசந்தி இராஜ்குமார்
மற்றும் பிரபல இந்திய முன்னணி
இசைக்கலைஞர்களுக்கு பின்னணி
இசை வழங்கிய பிரபலமான
Mega Tuners இசைக்குழுவினர்களும்
இராகாலயா மாணவர்களும்
இணைந்து வழங்கும்
மிகப் பிரமாண்டமான
இன்னிசை, வாத்திய விருந்து.
Mega Tuners
அனைவரும் வாருங்கள்! ஆதரவு தாருங்கள் !!
motorcycle insurance
Allstate
சிறப்புற வாழ்த்துக்கள்
கானமாருதம் 2023
டேவிற்சன் குடும்பத்தினர்
SPRING FLORIST
3011 Markham Road,
Scarborough, ON M1X 1L7
RAJAH SATKUNAM
Tel: 416-903-5069
Pasumai Market
பசுமை
2-2002 Middlefield Rd,
Markham, ON L3S 1Y5
Tel: 905-472-5525
Travel with us with the lowest fare, We'll give you the best service and care...
Ideal
ALL YOUR REAL ESTATE NEEDS
BUYING / SELLING / INVESTING
PRE-CONSTRUCTION
416.992.9243
ATHAVE PARAMESWARAN
HOMELIFE
Chapel Ridge
Funeral Home &
Cremation Centre
8911 Woodbine Ave,
Markham, ON L3R 5G1
Tel:905-305-8508
AKT
PREMIUM QUALITY WHOLESALE & RETAIL
416 291 2838
8-2002 Middlefield Rd, Markham, ON L3S 1Y5
HOMELIFE
YOUR INTEREST IS MY CAPITAL
THINKING OF SELLING YOUR HOME?
SRI SIVASUBRAMANIAM
416-884-3991
7 Eastvale Dr #205, Markham, ON, L3S 4N8
அனுமதிச் சீட்டுக்கள் : 50$ / 20$ மண்டப வாசலிலும் பெற்றுக் கொள்ளலாம்
தொடர்புகட்கு : 647.224.3546 / 905.943.9047

# PRISONER # 1056



பருத்தித்துறையில் பிறந்த திரு. றோய் இரட்ணவேல் அவர்களது கைதி இலக்கம் 1056 (Prisoner # 1056 ) என்னும் நூலானது கடந்த ஞாயிற்றுக்கிழமை 12/06/2023 அன்று மொன்றியல் திருமுருகன் ஆலய மண்டபத்தில் பலரது வாழ்த்துக்களோடும் பாராட்டுக்களோடும் மொன்றியலில் அறிமுகப்படுத்தப்பட்டது. அன்றையதினம் இந்நூலைப் பலர் திரு. றோய் இரட்ணவேல் அவர்களது கையொப்பத்துடன் பெற்றுக் கொண்டனர்.

நாம் வாழ்ந்த காலத்தில் நடந்த என்றும் எங்கள் மனங்களில் மாறாத றணமாக இருக்கும் அந்த கொடூரமான ஒப்பரேஷன் லிபரேஷனானது அந்தப் பகுதிகளில் வாழ்ந்த ஒவ்வொருவருக்கும் அவலத்துடன் கூடிய பெரிய தாக்கங்களை ஏற்படுத்தியது உண்மையே. அந்த வகையில் இந்தக் கதையானது ஒப்பரே'ன் லிபரே'ன் காலத்து அவரது அனுபவப் பதிவாக உள்ளது. இந்நூல் வெளிவருவதற்கு முன்னரே இந்த நூலைப்பற்றிய திரு. றோய் இரட்ணவேல் அவர்களின் நேர்காணல் ஒன்றைப் பார்த்தேன். பார்த்த போதே எண்ணினேன் எப்படியும் அந்த நூலை வாங்கி வாசித்துவிட வேண்டும் என்று. சற்றேனும் எதிர் பாராத விதமாக மிக அருகிலேயே அந்த நூலுக்கான ஒரு சிறிய விழாவில் அந்நூலை நூலாசிரியரின் கையொப்பத்துடன் பெற்றுக் கொண்டதில் மட்டற்ற மகிழ்ச்சி.




இந்த நூலை வாசிப்பதில் அதிக ஆர்வம் இருப்பதற்கான காரணம் என்னவெனில் எனக்குப் பதினைந்து வயதாக இருந்த பொழுது அந்த நேரத்தில் நாம் சந்தித்த அனுபவித்த மிகவும் கொடூரமான மனிதாபிமானம் அற்ற துன்பியல் நிகழ்வுகளின் ஒரு சிறு பகுதியை ஏனும் உலகமே அறியக்கூடிய வகையில் இந்த நூல் உருவாக்கப்பட்டுள்ள விதம் தான்.

Penguin random house ஆல் வெளியிடப்பட்டுள்ள இந்த நூலானது ஒரே நாளிலேயே உலகிலுள்ள பல பாகங்களிற்கும் போய்ச் சேரக்கூடியதாக இருந்ததுவும் இதன் சிறப்பாம்.

மேலும் இந்தநூலானது பன்னிரண்டு அத்தியாயங்களைக் கொண்டதோடு மொத்தம் இருநூற்று அறுபது பக்கங்களைக் கொண்டது. மிகக் கனமான சொற்களைக் கொண்ட இந்த ஆங்கில நூலின் முதல் அத்தியாயத்தைப் படிக்கும் போதே அன்றைய அந்த கொடூரமான அனற்காத்தும், புழுதியும், தூசும், இரத்தமும், குண்டுகளின் சத்தமும் கத்தல்களும் கதறல்களும், சங்கிலிப் பிணைப்பும், அதில் பிணைக்கப்பட்டடோரின் மரண பயத்தை வெளிப்படுத்தும் பார்வையும் மீண்டும் கண்முன் வந்து போயின.

முதல் அத்தியாயத்தின் தொடக்கத்தில் பருத்தித்துறைப் பட்டினம், அதன்பெயருக்கான காரணம், அங்கு கிடைக்கக்கூடிய சுவையான உணவுகள் வியாபார நிலையங்கள் குறிப்பாக மீன்சந்தையும் அங்கிருக்கும் மக்களின் செயற்பாடுகளும் மற்றும் மகிழ்ச்சியான காலத்து ஹாட்லிக் கல்லூரி மாணவர்களது ஒருசில நினைவுகள் கூறப்பட்டன. அப்பாடசாலை வேலியோடு ஒட்டியே மெதடிஸ்ற் பெண்கள் உயர்தரப் பாடசாலையும் இருப்பதனால் அவர் கூறிய அந்த நினைவுகளின் நிஜங்கள் என் கண் முன்பும் வந்து போயின.

ஒப்பரே'ன் லிபரேஷன் தொடங்கிய காலத்து வெடிச்சத்தமும், நெருப்புப் போல் காற்றோடு கலந்து வந்த வெக்கையும் (வெப்பம்) அவர் சொற் பிரயோகங்களில் நன்றாக உணரமுடிந்தது. "Even grass refused to grow" என்ற வார்த்தை நிச்சயம் வேற்று இனத்தவர்களையும் நாம் அனுபவித்த அந்த போர்க்கால வெம்மையை இலகுவில் விளங்கிக் கொள்ள வைக்கும். இப்படி பலராலும் நன்கு உணரக்கூடிய வகையில் பல வார்த்தைகள் இப்பகுதியில் கையாளப்பட்டுள்ளன.

அன்றைய வான் தாக்குதலுக்கோ குண்டுத் தாக்குதல்களுக்கோ பயந்து ஒளித்து இராது ஆபத்துக்களுக்குள் சிக்கித் தவிக்கும் மக்களுக்கு சாதாரண இளைஞனாக உதவி புரிந்த தருணங்களையும் அப்பொழுது எதிர் கொண்ட பிரச்சினைகளையும் கூறியுள்ளார்.

அப்பாவி இளைஞனாக பதுங்கு குழியில் ஒதுங்கி இருந்த போதும் பெற்றோர் முன்னிலையில் பிடித்துக்கொண்டு போனது, சங்கிலிப் பிணைப்பில் இணைத்தது, வெய்யிலிலும் அசுத்தமான இடங்களிலும் இருத்தியது. பின்பு கப்பலில் ஏற்றியபோது அங்கு பட்ட இன்னல்கள் காலியில் இறக்கி நடத்திய விதம், அங்கு கொடுக்கப்பட்ட தண்டனைகள், கைதிகளாக பிடித்துச் செல்லப்பட்ட இரண்டாயிரத்து எழுநூறு பேரும் பிரிக்கப்பட்டு அவர்களுக்கு தனித்தனி இலக்கங்கள் கொடுத்து கூண்டுகளில் அடைக்கப்பட்டது போன்றவற்றையும் கூறும் இந்த அத்தியாயத்திற்கு "The Prisoner " என்ற தலைப்பு இடப்பட்டிருக்கிறது.

இதை வாசிக்கும் போது இரத்தத்தில் ஒரு வித கொதிப்பே உண்டாகும். அந்த நாட்களில் அந்ந நேரத்தில் அந்தச் சூழலில் இருந்தவர்களுக்கு.

அடுத்த அத்தியாயங்களில் அவர் எப்படி அந்த சிறையில் இருந்து வெளியில் வருகின்றார் என்பதும், பதினெட்டு வயதில் கனடாவிற்கு வந்த அவர் எப்படியான சவால்களைச் சந்தித்து இன்று கனடிய நிறுவனம் ஒன்றில் மிகவும் சிறப்பிற்கு உரிய இடத்தில் இருக்கின்றார் என்பதையும் கூறுவதாகவே அமைந்திருக்கும் என்பது அத்தியாயங்களுக்குக் கொடுக்கப்பட்ட தலைப்புக்கள் மூலம் அறிய முடிகின்றது.

புலம் பெயர்ந்துள்ள ஒவ்வொருவரும் குறிப்பாக இளையவர்கள் நாம் கடந்துவந்த இந்த கடுமையான பாதையினை அறிந்திருக்க வேண்டியது அவசியமானது. அத்தோடு பல் கலாச்சார நாடு ஒன்றில் வேற்று நாட்டிலிருந்து வந்து தன்னை நிலைப்படுத்தி மேல் நிலைக்கு வருவதற்கு ஒரு மனிதன் எவ்வாறான சவால்களை எதிர்கொண்டான் என்பதை அறிவதற்கும் இந்த நூல் உதவியாகவும், சவால்களை எதிர்கொள்வதற்குரிய உந்து சக்தியைக் கொடுப்பதாகவும் அமையும் என்பதை அன்று திரு. றோய் அவர்களே குறிப்புட்டிருந்தார் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

அடுத்த அத்தியாயங்களையும் படித்து முடித்துத் தொடரும் வரை

- **உமா மோகன்** ( M.A) - Montreal

## இல்வாழ்வில் பொன்விழாக் காணும் மொன்றியால் வாழ் வீணைமைந்தன்

---

சூழ்ந்தபல நிலையமைந்தும் சுகம்தேடும்
வழிவிட்டுத் தமிழும் தொண்டும்
வாழ்வோடு கூடிவர வயற்காட்டிற்
கூவுமொரு குயிலே போல்வான்
ஆழ்ந்தமைந்த நூற்தேடல் அருங்கலைகள்
ஆக்குதிறன் கொண்டுவையத்து
ஈழவர்க்காய்த் தமிழெழுதும் இனியானைப்
போற்றுவம்யாம் வாழி அன்ப!

வள்ளுவனார் வகுத்ததமிழ் மறைகூறு
முறைபேணி மனக்கண் நீவிர்
உள்ளூறும் அன்பென்னும் நீர்பாய்ச்சிப்
பெருவாழ்வுப் பயிர்வ ளத்தீர்
தெள்ளுதமிழ் வாழ்வுமுறைத் திறம்படிந்த
யாழ்மண்ணின் சான்றோ ருன்றன்
வெள்ளைமனப் பண்புநலன் பாராட்டிப்
போற்றியது கேட்டின் புற்றோம்!

ஐயநின தருமணத்தின் ஐபத்து
நிறைவாண்டு கண்டு வந்தோம்
கைசெய்யும் கலையாவும் தமிழ்க்குலத்தின்
வளர்ச்சிக்குக் கருவாய் நின்று
வையத்தே பயன்விளைக்கும் திருநாளில்
வாழ்த்துக்கள் சேரக் காண்பாய்
செய்யாளைப் போல்வாள்நின் மனையோடு
தமிழ்ச்செல்வ நீடு வாழி!

**தன் இதயத்தாலும் எழுத்தாலும் வாழ்த்துபவர்**
**அனலை ஆறு. இராஜேந்திரம்**

## தந்தையரைத் தாங்குவோம்

---

தாயார் உதிரம் தந்தார் எமக்கு
தந்தை உயிர் தந்தார்
சேயாக எமைச் சுமந்தார் அன்னை
சேவகம் செய்தார் அப்பா
எட்டு மாதத்தில் எட்டடி கற்பித்து
எட்டிவைக்க ஏற்றவழி செய்தார்
துட்டசெயல் செயவிடாது தூயவனாய் வளர்த்து
பட்டினி தெரியாமல் பாதுகாத்தீர்

மூன்று வயதில் மூன்றுசொல் கற்பித்து
மூச்சிலும் பேச்சிலும் முழுமையானீர்
முன்னேறும் வழிகாட்டி மூலமாய் நின்றவரை
முகமன் செய்து போற்றுவோம்
தாயாருடன் அறுசுவை தீரும் என்றும்
தந்தையுடன் கல்வி போமென்றும்
தாயமாகச் சொன்னாள் தமிழ்ப் பாட்டி
திருவாயாய் ஏற்போம் அவர்வார்த்தை

ஐந்து வயதில் அரவணைத்துச் சென்று
ஐயம்தீர அறிவு புகட்டி
ஐந்தும் இரண்டும் அழகாய்ச் சொல்லி
ஐங்கரனின் அருள்பெறச் செய்தீர்
கல்வியோடு கலைகளையும் கற்க வைத்து
கண்ணும் கருத்துமாய்க் காப்பாற்றி
வில்லங்கம் வரும்போது விரைந்து வந்தவரை
விண்ணுலகம் சென்றாலும் மறப்போமா?

தந்தையர் என்போர் தசையால் ஆனவரா?
தன்னலம் இல்லாத் தலைவர்
எந்தையும் தாயும் இரண்டு கண்கள்
என்றும் இவர்களை மறவாதே
தந்தையர் இறந்த தினத்தில் அல்ல
தரணியில் நாங்கள் உள்ளவரை
சிந்தை நமக்குச் சிறப்பாக இருந்தால்
சீராய்ப் பிதாவைப் போற்றுவோமே!

---

**ஆக்கம்... கவிஞர் மார்க்கம் சந்திரன்**
**(416) 844-7453**


CANADA KANTHASWAMY TEMPLE
Presents
TSN EXPRESS
Vijay TV Super Singer
Sudarshan
Vijay TV Bigg Boss
Amuthavanan
Comedy Artist
Vijay TV Super Singer
Keshav
JUNE
24 - 25
AAROSAI
"WHERE MUSIC BEGINS..."
இசையில்
கார்த்திகேயன்
விழா
KAARTHIKEYAN FEST
Sun TV Actress
Deepthi
Host
இலங்கை - இந்திய - கனடிய கலைஞர்களுடன்
தென்னிந்திய திரை நட்சத்திரங்கள்....
சிறுவர்களுக்கான விளையாட்டுக்கள்
மற்றும் களியாட்ட நிகழ்வுகள்
விளம்பரம் மற்றும் வர்த்தகச்சாவடி
தொடர்புகளுக்கு
Muthu
+14162000792
Thana
+16478892710
Vijay TV Super Singer
Aparna
Zee Tamil
Maathulani
Vijay TV Super Singer
Sushmita
FREE ENTRANCE AND PARKING
கனடா கந்தசுவாமி கோவில் வாகனத்தரிப்பிட திறந்தவெளித்திடலில்



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி. வசந்தா நடராசன் B.A.
(416) 332-0269
vasantha@rogers.com

# ஈழத்துத் திருக்கோயில்கள் 1052



## கறுப்பளை பத்ரகாளி அம்பாள் ஆலயம் பொலநறுவை

“ கல்லாத மாந்தரின் கண்ணீரை நீக்கிடும்
கருவண்ண அன்னை நீயே
கற்றோரின் நெஞ்சத்தில் கலங்கரை விளக்கான
காவியச் சுடரும் நீயே
வில்லாக வேலாக வினை தீர்க்கும் மருந்தாக
விளங்கிடும் சக்தி நீயே
வேண்டிடும் நல்வரம் விரைவாகத் தந்திடும்
ஆவட்டுடைக் காளி உமையே. ”

காளி தந்திரத்திலே கூறப்படும் கருத்துக்கள், காளியின் பெருமையை உணர்த்துகின்றது. “காளி வித்தைக்குச் சமமான வித்தை கிடையாது. அன்னை காளியின் வழிபாட்டினால் ஏற்படும் பலனுக்கு ஈடு கிடையாது. காளி அன்னையைக் குறித்துச் செய்யும் தவத்திற்கு இணையான தவம் இல்லை”. எனக் கூறப்பட்டுள்ளது. காளியின் மந்திரம் எல்லா யுகங்களிலும் சித்தியளிக்கும் சிறந்த வித்தையாக விளங்குகின்றது. கலியுகத்தின் துன்பவெப்பத்தினை நீக்க, காளி வழிபாடு உகந்ததென ஆன்றோர் கூறியுள்ளனர். சிவனைப்போல முக்கண் உடையவளாக, நடனமிடுபவளாக, பிறையணிந்த பிராட்டியாக, காளியன்னை காணப்படுவதாக கூறப்பட்டுள்ளமை, காளியின் பெருமையை எடுத்தியம்புகின்றது.

ஈழத்திலும், தமிழகத்திலும் காளி வழிபாடு ஆழமாக வேரூன்றியுள்ளது. சங்ககாலத்திலே பாலைநிலத்தெய்வமாக காளியை வழிபட்டுள்ளனர். காடுகிழவோள், காடுகாள் என்று சங்ககால மக்கள் காளியை குறிப்பிட்டுள்ளனர். வெற்றி அல்லது கொற்றத்தை தருபவள் கொற்றவை அல்லது கொற்றி எனக் கூறப்படுகின்றாள். கொற்றவை கோட்டவி எனச் சிதைந்த உருமாறி வடமொழியில் காளி என மாற்றமடைந்ததென்பர். இவ்வாறான சக்தியாகிய காளிக்கு ஈழமெங்கும் கோயில்கள் காணப்படுகின்றன.

சக்தியின் அம்சமான பத்திரகாளியின் படைப்பு, சக்தியிலிருந்தே தோன்றியது. சிவனை நிந்தனை செய்த தக்கனை, தக்கனின் மகளான தாட்சாயணி அவனைச் சாபமிட்டு, சிவனிடம் திரும்பி வந்தார். நடந்ததை அறிந்த சிவபிரான் கோபங் கொண்டபொழுது அவரது சிந்தையிலிருந்து அகோர வீரபத்திரர் அவதரித்தார். அம்பிகையின் கோபக்கனலில் இருந்து பத்ரகாளி படைக்கப்பட்டாள். வீரபத்திரரும், பத்ரகாளியும் சென்று தக்கனின் யாகத்தை அழித்தனர். பத்திரர் காளி இணைந்து பத்திரகாளி என்னும் பெயர் தோன்றியது என்பது மற்றுமொரு புராணக்கதையாகக் காணப்படுகின்றது.

பத்திரகாளி வழிபாடு பொலநறுவை மாவட்டத்திலும் சிறப்புப் பெற்றுக் காணப்படுகின்றது. கொலக்கனாவெளி என்னும் கிராமத்தை அடுத்து, வல்லிந்தைக் கிராமம் காணப்படுகின்றது. 1905 ஆம் ஆண்டு இவ்விடம் 5ஆம் ஜோர்ஜ் மன்னரால் வழங்கப்பட்டது. இக்கிராமம் இயற்கை எழில் கொண்ட கிராமமாக விளங்குகின்றது. இக்கிராமத்தின் இருமருங்கும் வயல்வெளிகள் காணப்படுகின்றன. இக்கிராமத்தின் மேற்கே மகாவலி ஆற்றின் சிறுகிளையான வில் என்னும் பேராறு பாய்ந்து இக்கிராமத்தை வளப்படுத்துகின்றது. இவ்வாறான அழகிய கிராமத்திற்கு மேலும் சிறப்பைக் கொடுப்பதாக இவ்வூரில் அமைந்துள்ள வல்லிந்தை ஊர்க்காளி கோயில் காணப்படுகின்றது.

இவ்வூரவர்கள் காளிமீது அபார பக்தி கொண்டவர்களாக விளங்கினர். ஆயினும் காளிக்கென கோயில் அமைக்கப்படாதநிலையில், நாவல்மரங்களிகளில் கொத்துக்களைக் கொண்டு கொத்தப்பந்தல் அமைத்து, காளி அம்பாளை அவ்விடத்திலே பிரதிஷ்டை செய்து வழிபடலாயினர். காளி வழிபாட்டிலும் அடியவர் ஒருவர்மீது அம்பாள் வந்து, அருள்வாக்குச் சொல்லும்முறை காணப்பட்டுள்ளது. வல்லிந்தையில் கொத்துக்கோயிலில் எழந்தருளியுள்ள காளி அம்பாள், அருள்வாக்கு சொல்பவரிடம், தானும் தனது பரிவாரங்களும் தங்குவதற்கு, ஒரு நிரந்தரமான இடம் அமைத்துத் தரும்படி வேண்டுகோள் விடுத்தார். இந்த அருள்வாக்கைக் கேட்ட மக்கள் பழைய இடத்திலேயே காளி அம்பாளுக்கென கற்கோவிலைக்கட்டி அங்கு அம்பாளை எழுந்தருளச் செய்தனர்.

1984 ஆம் ஆண்டு இலங்கை அரசாங்கம் மகாவலி அபிவிருத்தித் திட்டத்தினை அறிமுகப்படுத்தியது. இத்திட்டத்தின் பீ வலயத்தில் வல்லிந்தை கிராம மக்களும், வல்லிந்தையிலிருந்து இரண்டு மைல்களுக்கப்பாலிருந்த, கறப்பளை என்னும் கிராமமக்களோடு ஒன்றிணைக்கபட்டு குடியமர்த்தப்பட்டனர். இவ்வாறு குடியேறிய மக்கள் பெருங்காடாகவிருந்த குடியிருப்பு நிலங்களை வெட்டித் துப்புரவு செய்து, தமது வாழ்விடங்களை அமைத்துக் கொண்டனர். அவ்வாறே தாம் வழிபட்டு வந்த காளிஅம்பாளுக்கும் ஓரிடத்தைத் தெரிவுசெய்து புனிதப்படுத்தி, அவ்விடத்திலே அன்னையை எழுந்தருளச் செய்து வழிபாடியற்றி வந்தனர்.

**- வளரும்...**



# இவ்வார ராசிபலன்

**16-06-2023 வெள்ளி தொடக்கம் 22-06-2023 வியாழன் வரையும்**




**மேஷம்:** பிரார்த்தனை நிறைவேறும் வாரம். சாமர்த்தியமாக செயல்படுவீர்கள். கால்நடைகளால் லாபம் உண்டு. கவலைகள் விலகும். கலைத்தொழில் லாபம் தரும். திடீர் திருப்பம் ஏற்படும். பதவி உயர்வு கிட்டும். ஆடம்பர எண்ணம் அலைமோதும். ஆடை, அணிகலன் சேர்க்கையுண்டு. முயற்சிகள் வெற்றியை தரும். சேமிக்கும் எண்ணம் ஏற்படும். அதிகாரம் உயரும். பயணம் அனுகூலம் தரும். தொழில் போட்டி அதிகமாகும். புதிய கடன் உருவாகும். கணவன், மனைவி அன்யோன்யம் உண்டு. உத்தியோக உயர்வு கிட்டும். ஆக்கப்பூர்வமான எண்ணம் உதயமாகும். வாகன செலவுகள் அதிகரிக்கும். பெற்றோர்களின் ஆதரவு கிட்டும். திருப்பங்கள் நிறைந்த காலம். வெளிநாட்டுப் பயணம் உருவாகும். வீண் விரயம் தவிர்க்கவும். வியாபார விருத்தி ஏற்படும். பாக்கிகள் வசூலாகும். உறவுகளால் மதிப்பு கூடும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். ஆடம்பர நாட்டம் ஏற்படும். வணிகத்தொழில் விரிவடையும். விவசாயிகளுக்கு ஏற்றமான காலம். பல்வலி வந்து போகும். பிராணிகளால் தொல்லை ஏற்படும். பெண்களால் பெருமை சேரும். முயற்சிகள் பலிதமாகும். உடல்சோர்வு ஏற்படும். திருஷ்டிகள் விலகும். பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும். தெளிவான முடிவுகள் உதயமாகும். பழையக் கடன் தீரும். ஷேர் மார்க்கெட் லாபம் தரும். உத்தியோகத்தில் இடமாற்றம் உண்டு. விளையாட்டுத் துறையில் வெகுமதி கிடைக்கும். பிள்ளைகளால் அலைச்சல் உண்டு. மனைவியின் கோபம் அதிகரிக்கும். ஏற்றங்கள் அமையும். தோற்றப் பொலிவு கூடும். மாற்றத்தை விரும்புவீர்கள். பெருமைகள் சேரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ ராமர், அதிர்ஷ்ட எண்: 8,4,6,1
அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: W,X




**ரிஷபம்:** மகிழ்ச்சியும், வளர்ச்சியும் உருவாகும் வாரம். பெருமைகள் கூடும். வழக்குகளில் வெற்றி உண்டு. நண்பர்களால் நன்மை உண்டு. வரவுகளால் திருப்தி உண்டு. வாழ்க்கையில் மேன்மை உண்டு. வாகனத்தால் செலவு உண்டு. மற்றவர்களால் மேன்மை உண்டு. பெற்றவர்களின் வாழ்த்து உண்டு. கடன் வாங்க நேரிடும். கல்வியில் கவனம் தேவை. குடும்ப குழப்பம் தீரும். பணப்பற்றாக்குறை தீரும். எள் தானம் செய்வதால் ஏற்றங்கள் அதிகரிக்கும். புத்துணர்வோடு செயல்படுவீர்கள். பழைய பாக்கி வசூலாகும். வணிகத்தொழில் வளம் தரும். உறவினர் வருகை உண்டு. உடல்நிலையில் கவனம் தேவை. மனைவியின் அன்பு அதிகரிக்கும். சாதகமான சூழ்நிலைகள் உருவாகும். உதவும் குணம் அதிகரிக்கும். பழையக்கடன் தீரும். புதிய நட்பு உருவாகும். பேச்சில் நிதானம் தேவை. விபரீத எண்ணம் விலகும். மனம் மகிழும். குளிர்பான தொழில் கவனம் தேவை. செயல் விவேகம் கூடும். தொலைபேசித் தகவல் தொல்லை தரும். உணவுத்தொழில் உயர்வு தரும். கூட்டுத்தொழில் லாபம் தரும். வீட்டுத்தேவைகள் பூர்த்தியாகும். புதிய எண்ணங்கள் உருவாகும். முற்போக்குச் சிந்தனை வரும். வங்கி சேமிப்பு அதிகரிக்கும். சீரான வாழ்வு அமையும். சிந்தனைகள் மேலோங்கும். ஆடம்பர எண்ணங்கள் அதிகரிக்கும். ஆடை, அணிகலன் சேரும். செல்வாக்கு உயரும். குடும்ப பாசம் அதிகரிக்கும். இசை ஆர்வம் கூடும். பிள்ளைகள் நலனில் அக்கறை தேவை. வெளிநாட்டு நபரால் வெகுமதி கூடும். இனிய தகவல் வந்து சேரும். உறவுகளால் மதிப்பு கூடும்.

வழிபட வேண்டிய தெய்வம்: இந்திர பகவான், அதிர்ஷ்ட எண்: 2,6,9,1
அதிர்ஷ்ட நிறம்: இளம்பச்சை, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Y,D




**மிதுனம்:** நினைத்ததெல்லாம் நடக்கும் வாரம். உத்தியோக உயர்வு கிட்டும். வியாபார விருத்தி ஏற்படும். வீண் விரயம் தவிர்க்கவும். வெளிநாட்டுப் பயணம் உருவாகும். முயற்சிகள் பலிதமாகும். கலைத்துறை முன்னேற்றம் கொடுக்கும். வசந்தம் வீடு தேடி வரும். மனைவியால் மரியாதை உயரும். புதிய நட்பு உருவாகும். அடுத்த வீட்டாரின் ஆதரவு கிட்டும். பிள்ளைகளின் தேவை பூர்த்தியாகும். பெருமிதத்துடன் காணப்படுவீர்கள். பிரபல்ய ஆசை ஏற்படும். பிரச்சனைகள் தீரும். தொழில் வாய்ப்பு ஏற்படும். சுபச்செய்தி வரும். வாழ்த்துக்கள் கிட்டும். உறவுகளால் செலவுகள் அதிகரிக்கும். நண்பர்களிடம் எச்சரிக்கை தேவை. மனநிம்மதி அதிகரிக்கும். பங்குச்சந்தையில் லாபம் அதிகரிக்கும். வினோதமான எண்ணங்கள் பூர்த்தியாகும். உரிய நேரத்தில் உதவிகள் கிட்டும். புதிய முதலீடுகளில் கவனம் தேவை. இனம் புரியா சந்தோஷம் மனதில் குடிகொள்ளும். ஆலோசனைகளால் ஆதாயம் உண்டு. நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். நம்பிக்கை துளிர்விடும். பழைய பாக்கிகள் வசூலாகும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். பிரார்த்தனை பலன் கொடுக்கும். பூர்வீகச் சொத்துக்கள் கிடைக்கும். புதிய நாட்டம் ஏற்படும். உறவினர் வருகை உண்டு. மறைமுக எதிர்ப்புக்கள் மாறும். அரசுத்துறையில் ஆதாயம் உண்டு. புதுமையை விரும்புவீர்கள். இடமாற்றம் நன்மை தரும். குடும்பத்தினர்களின் அனுசரிப்பு கிட்டும். பெரியோர்களின் வாழ்த்துக் கிடைக்கும். செயல்பாட்டின் தீவிரம் கூடும். அலைச்சல் அதிகரிக்கும்.

வழிபட வேண்டிய தெய்வம்: துர்காதேவி, அதிர்ஷ்ட எண்: 8,6,5,9
அதிர்ஷ்ட நிறம்: வெண்பட்டு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,Q




**கடகம்:** எதிரிகள் உதிரியாகும் வாரம். பழைய பகை தீரும். வீண் செலவுகள் அதிகரிக்கும். மங்களச் செய்தி வரும். வார்த்தைகளில் நிதானம் நல்லது. உத்தியோகத்தில் உயர்வு உண்டு. நண்பர்கள் பாராட்டு கிட்டும். சகோதர வகையில் சகாயம் கிட்டும். தர்மச் சிந்தனைகள் மேலோங்கும். மாணவர்களுக்கு கல்வியில் ஆர்வம் கூடும். பங்குச்சந்தையில் பணம் புரளும். பிணிகள் நீங்கும். இக்கட்டான சூழ்நிலைகள் அகலும். திருமண முயற்சி பலன் தரும். உறவினர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும். பொது விஷயங்களில் நாட்டம் ஏற்படும். காதலர்களுக்குள் மனக்கசப்பு ஏற்படும். ஆபரணச் சேர்க்கையுண்டு. இடமாற்றம் ஏற்படும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். கூட்டுத்தொழில் லாபம் தரும். பித்ருக்கள் சாபம் நீங்கும். பொது விஷயங்களில் ஆர்வம் கூடும். சிரமங்கள் குறையும். எண்ணங்கள் நிறைவேறும். புதிய தொழில் வாய்ப்புக்கள் பெருகும். பழைய நண்பர்களை சந்திப்பீர்கள். கணவன், மனைவி வாக்குவாதம் ஏற்படும். கலைஞர்களுக்கு வாய்ப்பு வரும். நீண்ட நாளை பிரச்சனை முடிவுக்கு வரும். அரசியல் ஆதாயம் தரும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். பிரிந்த குடும்பம் ஒன்று சேரும். விவசாயிகள் கோரிக்கை நிறைவேறும். வேண்டாத உறவுகளை தவிர்க்கவும். முன்னேற்றமான தருணம். சேமிக்கும் எண்ணம் ஏற்படும். பதவி உயர்வு கிட்டும். திடீர் திருப்பம் ஏற்படும். கலைத்தொழில் லாபம் தரும். கடன் வாங்க நேரிடும். கண்நோய் வந்து போகும். கவலைகள் விலகும். கால்நடைகளால் லாபம் உண்டு. கலையில் ஈடுபாடு அதிகரிக்கும். தொழிலில் லாபம் கூடும். பெண்களுக்கு கவனம் தேவை.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீதேவி, அதிர்ஷ்ட எண்: 1,2,4,7
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Z,H



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள் 'ராஜயோகம்'

Dr. K. RAM.Ph.D (USA)

தொடர்புக்கு: 0091-9840160068
9940431377




**சிம்மம்:** பெத்தவங்க வாழ்த்து கிடைக்கும் வாரம். புதிய சொத்து சேரும். மருத்துவர்களுக்கு நற்பெயர் கிட்டும். வழக்கு முடிவுக்கு வரும். பிள்ளைகளால் தொல்லை உண்டாகும். குழப்பங்கள் அகலும். வியாபாரத்தில் கவனம் தேவை. நீண்ட நாள் பிரச்சனை முடிவுக்கு வரும். பதவி உயர்வு தடைப்படும். வர்த்தக தொழில் லாபம் தரும். மாணவர்களுக்கு உற்சாகம் கூடும். புதிய முயற்சியில் கவனம் தேவை. முன்கோபத்தை தவிர்க்கவும். பயணம் பலன் தரும். கணவன், மனைவி சச்சரவு ஏற்படும். புகழும், பொருளும் பெருகும். நன்மைகள் அதிகரிக்கும். விளையாட்டுத்துறையில் வெகுமதி கிடைக்கும். உத்தியோக இடமாற்றம் உண்டு. ஷேர் மார்க்கெட்டில் லாபம் அதிகரிக்கும். வழக்குகள் சாதகமாகும். வாகன மாற்றம் உண்டு. பணப்பற்றாக்குறை தீரும். குடும்ப குழப்பம் நீங்கும். கல்வியில் கவனம் தேவை. தனம் சேரும். பிள்ளைகளின் அன்பு அதிகரிக்கும். திருஷ்டிகள் வில்கும். ஆடம்பரப் பொருள் சேரும். உடல் சோர்வு ஏற்படும். குடும்ப மேன்மை உண்டாகும். மனைவியின் கோபம் அதிகரிக்கும். ஏற்றங்கள் அதிகரிக்கும். தோற்றப்பொலிவு கூடும். மாற்றத்தை விரும்புவீர்கள். மனக்கட்டுப்பாடு அவசியம். பணத்தட்டுப்பாடு நீங்கும். ஆக்கம் அதிகரிக்கும். வயிறு உபாதைகள் தோன்றி மறையும். வரவு திருப்தி தரும். குடும்ப கௌரவம் உயரும். குதூகலமான எண்ணம் உருவாகும். மின்சாரத்தில் கவனம் தேவை. பிரபல்யங்களை சந்திக்கும் வாய்ப்பு ஏற்படும். வெற்றி வீடு தேடி வரும். விவேகம் கை கொடுக்கும். செல்வச்செழிப்பு உயரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி, அதிர்ஷ்ட எண்: 6,4,8,1
அதிர்ஷ்ட நிறம்: செம்மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: W,I




**கன்னி:** ஆடம்பர நாட்டம் அதிகரிக்கும் வாரம். பெண்களால் பெருமை சேரும். பிராணிகளால் தொல்லை ஏற்படும். பல்வலி வந்து போகும். பணவரவு திருப்தி தரும். பிள்ளைகளால் வெகுமானம் கூடும். விவசாயிகளுக்கு ஏற்றமான காலம். பயணம் தடைப்படும். வணிகத்தொழில் விரிவடையும். குடும்ப உறவு பலப்படும். பால் தானம் பாவம் போக்கும். விரயங்கள் அதிகரிக்கும். விலை உயர்ந்த பொருட்களில் முதலீடு உண்டாகும். தொலைதூர தொடர்பு லாபம் தரும். சம்பளம் எதிர்பார்த்தபடி அமையும். பொருளாதாரம் ஏற்றம் பெருகும். முகப்பொலிவு கூடும். உடல்நலம் சிறக்கும். தெம்பும், தைரியமும் கூடும். புதிய தொழில் முயற்சியை தள்ளிப் போடுங்கள். திருமணமாகாத மங்கையருக்கு திருமண பாக்கியம் கைகூடும். கொடுக்கல், வாங்கலில் சுமூகநிலை ஏற்படும். பாக்கிகள் வசூலாகும். மூத்தோர்கள் மனக்குறை அகலும். நினைத்ததை சாதித்துக் காட்டும் சாதனையான காலம். பணப்புழக்கம் சீராக இருந்து வரும். மன அமைதி கிட்டும். செய்த்தொழில் வியாபாரம் சிறக்கும். திட்டமிட்ட காரியங்களில் ஒன்றிரண்டு நடந்தேறும். வெற்றிப் பாதையில் அடி எடுத்து வைப்பீர்கள். பழைய சம்பள பாக்கிகளும் வந்து சேரும். பொருளாதாரம் உயரும். தடைகள் விலகும். நீண்ட நாளைய நோய் விலகும். புதிய தொழில் முயற்சி கைக்கூடும். நண்பர்கள் உதவி கிட்டும். சுபகாரிய நிகழ்ச்சி நடைபெறும். தனலாபம் பெருகும். ஞாபகத் திறன் அதிகரிக்கும். உத்தியோகத்தில் உயர்வு உண்டு. முயற்சிகளில் தாமதம் ஏற்படும். கலைஞர்களுக்கு புகழ் கூடும். சேமிப்பு வளரும். குடும்பத்தில் அமைதி நிலவும். வாகனங்களில் முதலீடு உண்டாகும். பணவரவு சுமாராக இருக்கும். தந்தை உடல்நலம் கவனம் தேவை. வெளியூர் பயணம் உண்டு. காரியம் வெற்றி தரும்.

வழிபட வேண்டிய தெய்வம்: சப்த கன்னிமார்கள், அதிர்ஷ்ட எண்: 9,5,3,1
அதிர்ஷ்ட நிறம்: யானை நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,F




**துலாம்:** பொன், பொருள் சேரும் வாரம். பதவி உயர்வு கிட்டும். நல்ல செய்திகள் நாடி வரும். பிள்ளைகளின் தேவைகள் பூர்த்தியாகும். கூட்டுப் பிரார்த்தனை நன்மை தரும். எதிரிகளின் தொல்லை குறையும். பயணங்களால் வெகுமதி கூடும். முயற்சிகள் பலன் கொடுக்கும். ஆடம்பரச் செலவுகள் அதிகரிக்கும். பெண்களுக்கு பெருமை சேரும். வாகனத்தில் கவனம் தேவை. பெண்களுக்கு அணிகலன் சேரும். மறைமுக எதிர்ப்புக்கள் குறையும். பெற்றோர்களின் பாராட்டு கிட்டும். காலை நேரத்தில் கவனம் தேவை. மனஅமைதி அதிகரிக்கும். எதிர்பார்த்த விஷயம் தாமதமாகும். எண்ணங்கள் பூர்த்தியாகும். மனமகிழ்ச்சி கிட்டும். பணியாட்கள் ஆதரவுகள் பெருகும். உழைப்பிற்கான பலன் கிடைக்கும். நல்லோர்கள் வாழ்த்து அதிகரிக்கும். ஏற்றமும், மாற்றமும் அதிகரிக்கும். பக்குவமான பேச்சு பயன் தரும். மனை வாங்கும் சிந்தனை உதயமாகும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். கலைத்தொழிலில் கவனம் தேவை. விருந்தினர்கள் வருகை உண்டு. அர்ச்சனை செய்வதால் பிரச்சனை குறையும். விரக்திகள் மறையும். பொறுப்புக்கள் சிறப்பு சேர்க்கும். தனவரவு உண்டு. மனக்கசப்பு நீங்கும். நிதி நிலைமை திருப்தி தரும். புதிய வாய்ப்புக்கள் உருவாகும். குழந்தைகளால் பெருமை சேரும். பொருளாதார வளம் மேம்படும். எதிரிகள் பலம் குறையும். தேக ஆரோக்கியம் திருப்தி தரும். சகோதரியினால் அனுகூலம் உண்டு. ஆபரணச்சேர்க்கை ஏற்படும். கலைத்துறையில் திருப்பம் ஏற்படும். மாணவர்களுக்கு படிப்பில் கவனம் தேவை. கடன்சுமை அதிகரிக்கும். எதிரிகளால் தொல்லை உண்டாகும். வரவுகள் திருப்தி தரும். விவசாயம் பலன் தரும். கவலைகள் ஒழியும். புதிய நட்பு உருவாகும்.

வழிபட வேண்டிய தெய்வம்: கருட பகவான், அதிர்ஷ்ட எண்: 4,9,8,3
அதிர்ஷ்ட நிறம்: வைலட், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: W,Z




**விருச்சிகம்:** கணவன், மனைவி கௌரவம் உயரும் வாரம். பாராட்டுக்கள் கிடைக்கும். ஞாபக மறதி ஏற்படும். பேச்சில் நிதானம் தேவை. திருமண வாய்ப்பு கூடி வரும். திடீர் லாபம் தரும். மனக்குழப்பம் நீங்கும். மற்றவர்கள் உதவி கிட்டும். வியாபார லாபம் கூடும். மாற்று இனத்தவர் வாழ்வு கிட்டும். மகான்களின் சந்திப்பு கிட்டும். பெற்றோர் வழி மருத்துவச் செலவு உண்டு. யோகமான காலம். ஷேர்மார்க்கெட்டில் லாபம் அதிகரிக்கும். கமிஷன் தொழில் லாபம் தரும். புதிய முதலீடு உண்டாகும். கற்பனை வளம் அதிகரிக்கும். கடன் தொல்லை தீரும். பிள்ளைகளால் பெருமை சேரும். பகையாளிகளின் நிலை மாறும். பெண்வழி பிரச்சனை முடிவுக்கு வரும். திட்டம் வெற்றி பெறும். மனைவியால் மருத்துவச் செலவு உண்டு. வினோதமான எண்ணங்கள் விலகும். புண்ணிய ஸ்தலம் செல்ல வேண்டி வரும். பழைய நண்பரால் பணவரவு உண்டு. சட்டம் சாதகமாகும். நட்டமில்லாத நன்மை அதிகரிக்கும். பட்டம் பதவி வந்து சேரும். சுபச்செய்திகள் வரும். மாலை நேரத்தில் செய்யும் பிரார்த்தனை மன அமைதியைத் தரும். பெண்களுக்கு யோகம் கூடும். பெரியயவர்களை அனுசரித்து செல்வது நல்லது. விரயங்கள் அதிகமாகும். வீண் வம்பு உருவாகும். இரும்பு தொழில் ஏற்றம் தரும். அணிகலன் சேரும். தாய்வழி உறவில் கவனம் தேவை. பாதகமான சூழ்நிலைகள் அகலும். சுபச்செலவு வரும். வினைகள் அகலும். உற்சாகம் களை கட்டும். வேலை பளு அதிகமாகும். புதிய சிந்தனை உருவாகும். பழைய நண்பரை சந்திக்க நேரிடும். பணியில் கண்டிப்பு அவசியம். தொழில் லாபம் பெருகும். மனைவியின் பேச்சு ஆறுதல் தரும். புதுமைகள் நிறைந்த காலம்.

வழிபட வேண்டிய தெய்வம்: வலம்புரி விநாயகர், அதிர்ஷ்ட எண்: 9,3,5,1
அதிர்ஷ்ட நிறம்: கருப்பு (கருமை), அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,F

(தொடர்ச்சி 30 பக்கம்)

# அன்பின் தொனி - 694

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**ஜெபம்**

**ஜெபிக்க வேண்டியது ஒரு கட்டளை -** Praying is a Command

இதற்காகச் சகாயங்கிடைக்குங் காலத்தில் பக்தியுள்ளவனெவனும் உம்மை நோக்கி விண்ணப்பஞ்செய்வான், அப்பொ ழுது மிகுந்த ஜலப்பிரவாகம் வந்தாலும் அது அவனை அணுகாது. **- சங்கீதம் 32: 6**

மெய்யாய் தேவன் எனக்கு செவிகொடுத்தார், என் ஜெபத்தின் சத்தத்தைக் கேட்டார். என் ஜெபத்தை தள்ளாமலும் தமது கிருபையை என்னைவிட்டு விலக்காமலும் இருந்த தேவனுக்கு ஸ்தோத்திரமுண்டாவதாக. **- சங்கீதம் 66: 19-20**

அப்பொழுது அவர்கள் கூப்பிடுகிறதற்குமுன்னே நான் மறுஉத்தரவுகொடுப்பேன், அவர்கள் பேசும்போதே நான் கேட் பேன். **- ஏசாயா 65: 24**

அந்த மூன்றாம் பங்கை நான் அக்கினிக்குட்படப்பண்ணி, வெள்ளியை உருக்குகிறதுபோல அவர்களை உருக்கி, பொன்னைப் புடமிடுகிறதுபோல அவர்களைப் புடமிடுவேன், அவர்கள் என் நாமத்தைத் தொழுதுகொள்வார்கள், நான் அவர்கள் விண்ணப்பத்தைக் கேட்பேன், இது என் ஜனமென்று நான் சொல்லுவேன், கர்த்தர் என் தேவன் என்று அவர்கள் சொல்லுவார்கள். **- சகரியா 13: 9**

அல்லாமலும், உங்களில் இரண்டு பேர் தாங்கள் வேண்டிக்கொள்ளப்போகிற எந்தக் காரியத்தைக் குறித்தாகிலும் பூமியிலே ஒருமனப்பட்டிருந்தால், பரலோகத்தில் இருக்கிற என் பிதாவினால் அது அவர்களுக்கு உண்டாகும் என்று உங்களுக்குச் சொல்லுகிறேன். **- மத்தேயு 18: 19**

மேலும், நீங்கள் விசுவாசமுள்ளவர்களாய் ஜெபத்திலே எவைகளைக் கேட்பீர்களோ அவைகளையெல்லாம் பெறுவீர்கள் என்றார். **- மத்தேயு 21: 22**

ஆதலால், நீங்கள் ஜெபம்பண்ணும் போது எவைகளைக் கேட்டுக்கொள்வீர்களோ, அவைகளைப் பெற்றுக்கொள்வோம் என்று விசுவாசியுங்கள், அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும் என்று சொல்லுகிறேன். **- மாற்கு 11: 24**

மேலும் நான் உங்களுக்குச் சொல்லுகிறதாவது: கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும், தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள், தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும். ஏனென்றால், கேட்கிறவன் எவனும் பெற்றுக்கொள்ளுகிறான், தேடுகிறவன் கண்டடைகிறான், தட்டுகிறவனுக்குத் திறக்கப்படும். **- லூக்கா 11: 9-10**

உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்துகொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும். **- யாக்கோபு 1: 5**

**தேவன் ஜெபத்தை கேட்டு பதில் கொடுக்கிறார் -** God Hears and Answers Prayer

கர்த்தாவே, சிறுமைப்பட்டவர்களுடைய வேண்டுதலைக் கேட்டிருக்கிறீர், அவர்கள் இருதயத்தை ஸ்திரப்படுத்துவீர். மண்ணான மனுஷன் இனிப் பலவந்தஞ்செய்யத் தொடராதபடிக்கு, தேவரீர் திக்கற்ற பிள்ளைகளுக்கும் ஒடுக்கப் பட்டவர்களுக்கும் நீதிசெய்ய உம்முடைய செவிகளைச் சாய்த்துக் கேட்டருளுவீர். **- சங்கீதம் 10: 17-18**

ஜெபத்தைக் கேட்கிறவரே, மாம்சமான யாவரும் உம்மிடத்தில் வருவார்கள். **- சங்கீதம் 65: 2**

அவருடைய ஆசாரியரில் மோசேயும் ஆரோனும், அவர் நாமத்தைப்பற்றிக் கூப்பிடுகிறவர்களில் சாமுவேலும், கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டார்கள், அவர் அவர்களுக்கு மறுஉத்தரவு அருளினார். **- சங்கீதம் 99: 6**


அப்பொழுது நீ கூப்பிடுவாய், கர்த்தர் மறுஉத்தரவு கொடுப்பார், நீ சத்தமிடுவாய்: இதோ, நான் இருக்கிறேன் என்று சொல்லுவார். **- ஏசாயா 58: 9**

அப்பொழுது மரித்தவன் வைக்கப்பட்ட இடத்திலிருந்த கல்லை எடுத்துப் போட்டார்கள். இயேசு தம்முடைய கண்களை ஏறெடுத்து: பிதாவே, நீர் எனக்குச் செவிகொடுத்தபடியினால் உம்மை ஸ்தோத்தரிக்கிறேன். நீர் எப்பொழுதும் எனக்குச் செவிகொடுக்கிறீர் என்று நான் அறிந்திருக்கிறேன், ஆனாலும் நீர் என்னை அனுப்பினதைச் சூழ்ந்துநிற்கும் ஜனங்கள் விசுவாசிக்கும்படியாக அவர்கள்நிமித்தம் இதைச் சொன்னேன் என்றார். **- யோவான் 11: 41-42**

**தொடரும்...**










## இவ்வார ராசிபலன்

(28 பக்கத் தொடர்ச்சி)




**தனுசு:** எதிர்ப்புக்கள் ஓடி ஒழியும் வாரம். ஆடம்பர எண்ணம் அதிகரிக்கும். பூர்வீகச் சொத்துக்கள் கிடைக்கும். கல்வியில் மந்த நிலை காணப்படும். ஏற்றுமதி தொழில் லாபம் தரும். செயலில் துணிவு கூடும். நீண்டநாள் கனவு நிறைவேறும். குடும்ப உறவு பலப்படும். தனவரவு உண்டு. உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கும். வேண்டாத விஷயங்கள் விலகும். சுயத்தொழிலில் கவனம் தேவை. பணியில் ஆர்வம் ஏற்படும். பழையக்கடன் வசூலாகும். உடல்வலி தோன்றி மறையும். விருப்பமான தொழில் அமையும். திடீர் செலவு ஏற்படும். உறவினர் வருகை உண்டு. பெற்றோரின் ஆசி உண்டு. பேச்சில் கம்பீரம் இருக்கும். சுப விரயம் ஏற்படும். உடல்நிலையில் கவனம் தேவை. சிரித்த முகத்தோடு காணப்படுவீர்கள். உண்மைகள் வெளிப்படும். பக்கத்து வீட்டு பகை மாறும். மெத்தனப்போக்கு மாறும். மேன்மைகள் அதிகரிக்கும். சுயத்தொழில் வாய்ப்பு அமையும். சுபச்செய்தி வரும். சந்தர்ப்பங்கள் சாதகமாக அமையும். திறமைகள் வெளிப்படும். முடிவுகளில் தெளிவு இருக்கும். தன்னம்பிக்கை துளிர்விடும். மனோதைரியம் அதிகரிக்கும். விரும்பிய பொருள் கிடைக்கும். வாகன மாற்றம் ஏற்படும். மன அமைதி சீர்குலையும். பயணங்களால் இடையூறு ஏற்படும். ஆன்மீக சிந்தனை அதிகமாகும். பிள்ளைகள் வழியில் தொல்லைகள் கூடும். பெற்றோர் நலனில் அக்கறை கூடும். பணியில் கண்டிப்பு தேவை. வாக்குவாதங்கள் ஏற்படும். ஆபரணப் பொருள் களவுப்போகும். குடும்ப வளர்ச்சி கூடும். நெருப்பினால் அபாயம் ஏற்படும். அடுத்தவர் தலையீடு அதிகமாகும். அத்தியாவசிய செலவு அதிகரிக்கும். நட்டமில்லாத நன்மை உண்டு. திட்டமிட்ட செயல் வெற்றி பெறும். கடல் கடந்த பயணம் உண்டாகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: கணபதி, அதிர்ஷ்ட எண்: 2,1,4,9
அதிர்ஷ்ட நிறம்: குங்கும கலர், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: A,Q




**மகரம்:** சுபச்செய்தி வரும் வாரம். சிக்கனத்தை கையாள வேண்டும். வெளியூர் பயணம் வெற்றி தரும். உத்தியோக இடமாற்றம் ஏற்படும். பெண்களின் ஆலோசனை பெருமை தரும். பிள்ளைகளால் நல்ல செய்தி வரும். நண்பர்கள் பிரிவு ஏற்படும். உறவினர்கள் வருகை உண்டு. உத்தியோக உயர்வு உண்டு. கண்ணாடிப் பொருட்கள் சேதம் உண்டாகும். ஆறுதலான சூழ்நிலை அமையும். மருத்துவ நிவர்த்தி ஏற்படும். திருப்தி பெருகும். மங்களச் செய்தியால் மனம் மகிழும். அரசு வகையில் அனுகூலம் கிட்டும். பழைய பகை மாறும். மனைவியால் மதிப்பு உயரும். புதிய முயற்சிகளை தள்ளி வைக்கவும். பொறாமைகள் அதிகரிக்கும். களவுப்போன பொருள் திரும்ப கிடைக்கும். மாற்று இன நட்புப் பெருகும். வயிற்று உபாதைகள் வந்து சேரும். வங்கி சேமிப்பு உயரும். தொல்லை தந்தவர் விலகிடுவர். தொழில் வளர்ச்சி மேன்மைத் தரும். தொழில் முன்னேற்றம் மகிழ்ச்சி தரும். எதிர்மறை எண்ணம் உருவாகும். கணவன், மனைவி இடையே நல்லதொரு புரிந்துணர்வு ஏற்படும். வீடு வாங்கும் வாய்ப்பு உள்ளது. மனதில் குழப்பம் தீரும். மனதில் உள்ள பாசம் வெளிப்படும். பெற்றோர்களால் பாராட்டுப் பெறுவீர்கள். சுபிட்ஷங்கள் பெருகும். கடன் கொடுப்பவராக இருப்பீர்கள். உங்களால் நிறைய பிரச்சனைகள் அகலும். வீட்டில் சந்தோஷம் நிலவும். மனஅமைதி உண்டாகும். புகழும், பொருளும் பெருகும். கனவுத்தொல்லை உண்டு. கைப்பொருள் ஒன்று களவுப்போகும். உறவினரால் உற்சாகம் உண்டு. பூர்வீகச் சொத்து சேரும். ஜீவ ராசிகளுக்கு உணவு அளித்து பலன் பெறலாம். யோக பலம் கூடும். அலைச்சல் குறையும். குதூகலம் கூடும்.
வழிபட வேண்டிய தெய்வம்: திரிபுரசுந்தரி அம்மன், அதிர்ஷ்ட எண்: 7,5,4,2
அதிர்ஷ்ட நிறம்: பழுப்பு நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: X,J




**கும்பம்:** செல்வாக்கு பெருகும் வாரம். குடும்ப ஒற்றுமை கூடும். சுபச்செய்தி கூடி வரும். தொழில் வளர்ச்சி கூடும். குடும்ப சந்தோஷம் அதிகரிக்கும். செயல்திறமை வெளிப்படும். விவசாயம் லாபம் தரும். விவாத முயற்சி வெற்றி தரும். உதவிகள் கிடைக்கும். நிதி நிலைமை சீராகும். விருந்தினர் வருகை உண்டு. குழந்தைகளால் அல்லல் ஏற்படும். புண்ணிய ஸ்தல பயணம் ஏற்படும். மனதில் உற்சாகம் கூடும். ஆயுள் விருத்தி அதிகரிக்கும். வீண் வம்பு விலகும். குடும்ப சண்டைகள் முற்றிலும் அகன்றுவிடும். செயல்களில் கவனம் தேவை. வியாபாரத்தில் நன்மை உண்டு. மருத்துவச் செலவு குறையும். மனோ பயம் நீங்கும். மனை வாங்கும் யோகம் உண்டு. நோயிலிருந்து பூரண குணமடைவீர்கள். குடும்ப சேமிப்பு உயரும். இனிய தகவல்கள் வந்து சேரும். பழைய நண்பர்கள் சந்திப்புக் கிட்டும். தனவரவு பெருகும். பெரிய மனிதர்களை சந்திப்பீர்கள். தன்னம்பிக்கை அதிகமாகும். சிறிய இடையூறு ஏற்படும். வாகன அபிவிருத்தி உண்டு. எண்ணிய காரியம் கைக்கூடும். இன்னல்கள் அகலும். தோல்விகள் விலகும். கட்டிடத்தொழில் லாபம் தரும். பிரயாணம் ஏற்படும். உணவு விடுதி லாபம் தரும். புதிய வாய்ப்பு தேடி வரும். அரசு வழி ஆதாயம் உண்டு. அரசியலில் புகழ் கூடும். மாணவர்கள் பாராட்டுப் பெறுவார்கள். பகைவர் பணிந்து நிற்பர். பொறுப்புக்கள் கூடும். பொருளாதாரம் சிறப்பு தரும். பிள்ளைகளால் மதிப்பு உயரும். முடிவுகள் சாதகமாகும். உறவுகளால் நன்மை உண்டு. காதலில் மோதல் உண்டு. ஆரோக்கியம் அதிகரிக்கும். விருந்தினர் வருகையுண்டு. உத்யோக உயர்வு உண்டு. பாராட்டுக்கள் அதிகமாகும். வெற்றிகள் குவியும். சிறிய இடையூறு ஏற்படும். மாணவர்கள் திறமை பளிச்சிடும். மற்றவர்களால் பாராட்டப்படுவீர்கள். உடல்நலம் சீராகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீ பொன்னியம்மன், அதிர்ஷ்ட எண்: 1,5,4,9
அதிர்ஷ்ட நிறம்: செம்மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: H,I




**மீனம்:** பெருமைகள் சேரும் வாரம். பொறுப்புக்கள் கூடும். சிறப்புக்கள் சேரும். எதிர்ப்புக்கள் அடங்கும். பிரார்த்தனை நிறைவேறும். பித்தளைத் தொழில் லாபம் தரும். தோல்விகள் விலகும். கட்டிடத் தொழில் லாபம் தரும். நற்காரியங்களால் கீர்த்தி பெருகும். புதிய பதவிகள் கிட்டும். பணியில் உயர்வு உண்டு. இடமாற்றம் நன்மை தரும். பொருள் வரவு திருப்தி தரும். இயந்திர தொழிலால் லாபம் உண்டு. குடும்பம் மேன்மை தரும். ஆரோக்கியம் சீராகும். அதிர்ஷ்ட வாய்ப்பு உருவாகும். நல்லோர்கள் நட்பு கிட்டும். வெளியூர் பயணம் ஏற்படும். பழைய கடன் வசூலாகும். பெரிய மனிதர்களை சந்திப்பீர்கள். புண்ணிய ஸ்தல பயணம் உண்டு. உடன் பிறந்தவரால் ஆதாயம் உண்டு. கூட்டுத்தொழிலில் மோசடி ஏற்படும். அன்னதானம் செய்வதால் அதிர்ஷ்டம் கூடும். தனவரவு உண்டு. மறைமுக எதிர்ப்பு அதிகமாகும். பதவி உயர்வு கிடைக்கும். தாய்வழி உறவால் நன்மை உண்டு. புகழ்ச்சி அதிகரிக்கும். நோய் நொடிகள் அகலும். சேய் நலம் கூடும். பிரச்சனைகள் குறையும். காதல் எண்ணம் நிறைவேறும். கலை ஆர்வம் கூடும். நிதி நிலைமை திருப்தி தரும். ரியல் எஸ்டேட் தொழில் லாபம் தரும். தொல்லைகள் ஒழியும். போட்டிகள் குறையும். விடாமுயற்சி அவசியம். சுபச்செலவுகள் அதிகரிக்கும். வழக்கு சாதகமாகும். மேலதிகாரியின் பாராட்டுக் கிட்டும். காரியங்களில் வெற்றிக் காண்பீர்கள். ஆலோசனை பலன் தரும். விவாக முயற்சி வெற்றி தரும். பெண்களின் கௌரவம் உயரும். வேற்று மனிதரால் லாபம் அதிகரிக்கும். வேலை வாய்ப்புக் கூடும். பாதிப்புக்கள் அகலும். தடுமாற்றம் ஏற்படும். வருத்தங்கள் மறையும். தொழில் மேன்மை தரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: குலசை முத்தாரம்மன், அதிர்ஷ்ட எண்: 4,3,1,9
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,K

# தொல்லியல் பணிப்பாளரின் பதவி விலகல் ஆக்கிரமிப்பிற்கு தீர்வாகுமா?

**- எமது யாழ்ப்பாணச் செய்தியாளர்**

அண்மையில் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கலந்துகொண்ட ஒரு கூட்டத்தில் நாட்டின் தொல்லியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தை ஒரு பிடிபிடித்தார். இதையடுத்து அவர் பதவி விலக வேண்டிய நிலை ஏற்பட்டது.

"நாட்டின் வரலாறு உங்களுக்கு தெரியவில்லை என்றால், நான் அந்த வகுப்பை உங்களுக்கு எடுக்க வேண்டிய தேவை ஏற்படும்" என்று ரணில் விக்ரமசிங்க தொல்லியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பேராசிரியர் அனுர மானதுங்கவை நோக்கி கூறியதை அடுத்து அவர் பதவி விலகும் சூழல் ஏற்பட்டது.

எனினும் நாட்டில் ஒரு நபர் பதவி விலனினால் மட்டுமே பிரச்சனைகளுக்கு தீர்வு ஏற்படாது என்று சிவசேனை அமைப்பில் தலைவர் கூறுகிறார்.

"தொல்லியல் திணைக்களத் தலைவர் பதவி விலகியதால் சிக்கல் தீராது. வவுனியாத் தொல்லியல் திணைக்களத் துணை ஆணையர் செயதிலகர் விலக வேண்டும்" என்று சிவசேனை அமைப்பின் தலைவர் மறவன்புலவு சச்சிதானந்தம் கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் சிவசேனை அமைப்பின் தலைவர் செய்தி குறிப்பு ஒன்றையும் ஊடகங்களுக்கு அனுப்பியுள்ளார். அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

"இந்து புத்த நல்லிணக்கத்தைக் கெடுத்தவர் செயதிலகர். சிவசேனையில் உள்ள நாங்கள் கூறுகிறோம். வட மாகாணத்தில் தொல்லியல் திணைக்கள அடாவடித்தனங்களுக்கு வவுனியாத் தொல்லியல் துணை ஆணையர் செயதிலகரே காரணம். சிவசேனையினர் அவரிடம் சென்று முறையிட்டோம். நல்லிணக்கத்துக்கு இடையூறாக இருக்காதீர்கள் எனக் கோரினோம்".

அவரிடம் நேரடியாகவே சென்று தாங்கள் பேசியதாகவும் மறவன்புலவு சச்சிதானந்தம் கூறுகிறார்.

"சட்டங்களுக்கு அமைய நடப்பேன். யார் சொன்னாலும் விட்டுக் கொடுக்க மாட்டேன் இந்து புத்த நல்லிணக்கம் உடைந்தாலும் கருதேன்" என்று அவர் நேரடியாகவே சிவ சேனையிடம் சொன்னார் என்று அவரது செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டின் ஜனாதிபதி உடனடியாக அவரையும் இடமாற்றியோ இடைநிறுத்தியோ விசாரணைகளைத் தொடங்க வேண்டும். இந்து புத்த நல்லிணக்க முயற்சிகளைச் சிவ சேனை பாராட்டுகிறது எனவும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

"வட மாகாணத்தைப் புத்தமயமாக்கத்திலிருந்து காப்போம். போர் முடிந்த காலத்தில் வட மாகாணத்தில் ஏறத்தாழ 500 / 600 புத்தர் சிலைகள் காணப்பட்டாலும் படை முகாம்களுள் காவல் அரண்களுள் காவல் நிலையங்களுள் என அவை இருந்தன. 14 ஆண்டுகளுக்குப் பின்பும் அந்த எண்ணிக்கை 100க்கு அண்மையாகவுள்ளது".

எனினும், புதிதாக அடாத்தாக ஆக்கிரமித்துப் புத்த விகாரங்களை கட்டுவதற்கும் புத்தர் சிலைகளை நாட்டுவதற்கும் திட்டங்களும் நடைமுறைகளும் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன என்றும் சிவசேனை அமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.

"கடந்த 14 ஆண்டுகளில் வட மாகாணத்தில் மட்டும் 25 முதல் 30 வரையான புதிய பௌத்த கட்டுமானங்கள் ஆக்கிரமிப்பாக முன்னெடுக்கப்பட்டுள்ளன. அவ்வாறு செய்யுமாறு புத்த பகவான் கோரவில்லை. பௌத்த சமயத்தில் ஈடுபாடு, அறிவு, நம்பிக்கை இல்லாதவர்களே பௌத்த ஆக்கிரமிப்பாளராக உள்ளனர்".

தர்மத்திலும் வினையிலும் சங்கத்திலும் நல்லிணக்கத்திலும் ஈடுபாடும் நம்பிக்கை உடைய பௌத்தர்கள் இலங்கையில் ஏராளமானோர் உள்ளனர். அவர்கள் வழி வடக்கின் பௌத்தமயமாக்கலைக் கட்டுக்குள் கொண்டு வர முடியும் என்கிறர் சச்சிதானந்தம்.

"அண்மைக் காலங்களில் வடக்கின் நயினாதீவு தேரர், வவுனியாவின் பன்சலை வாழ் தேரர், தெற்கில் வாழ்கின்ற அறவாணரா பௌத்த தேரர் போன்றோர் கூறிவரும் நல்லிணக்கக் கருத்துகளை வட மாகாணத்தின் பௌத்தமயமாக்கலுக்கு எதிராகக் கருவியாக்கும். திறனும் ஆளுமையுமே வடமாகாணத்தைப் புத்தமயமாக்கலில் இருந்து காக்கும்".

சிவசேனையில் உள்ளவர்கள் நயினாதீவு சென்றார்கள். பௌத்த சமயத்தவர் வாழாத இடங்களில் பௌத்த விகாரங்களை ஏன் கட்டுகிறீர்கள்? எனக் கேட்டுக்கொண்டேயிருக்கும் நயினாதீவு நாக விகாரைத் தேரரைப் பாராட்டினார்கள் எனவும் அவர்களின் செய்திக்குறிப்பு கூறுகிறது.

# MORTGAGE FINANCIAL

RESIDENTIAL COMMERCIAL INDUSTRIAL
VACANT LAND CONSTRUCTION




| 1st & 2nd Mortgages | Purchase | Refinance
| Renewal | Switches | Equity line of Credit
| Pre-approvals | Self-employed | Multi-rental properties
| New immigrants

**WE DEAL WITH ALL BANKS**

Powered By

MORTGAGE ALLIANCE
RIGHTBROKER=RIGHTMORTGAGE
Brokeerage #10330 / Licence # M15001465

Scotiabank TD Canada Trust RFA FIRST NATIONAL FINANCIAL LP

MCAP HOME TRUST EQUITABLE BANK radius financial RMG mortgages

Office: 416-660-5656
Fax: 647-351-3099
Toll: 1-844-878-2721

1585 Markham Rd, Unit #406,
Toronto, ON. M1B 2W1
canada

www.nesan.ca









26ம் ஆண்டில்...
26 years of publishing

www.uthayannews.ca

# UTHAYAN உதயன்






உதயம் 1419 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday June 16, 2023

## சென்னையில் தமிழக சுகாதாரத்துறை அமைச்சருடன் கனடா உதயன் நண்பர்கள் நடத்திய ஒரு சந்திப்பு



கனடா உதயன் வார இதழில் டாக்டர் வே. சங்கரநாராயணன் தொடராக எழுதிய பயணக் கட்டுரைகளின் நூலாக்கம் " பனி பொழியும் தேசத்தில் பத்து நாட்கள்" என்ற நூலாக கனடாவில் ரொறன்ரோ மற்றும் மொன்றியால் நகரங்களில் அண்மையில் வெளியிடப்பட்டது. அந்த நூலின் பிரதியையும் மற்றும் கனடா உதயன் வார இதழின் பிரதிகளையும் டாக்டர் வே.சங்கரநாராயணன், கனடா உதயன் சென்னை நிருபர் திரு.அருண் ஆகியோர் கடந்த 13.6.2023 அன்று தமிழக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மாண்புமிகு. திரு. மா. சுப்பிரமணியம் அவர்களிடம் வழங்கினர்.



## மானிப்பாய் இந்துக் கல்லூரி – மானிப்பாய் மகளிர் கல்லூரி பழைய மாணவர்கள் சங்கம் நடத்திய "பொங்கும் பொழுது விழா – 2023"

கனடாவில் நீண்ட காலமாக இயங்கிவரும் மானிப்பாய் இந்துக் கல்லூரி- மானிப்பாய் மகளிர் கல்லூரி இணைந்த பழைய மாணவர்கள் சங்கம் நடத்திய 30வது ஆண்டு "பொங்கும் பொழுது விழா" கடந்த 11-06-2023 அன்று மாலை ஸ்காபுறோ தமிழிசைக் கலா மன்ற கலாச்சார மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது.

பிரதம விருந்தினராக கல்லூரி பழைய மாணவரும் வர்த்தகப் பிரமுகருமான தனா மாணிக்கவாசகர் அவர்கள் கலந்து சிறப்பித்தார்.

## ஒட்டாவா மாநகரில் இரண்டு முக்கிய அமைச்சர்களோடு உரையாடி மகிழ்ந்த ரொறன்ரோ தமிழ் அன்பர்கள்





கடந்த திங்கட்கிழமையன்று கனடா ஒட்டாவா மாநகரில் கனடியப் பிரதமர் ஜஸ்ரின் ட்ரூடோ அவர்கள் பிரதான உரையாற்றிய வைபவம் ஒன்றில் ரொறன்ரோ நகரிலிருந்து தமிழ் பேசும் அன்பர்கள் சிலர் கலந்து கொண்டனர். அங்கு பல அமைச்சர்களும் பாராளுமன்ற உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்

அங்கு கலந்து கொள்ளச் சென்ற் ஸ்காபுறோ லத்திகா நகை மாளிகை உரிமையாளர் சசிகுமார் -பிரியா தம்பதி மற்றும் உதயன் லோகேந்திரலிங்கம் தம்பதி ஆகியோரோடு கனடாவின் பாதுகாப்பு அமைச்சர் அனிற்றா ஆனந்த் மற்றும் குடி-வரவு பிரஜா உரிமைகள் அமைச்சர் **Honourable Sean Fraser. MP** உரையாடி மகிழ்ந்த பின்னர் எடுத்துக் கொண்ட படங்கள் இங்கு காணப்படுகின்றன.

## இலங்கை கடல் பிரதேசம் மேலும் சீன மயமாகுமா?

### (உதயனின் சிறப்பு கட்டுரை – எமது செயதியாளர்)

இலங்கை கடலை குறிவைக்கும் சீனாவிற்கு அவல் கிடைத்தமை போன்று சீனாவிற்கு சாதகமான ஒருவர் நாராவின் **(NARA)** பணிப்பாளர் சபை உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இலங்கையின் தேசிய நீர்வள ஆய்வு மற்றும் அபிவிருத்தி முகாமையின் பணிப்பாளர் சபைக்கு கிழக்கு பல்கலைக்கழகத்தின் விலங்கியல் துறையின் பேராசிரியர் வினோபாவா கடற்றொழில் அமைச்சரால் 2023-06-12 அன்று நியமிக்கப்பட்டார்.

(உள்ளே விபரமான செய்தி 9ம் பக்கத்தில்)

## ரொறன்ரோ மாநகரின் மேயர் தேர்தல்: ஒலிவியா சோ 34 சதவீதம் விருப்பு வாக்குகள் பெற்று முன்னணியில்... அவருக்கே வெற்றி பெறும் வாய்ப்பு அதிகம் உள்ளதாக பேச்சு!

ரொறன்ரோ மாநகரின் மேயர் தேர்தல்: ஒலிவியா சோ 34 சதவீதம் விருப்பு வாக்குகள் பெற்று முன்னணியில் உள்ளதாகவும் அவருக்கே வெற்றி பெறும் வாய்ப்பு அதிகம் உள்ளது என அண்மையில் வெ-ளியான கருத்துக் கணிப்புகள் தெரிவிக்கின்றன.




இவ்வாறான வெற்றி வாய்ப்புக்கள் அதிகமுள்ள ஒலிவியா சோ அவர்களுக்கு தமிழ் மக்களின் ஆதரவை வேண்டி நடத்தப்பெற்ற மக்கள் சந்திப்பு கடந்த ஞாயிற்றுக்கிழமையன்று மாலை ஸ்காபுறோவில் உள்ள "தமிழ்ப்பூங்கா" அமைப்பின் கூட்ட மண்டபத்தில் நடைபெற்றது.

சந்திப்பு நிகழ்ச்சியை கல்விச் சபை உறுப்பினரும் அதன் உப தலைவருமான நீதன் சாண் அவர்கள் ஏற்பாடு செய்து தொகுத்து வழங்கினார். கனடா உதயன் குழுவினரும் அங்கு சமூகமளித்திருந்தனர்.

ஏராளமான தமிழ் பேசும் வாக்காளப் பெருமக்கள் அங்கு வந்திருந்து மேயர் வேட்பாளர் ஒலிவியா சோ அவர்களின் உரையைக் கேட்டு மகிழ்ந்தனர். தொடர்ந்து அவரிடம் கேள்விகளைக் கேட்டும் தங்கள் கருத்துக்களைப் பகிர்ந்து கொண்டும் தங்கள் ஆதவைத் தெரிவித்தனர்.